29 /27 °C

பக்கங்கள் 26

உதயன்

■ பதிப்பு: வன்னி
■ விலை: ரூபா 20

■ சுடர் 28
■ கதிர் 134

■ வள்ளுவர் ஆண்டு 2044
■ பங்குனி 27, செவ்வாய் 09.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

11.04.2013 வியாழக்கிழமை
மு.ப. 10 மணிதொடக்கம் ந.ப. 12 மணிவரை நடைபெறும்.

ஆலய பரிபாலன சபையினர்,
சித்திரத்தேர் திருப்பணிச் சபையினர்.

நிலம், கடல் ஆக்கிரமிப்பு முல்லை மக்கள் கொதிப்பு

நாளை ஜனாதிபதி மஹிந்தவுக்கு நிலைமையை விளக்கி மனு

மீளக்குடியமர்ந்தோருக்கான வசதிகளையும் வழங்க கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்ரல் 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் நிலப்பறிப்பு மற்றும் கடல் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் கடும் விசனமடைந்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளால் தமது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் வாழ்வாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர்கள், இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முறையிடத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆக்கிரமிப்புக்களை உடனடியாக நிறுத்துமாறு கோரி மனு ஒன்றை நாளை புதன்கிழமை அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க உள்ளனர்.

இவை குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதிக்கான மனு நாளை அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் கரைத்துறைப்பற்று கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச்

பார்க்க பக்கம் 04

முள்ளியவளையில் காணிப் பகிர்வு குறித்து ஆராய்வு

முல்லைத்தீவு,ஏப்.9

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள முள்ளியவளையில் காணியற்ற குடும்பங்களுக்குக் காணிகளைப் பகிர்ந்து அளிப்பது தொடர்பிலான ஆரம்பக்கட்ட விசாரணைகள் பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றன.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் முள்ளியவளை மத்தியில் ஆயிரத்து 600 ஏக்கர் தேக்கங்காட்டை அழித்து அதில் தனது ஆதரவாளர்களைக் குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நடவடிக்கை

பார்க்க பக்கம் 04

ரிஷாத்தின் ஆதரவாளர்கள் முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்

■ தமக்குக் காணி வழங்குமாறு கோரி

முல்லைத்தீவு,ஏப். 9

முள்ளியவளையில் தனது ஆதரவாளர்களுக்கு காணிகளை வழங்குவதற்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மேற்கொண்ட முயற்சியைத் தடுத்து மக்கள் போராட்டம் நடத்தியிருந்த நிலையில், நேற்று அமைச்சரின் ஆதரவாளர்கள் தமக்குக் காணி வழங்குமாறு கோரிப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பார்க்க பக்கம் 04

இந்திய மீனவர்கள் கைதை வேடிக்கை பார்க்க வேண்டாம்

■ மன்மோகனுக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை,ஏப்.9

தமிழகத்தில் இலங்கை அரசுக்கு எதிராகப் போராட்டம் வலுப்பெற்று வருவதாலேயே, இலங்கை இராணுவம் தமிழக மீனவர்களைக் கைது செய்கின்றது. இது இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையே தேவையற்ற பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

இவ்வாறு குற்றஞ்சாட்டி, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் தொடர்ந்தும் தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இலங்கை அரசு தனது நாட்டில் தமிழர்களை நடத்தும் விதத்துக்கு எதிராக, தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனைச் சகித்துக் கொள்ள முடியாததாலேயே இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றது.

கடந்த மாதம் 13 ஆம் திகதி இராமேஸ்வரம் மீனவர்கள் 19 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனை

பார்க்க பக்கம் 04

வடமாகாண்த்தில் தொழில் நீதிமன்றம் அமைய வேண்டியது காலத்தின் தேவை

5

இந்திய நிலைப்பாடு ஏளனத்துக்கு உரியது

6

அரசிலிருந்து மு.கா. வெளியேறினால் சிங்கள– முஸ்லிம் கலவரம் ஏற்படும்

15

மிதிவெடி அகற்றும் பணியாளர் வெடிவிபத்தில் உடல்சிதறிச் சாவு

■ முகமாலைப் பகுதியில் நேற்று விபரீதம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

முகமாலை இத்தாவில் முன்னரங்கப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற தவறுதலான வெடி விபத்தில் 'ஹலோரஸ்ட்' மிதி வெடி அகற்றும் நிறுவனப் பணியாளர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிச் சாவடைந்தார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி - மாயவனூரைச் சேர்ந்த கோணேசமுதலி முருகவேல் (வயது-43)என்பவரே உயிரிழந்தவராவார்.

முகமாலை இத்தாவில் தமிழீழ விடு

பரர்க்க பக்கம் 04

இந்திய எம்.பிக்கள் பயணம் திட்டமிட்டபடி

■ இன்று மாலை யாழ். வருவர்

யாழ்ப்பாணம்,ஏப். 09

இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய விசேட உயர்மட்டத் தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு இன்று செவ்வாய்க்கிழமை மாலை வருகை தரவுள்ளனர். அவர்கள் இங்குள்ள சிவில் சமூகத்தினருடன்முக்கியமான கலந்துரையாடலில்

பார்க்க பக்கம் 04

ஆஸி. முகாமில் 25 இலங்கையர் உண்ணாவிரதம்

கன்பரா,ஏப். 9

ஆஸ்திரேலியாவில் அகதித் தஞ்சம் அளிக்கப்பட்டுப் பல ஆண்டுகள் கடந்தும் தம்மை முகாமிலிருந்து வெளியில் விடாது அரசு தடுத்துவைத்துள்ளதாகக் கூறும்

பார்க்க பக்கம் 04

ஈழத் தமிழர்கள் விடயத்தில் இரட்டை வேடம் வேண்டாம்

■ பாரத மனித உரிமை பாதுகாப்பு கழகம் மத்திய அரசுக்கு எதிராகப் போராட்டம்

சென்னை,ஏப்.9

ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைக் காக்க நடவடிக்கை எடுக்கக் கோரியும்,இதில் மத்திய அரசின் இரட்டை வேடத்தைக் கண்டித்தும் பாரத மனித உரிமை பாதுகாப்புக் கழகம் நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் நேற்று பெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இதில் ஆயிரக்கணக்கானோர்



பார்க்க பக்கம் 04

புத்தளம்-மணல்குன்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மாணவிகள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர். இதன்போது அவர்கள் 'உதயன்' அலுவலகத்துக்கும் வருகை தந்து பார்வையிட்டனர். மாணவிகளுக்கான ஒரு தொகுதி நூல்களை 'உதயன்' நிர்வாக இயக்குநரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் பாடசாலை அதிபரிடம் வழங்கினார். இந்தக் குழுவினர் யாழ். குடாநாட்டின் பல இடங்களுக்கும் பயணம் மேற்கொண்டனர்.

கந்தர்மடத்தில் புத்தாண்டுச் 'சந்தை'

யாழ்ப்பாணம்,ஏப்.9

தமிழ்-சிங்கள புதுவருடத்தினை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகம் நடத்தும் 'வாழ்வின் எழுச்சி' புத்தாண்டுச் சந்தை இன்றும், நாளையும் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெறவுள்ள ஆரம்பநிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஒ-400)

ஐ.நா. ஆயுத வர்த்தக வாக்கெடுப்பை புறக்கணித்த இலங்கை மீது விமர்சனம்

சீனா, இந்தியா, இந்தோனேசியா, ரஷ்யா, குவைத், கட்டார் ஆகிய நாடுகளும் வாக்கெடுப்பை புறக்கணித்தன

ஜெனிவா,ஏப்.9

அனைத்துலக ரீதியில் ஆயுத வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கில் ஐ.நா பொதுச் சபையில் கொண்டு வரப்பட்ட மிகவும் முக்கியமான- ஆயுத வர்த்தக உடன்பாட்டின் மீதான வாக்கெடுப்பை இலங்கை புறக்கணித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

154 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டுக்கு எதிராக ஈரான், வடகொரியா, சிரியா ஆகிய நாடுகள் வாக்களித்திருந்தன.

இந்த வாக்கெடுப்பின் போது வாக்களிக்காமல் புறக்கணித்த 23 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

சீனா, இந்தியா, இந்தோனேசியா, ரஷ்யா, குவைத், கட்டார் ஆகிய நாடுகளும் வாக்கெடுப்பை புறக்கணித்தன.

இந்த நிலையில், கொழும்பில் தற்போதைய ஆட்சியைக் கடுமையாக விமர்சித்து வரும் ''நியூயோர்க் ரைம்ஸ்'', இந்த வாக்கெடுப்பைப் புறக்கணித்த 23 நாடுகளில் பல, அண்மைக் காலத்தில் மனித உரிமைகள் விடயத்தில் மோசமான பதிவுகளைக் கொண்டிருப்பவை என்று விமர்சித்துள்ளது.

பஹ்ரெய்ன், மியான்மர், இலங்கை போன்ற நாடுகளைச் சுட்டிக்காட்டி, இது ''மோசமான கூட்டணி'' என்றும் ''நியூயோர்க் ரைம்ஸ்'' விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

தூத்துக்குடி - கொழும்பு இடையே மீண்டும் பயணிகள் கப்பல்

தூத்துக்குடி,ஏப்.9

தூத்துக்குடி-கொழும்பு இடையே சிறிய பயணிகள் கப்பலைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் நடராஜன் தகவல் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகப் பொறுப்புக்கழகத்தின் சார்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தூத்துக்குடி-கொழும்பு இடையே ஆரம்பிக்கப்பட்ட பயணிகள் கப்பல் போக்கு வரத்து போதிய வருமானம் இல்லாத காரணத்தினால் நிறுத்தப்பட்டது. அதாவது ஆயிரம் பயணிகள் பயணிக்கும் வகையிலான தனியார் கப்பல் சேவையில் ஈடுபட்டபோது பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. இந்நிலையில் தூத்துக்குடி - கொழும்பு இடையே மீண்டும் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது குறித்து கப்பல் துறையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இதில் 150 முதல் 250 எண்ணிக்கையிலான பயணிகள் செல்லும் வகையில் சிறிய ரகக் கப்பல்களை இயக்குவது குறித்துத் திட்ட மிடப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டுக்குள் இதற்கான அனுமதி பெறப்பட்டுத் தூத்துக்குடி-கொழும்பு இடையே மீண்டும் பயணிகள் கப்பல் இயக்கப்படும் - என்றார் அவர். (த)

இலங்கைத் துணைத் தூதுவருக்கு விஸா வழங்க இந்தியா பின்னடிப்பு

சென்னை,ஏப்.9

சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதித் தூதுவருக்கு இந்தியா விஸா வழங்காமல் இழுத்தடித்து வருவதாகக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தில் பிரதித் தூதுவராக நியமிக்கப்பட்ட சப்ருல்லா கான், தனது கடமைகளைப் பொறுப் பேற்பதற்காகக் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இராஜதந்திர விஸா கோரி விண்ணப்பித்தார்.

அவருக்கு இன்னமும் இந்தியா விஸா வழங்காமல் இழுத்தடித்த வருவதால், அவரால் தனது பணிகளைப் பொறுப்பேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைப் பிரதித் தூதுவர் சப்ருல்லா கானின் நியமனத்தை இந்திய அரசு இன்னமும் அங்கீகரிக்காததாலேயே அவருக்கு விஸா வழங் கப்படவில்லை.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் பிரேந்தர் சிங், புதுடில்லியில் இருந்தே அனுமதி வரவேண்டியுள்ளது என்று மட்டும் தெரிவித்துள்ளார்.

வேறு எது பற்றியும் தன்னால் கருத்து வெளியிட முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, புதுடில்லி இவ்வாறு ஒரு நியமனத்தை உறுதிப்படுத்த இவ்வளவு கால இழுத்தடிப்புச் செய்வது இதுவே முதல்முறை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சப்ருல்லா கானுக்கு இந்தியா இன்னமும் விஸா வழங்கவில்லை என்பதை இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம உறுதிப்படுத்தியுள்ளார். (த)

இலங்கைக் கனிய வளங்கள் சீனாவுக்குத் தாரை வார்ப்பு

சீனாவுக்கான இலங்கையின் கனிம ஏற்றுமதியும் கடந்த ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது

கொழும்பு,ஏப்.9

கனிம அகழ்வு மற்றும் கனிம மணல், கிராபைற் ஏற்றுமதியில் முதலீடுகளை மேற்கொள்ள சீனாவுக்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.

கனிம வளங்கள் துறையை விருத்தி செய்ய இலங்கை ஆர்வமுடன் இருப்பதாகவும், சீனாவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும், இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியாங்காவோவிடம் இலங்கை வர்த்தக, கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்தத் துறையில் சீன நிறுவனங்கள் இலங்கையுடன் கணிசமாக இணைந்திருப்பதாகவும், இங்கு உற்பத்தி செய்யப்படும் கிராபைற், கிறிஸ்டல், இல்மனைற் என்பன அனைத்துலக தரத்தில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சீனாவுக்கான இலங்கையின் கனிம ஏற்றுமதியும் கடந்த ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது.

2008 இல் 4.47 மில்லியன் டொலர்களாக இருந்த சீனாவுக்கான கனிம ஏற்றுமதி 2012 இல் 15.14 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கையின் கனிம ஏற்றுமதி 42.7 மல்லியன் டொலர்களாகும். இது 2011ஆம் ஆண்டை விட 30 சதவீதம் அதிகமாகும்.

இதில் கனிம மணல் 65 சதவீதமும், சிலிக்கா மற்றும் குவாட்ஸ் 20 வீதமும், கிராபைற் 10 வீதமும், மைக்கா 3 வீதமும், ஏனைய இயற்கை மணல் 2 வீதமும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் கடந்த ஆண்டு 2.676 மில்லியன் டொலர்களாக அதிகரித்தது. இது முன்னைய ஆண்டைவிட 19.5 வீத அதிகரிப்பாகும்.

சீனாவில் இருந்து 2.56 பில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களை இறக்குமதி செய்யும் இலங்கை, அந்த நாட்டுக்கு 108 மில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது.

இலங்கையில் இருந்து இன்னும் அதிகமான பொருள்கள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதை வரவேற்பதாக சீனத் தூதுவர் வூ தெரிவித்துள்ளார்.

அத்துடன் கனிம அகழ்வில் முதலீட்டை விரிவாக்குவதன் மூலம் தமது நாட்டு உற்பத்தித் தரத்தை மேலும் அதிகரிக்க முடியும் என்றும் சீனத் தூதுவர் மேலும் கூறியுள்ளார். (த)

இலங்கையின் பொருள்களை புறக்கணிக்குமாறு பிரசாரம்

சென்னை,ஏப் 09

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டங்கள் தமிழகத்தில் தொடர்ந்து வலுவாகி வரும் நிலையில் இலங்கைப் பொருள்களைப் புறக்கணிக்கும் கையெழுத்து வேட்டை மற்றும் விழிப்புணர்வுப் பிரசாரம் என்பன தமிழர் பண்பாட்டு நடுவம் சார்பில் சென்னை மரீனா கடற்கரையில் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளன.

இது குறித்து அந்த அமைப்பு தெரிவித்துள்ளதாவது:-

இந்திய அரசு இலங்கைக்கு வரிச் சலுகை அளித்த பின்பு, இலங்கையில் இருந்து நிறையப் பொருள்கள் தமிழகச் சந்தைக்கு வந்த வண்ணம் உள்ளன. இதனால் இலங்கைப் பொருளாதாரம் பலம் பெறும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு இலங்கையின் பொருளாதாரம் பலம் பெற்றால், இலங்கை அரசு மேலும் ஆயுதம் வாங்கிக் குவிக்க அந்தப் பணத்தைச் செலவிடும். மேலும் இலங்கை இராணுவத்துக்கு இந்தப் பணம் பயன்படும்.

ஏற்கனவே தமிழர் பகுதிகளில் இலங்கை இராணுவம் நிரந்தர முகாமிட்டுத் தமிழர்களுக்குக் கொடும் துன்பம் இழைக்கிறது. இந்த நிலையில் இலங்கையின் ஏற்றுமதி பெருகினால் அது இலங்கைக்கு நன்மையைப் பயக்குமே அன்றித் தமிழர்களுக்கு நன்மை பயக்காது.

அதனால் இலங்கையின் ஏற்றுமதி சந்தையை முடக்குவது தான் இலங்கையின் மீதான தமிழக அரசின் பொருளாதாரத் தடையை மேலும் வலுப்படுத்தும் என்ற அடிப்படையில், இலங்கையின் உற்பத்தி பொருள்களைத் தமிழகத் தமிழர்கள் யாரும் வாங்க வேண்டாம் என்ற பரப்புரையில் தமிழர் பண்பாட்டு நடுவம் ஈடுபட்டுள்ளது-என்றுள்ளது. (த)

சாரதிகள் வாகனங்களை வேகமாகச்செலுத்தலாம்

கூறுகிறார் ஜனாதிபதி

- கொழும்பு,ஏப்.9

இலங்கையிலுள்ள வீதிகள் 'காப்பெற்' போடப்பட்டு உயர்தரத்தில் தற்போது இருப்பதனால் சாரதிகள் கொஞ்சம் வேகமாக வாகனங்களைச் செலுத்த முடியும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் 'காப்பெற்' போடப்பட்ட வீதியை நேற்றுத் திங்கட்கிழமை திறந்து வைத்த பின்னர் கல்கமுவ பகுதியில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (த)

பாண்டியன்குளம் – நட்டாங்கண்டல் வீதிகளைப் புனரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 9

முல்லைத்தீவு பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளுக்கான பிரதான வீதிகள் இன்று வரை புனரமைக்கப்படாமையினால் இந்தப் பகுதிகளில் வாழும் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது நாளாந்தக் கடமைகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாண்டியன்குளம், கரும்புள்ளியான், நட்டாங்கண்டல், பனங்காமம் உள்ளிட்ட சுமார் 14 வரையான கிராமங்களுக்கான பிரதான போக்குவரத்துப் பாதையாகக் காணப்படும் பாலியாற்றினூடான யோகபுரம் கரும்புள்ளியான் வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது.

இதே போன்று பாலியாற்றினூடான சிவபுரம் பாண்டியன்குளம் வீதியும் எந்தவித புனரமைப்புக்களும் இன்றிக் காணப்படுகின்றது.

இதனால் பாண்டியன்குளம், செல்வபுரம், கரும்புள்ளியான், ஒட்டாங்கண்டல், பாட்டாளிபுரம், பனங்காமம், வீரப்பிராயன்குளம், சிராட்டிகுளம், மூன்றுமுறிப்பு, மடத்துவிளான்குளம், பூவரசன்குளம், பொன்னகர் உள்ளிட்ட சுமார் 14 வரையான கிராமங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்துக்களில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

எனவே குறித்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரியுள்ளனர். (ஐ-6)

வன்னியில் புதிய கட்டடங்களுக்கு இரண்டு தடவைகள் திறப்பு விழா

நிர்வாக தரப்பும் அரசியல்வாதிகளும் ஏட்டிக்கு போட்டி

கிளிநொச்சி, ஏப். 9

வன்னிப் பிரதேசத்தில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்படும் கட்டடங்கள் இரண்டுதடவை விழாக்கோலம் காண்கின்றன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நிர்வாக தரப்பினர் கட்டடங்களை வைபவ ரீதியாக திறந்து செயற்பாடுகளை ஆரம்பித்து வைக்கும் அதேவேளை நேரம் கிடைக்கும் நேரங்களில் வரும் அரசியல் வாதிகளுக்காக மீளவும் அந்தக் கட்டடங்கள் விழாக் கோலம் பூணுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான இரு நிகழ்வுகள் அண்மையில் முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் நடைபெற்றுள்ளன.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபையின் புதிய அலுவலகத்துக்கான கட்டடத் தொகுதி 'என்றிப்' திட்டத்தின் கீழ் சுமார் ஐந்து மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம், 14 ஆம் திகதி துணுக்காய் பிரதேச சபையின் தலைவர் வீ.இராசரத்தினத்தால் திறந்து வைக்கப்பட்டது.

இதே கட்டடத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தப் பகுதிக்கு வருகை தந்த அரச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் உமைஸ் பாரூக் திறந்து வைத்து சாதனை படைத்தார்.

இதுபோன்று துணுக்காய் பிரதேச சபையின் கீழ் உள்ள ஐயன்கன்குளம் பொதுச் சந்தைக்கான புதிய கட்டடம் நெல்சிப் திட்டத்தின் கீழ் 23 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு சுமார் எட்டு மாதங்களின் பின்னர் குறித்த சந்தையும் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளை துணுக்காய் பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க் கட்சி உறுப்பினர்களும் பகிஷ்கரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

மரக்கன்றுகள் மலிவு விலையில்

வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் புதுவருடச் சந்தையில் பயன்தரு மரக்கன்றுகள் மலிவு விலையில் விற்கப்படுவதால் அநேகமான வர்கள் அவற்றை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

நல்லின மாங்கன்று 180 ரூபா, பலா50ரூபா, தேசிக்கன்று 50 ரூபா, கமுகு 50 ரூபா, கறிவேப்பிலை 50 ரூபா, எக்ஸ்சோரா 50 ரூபா,மாதுளைக் கன்று 50 ரூபா, தவசி முருங்கை 50 ரூபா,சண்டி 50 ரூபா, வெற்றிலைகன்று 60 ரூபா, என்ற விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். புத்தாண்டை முன்னிட்டு நடைபெறும் இந்த விற் பனைச் சந்தை தினமும் 10 மணித்தியாலங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-402)

வீடு கட்டுமானப் பொருள்களை பெற்றுக் கொள்வதற்கு சிரமங்கள்

இராணுவத்தின் தலையீடே காரணம்

முல்லைத்தீவு, ஏப். 9

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பகுதியில் இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகள் தமக்குத் தேவையான மணல் மற்றும் இதரகட்டுமானப் பொருள்கள் பெறுவதில் இராணுவ தலையீடு காணப்படுவதால் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பகுதியில் தற்போது இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் வீடுகளின் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் கட்டுமானப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மணல் அள்ளுவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றும் பறங்கியாற்றுக்குச் செல்லும்போது ஆற்றைக் கடந்து சுமார் மூன்று கீலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இராணுவ முகாமில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனால் ஏற்படும் கால தாமதங்களால் மணலைக் கொண்டு செல்வதற்கான வழியனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்படும் நேரங்களில் காலதாமதம் ஏற்படு கிறது.

இந்த அனுமதிப்பத்திர விதிகளை மீறி மணலைக் கொண்டு சென்றதான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக வேண்டியிருப்பதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - ஏனைய கட்டுமானப் பொருள்களான கற்கள், சிமெந்து என்பவற்றைக்கொண்டு செல்லும் போது சிவபுரம் பாலத்தடி மற்றும் வன்னிவிளாங்குளம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள இராணுவக் காவலரண்களில் உள்ள படையினரால் மேற்கொள்ளப்படும் இராணுவப் பதிவுகள், சோதனை நடவடிக்கைகளால் சிரமங்களை எதிர்கொள்ளவதாக மேலும் தெரிவிக்கின்றனர். (எ-6)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட கிளையினரால் அம்பாள் நகர், அம்பாள் முன்பள்ளிக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையினரால் உபகரணங்கள் கையளிக்கப்படுவதையும், முன்பள்ளியில் சிறார்கள் கற்றலில் ஈடுபட்டுள்ளதையும் இங்கு காணலாம். (ஐ-405)

துஷ்பிரயோகங்களை தடுக்க சிறுவர் பாதுகாப்புக் குழு

கிளிநொச்சியில் உருவானது

கிளிநொச்சி, ஏப். 9

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கிராமங்களில் இடம்பெறக்கூடிய சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் வகையில் கிராம ரீதியாக சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் நிறுவப்பட்டு அதனூடாக சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் வகையிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக கிளிநொச்சி முரசுமோட்டை பிரதேசத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் வகையில் சிறுவர் பாதுகாப்பு குழு அமைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி முதல்வர் தி.வரதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய சிறுவர் பாதுகாப்புக் குழு தெரிவு செய்யப்பட்டது.

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் துஷ்பிரயோகங்களைக்கட்டுப் படுத்த.

இதன்போது கிராம அலுவலர், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்புப் பிரிவு அதிகாரி மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கி புதிய குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு, பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீள் இணைத்தல், சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் துஷ்பிரயோக செயற்பாடுகளை இனங்கண்டு அவற்றை கட்டுப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

வலய மட்ட தமிழ்த் தினப் போட்டி

கனகராயன்குளம் ம.வி. முன்னிலையில்

மாங்குளம்,ஏப்.9

வவுனியா வடக்கு கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாண்வர்கள் அதி கூடிய இடங்களைப் பெற்றுத் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதன்படி பேச்சுப் போட்டியில் **பிரிவு 2** இல் முதலாம் இடத்தை புகழ் நிலாவும் **பிரிவு 3** இல் முதலாம் இடத்தை உ. அஜந்தாவும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

பிரிவு 5 இல் தமிழியற் கட்டுரை வரைதலும், இலக்கியம் நயத்தலும் போட்டியில் ச.கீர்த்திகா முதலாம் இடத்தையும் குறு நாடக ஆக்கப் போட்டியில் ச.சோபனா முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.திறந்த தமிழறிவு வினா விடை குழுப் போட்டியிலும் கனகராயன்குளம் ம.வி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

பிரிவு 1 பேச்சுப் போட்டியில் எஸ். சபீசன் **பிரிவு 2** இல் செ. சுவர்ணன், **பிரிவு 4**இல் பாவோதன், பி.தரன்சிகா ஆகியோர் இரண்டாம் இடம் பெற்றனர்.

கட்டுரை வரைதலும் இலக்கியம் நயத்தலும் போட்டியில் த.தனுஜன், சிறுகதை ஆக்கத்தில் அ.லுஜித்நாதன் **பிரிவு 5** இல் சிறுகதை ஆக்கப்போட்டியில் ந.அர்ச்சனா **பிரிவு 3** இல் தனி இசைப் போட்டியில் இ.அனுசாயினி ஆகியோர் இரண்டாம் இடத்தை பெற்றனர்.

பிரிவு 1 இல் வாசிப்புப் போட்டியில் சி.சினோஜா, **பிரிவு 4** இல் பேச்சுப் போட்டியில் சி.சியாந்தன் ஆகியோர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ஐ-422)

கிளிநொச்சி, முல்லைத்தீவில் இருந்து 'கபே' அமைப்புக்கு

காணாமற் போனோர் தொடர்பில் ஆயிரத்துக்கும் அதிக முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 9

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலும் காணாமற் போனோர் தொடர்பாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனோர் தொடர்பான விவரங்களைத் திரட்ட ஆரம்பித்த போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

காணமற் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் பாதிப்படைந்ததாகவே அவர்களது முறைப்பாடுகள் உள்ளதாக அவர்மேலும் தெரிவித்தார்.

கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் மட்டும் வடக்கு மற்றும் தென் மாகாணங்களில் 1,200 பேருக்கு பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களைக் 'கபே' அமைப்பு பெற்றுக்கொடுத்துள்ளது -எனவும் தெரிவித்தார். (ஐ-14)

சர்வதேசத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை பாரதூரமானது

அரசுக்கு ஐ.தே.க. எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.9

அரசியல் தீர்வு விடயம் உட்பட ஜெனிவா தீர்மானத்தின் பரிந்துரைகளை அமுலாக்க இலங்கை அரசு நம்பத்தகுந்த பொறிமுறை யொன்றை விரைவில் வகுக்காவிட்டால், அனைத்துலக சமூகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை பாரதூரமானதாக அமையும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் அரசுக்கு அக்கறையில்லை என அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

''நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரி சுகள் அமுல்படுத்தப்படும் என்றும், 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தினூடாக அதி காரங்கள் பகிரப்படும் என்றும் இலங்கை அரசு சர்வதேச சமூகத்திடம் உறுதியளித்துள் ளது. இந்த உறுதிமொழிகளை அரசு மீற முடியாது.

''13ஆவது திருத்தத்தைமுழுமையாக அமுலாக்க அரசு முன்வருமானால், ஐக்கிய தேசியக் கட்சியினராகிய நாம் அதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவே உள்ளோம். இதனையடுத்து அரசு தொடர்ந் தும் காலத்தை இழுத்தடிக்குமானால், சர்வ தேச சமூகம் அடுத்தகட்ட நடவடிக்கையில் இறங்கும். அது அரசுக்குப் பாரதூரமானதாக அமையும். எனவே, அரசு சிந்தித்துச் செயற் படவேண்டிய தருணம் வந்துள்ளது'' - என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரி வித்தார்.

சுதந்திரம் இல்லையெனில் ஹக்கீம் சவூதி செல்லட்டும்

பொதுபலசேனா ஆவேசம்

கொழும்பு, ஏப்.9

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் இங்கு சுதந்திரமாகத்தான் வாழ்ந்துகொண்டிருக்கி றார்கள். நாட்டில் முஸ்லிம்களுக்கு சமாதான மும், சுதந்திரமும் இல்லையெனில் அமைச் சர் ஹக்கீம் உள்ளிட்ட முஸ்லிம் தலைவர்கள் சவூதி அரேபியாவுக்குச் செல்லவேண்டிய துதான் என்று பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானா சார தேரர் தெரிவித்தார்.

பொது பலசேனா உள்ளிட்ட எந்தவொரு பௌத்த அமைப்பாலும் முஸ்லிம் மக்களுக்குப் பிரச்சினை ஏற்படுத்தப்பட வில்லை. முஸ்லிம் அரசியல்வாதிகளும், அடிப்படைவாதிகளுமே அப்பாவி முஸ்லிம் மக்களுக்கு இல்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றனர் என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

பேரினவாத சிங்கள தேசிய சக்திகள் திட்டமிட்ட முறையில் முஸ்லிம்களை இலக் குவைத்து முஸ்லிம்களின் அடையாளங் களில் கை வைக்க நடவடிக்கைகளை மேற் கொள்கின்றன என நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ள கருத்து குறித்து கருத்துத் தெரிவித்தபோதே ஞானா சார தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித் ததாவது:-

இலங்கையில் முஸ்லிம்கள் நிம்மதியாக வும், சுதந்திரமாகவும் வாழ்கின்றனர். அவர் களுக்கு இங்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இருப்பினும், சிங்கள, பௌத்த பேரினவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகளை மேற்கொண்டு வருகின் றனர் என முஸ்லிம் தலைவர்கள் கூறுகின்ற னர்.

எமது அமைப்பு உள்ளிட்ட எந்த பௌத்த அமைப்புகளும் முஸ்லிம்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு எதி ராகத்தான் நாம் செயற்படுகின்றோம். இந்த அடிப்படைவாதிகளிடமிருந்து முஸ்லிம் மக்களைக் காப்பாற்றத்தான் நாம் போராடு கின்றோம்.

ஆனால், நாம்தான் நாட்டின் பிரிவினை வாதத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம் என முஸ்லிம் அரசியல்வாதிகளும், அடிப்படை வாதிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர். இதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தவும், முஸ் லிம்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத் தவும் முஸ்லிம் அரசியல்வாதிகளும், அடிப் படைவாதிகளுமே முயற்சிக்கின்றனர்.

முஸ்லிம்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படு மாயின், இதற்கு அவர்களே பொறுப்பு. நாட் டில் நடக்காதவற்றைக் கூறி முஸ்லிம்களை எமக்கெதிராக அணி திரட்ட முயற்சிக்கின் றனர். இலங்கையில் முஸ்லிம்களுக்குச் சுதந் திரம் இல்லை என அமைச்சர் ஹக்கீம் உள்ளிட்ட முஸ்லிம் தலைவர்கள் கூறுவார்களாயின், அவர்கள் சவூதி அரேபியாவுக்குச் செல்ல வேண்டியதுதான் - என்றார் ஞானாசார தேரர்.

முள்ளியவளை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மேற்கொண்டிருந்தார்.

இதற்கு அந்தப் பகுதியில் வசிக்கும் காணியற்ற குடும்பங்கள் எதிர்ப்புத் தெரி வித்து போராட்டம் நடத்தியிருந்தனர். தமக் குக் காணிகளை பகிர்ந்து அளிக்குமாறு அவர்கள் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை 6 கிரா மங்களைச் சேர்ந்த மக்களுக்கு காணி வழங்குவது தொடர்பிலான விசாரணை இடம் பெற்றது.

சுமார் 800 பேர் வரை இந்த விசாரணை யில் கலந்து கொண்டனர். இவர்களுக்கு விரைவில் காணிகள் வழங்குவதற்குரிய நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரி விக்கப்படுகின்றது. (த-5)

ரிஷாத்தின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுக் காலை நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட் டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான பதாகைகளையும் 'உதயன்' பத்திரிகைக்கு எதிரான பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

முள்ளியவளை மத்தியில் ஆயிரத்து 600 ஏக்கர் தேக்கங்காட்டை அழித்து அதில் தனது ஆதரவாளர்களைக் குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கடந்த 6 ஆம் திகதி சனிக் கிழமை நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதனை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில், புத்தளத்திலிருந்து ஏற்றிவரப்பட்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாகக் கவ னஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'ரி.என்.ஏ இனவாதம், மதவாதம் பேசி மீண்டும் முஸ்லிம்களை முல்லையிலிருந்து விரட்டியடிக்க சதி செய்யாதே', 'தமிழன் எமது சகோதரன், முஸ்லிம் எமது உறவுகள், முல்லை எமது தாயகம்' போன்ற பதாகை களை இவர்கள் தாங்கியிருந்தனர்.

கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட் டோர் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரி டம் மனு ஒன்றைக் கொடுத்ததுடன் கலைந்து சென்றனர். (த-5-6)

ஈழத்தமிழர்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கலந்துகொண்டனர்.

ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையை காக் கவும், அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட வும், மனிதநேயமின்றி - ஈவு இரக்கமன்றி அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதியைப் போர்க்குற்ற வாளி என அறிவிக்கக் கோரியும் இந்தக் கண் டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு மாநில மக்களின் உணர்வுகளுக் கும், உரிமைக்கும் மதிப்பு கொடுக்காமல் இரட்டை வேடம் போட்டு மறைமுகமாக இலங்கையை ஆதரிக்கும் மத்திய அரசை வன்மையாகக் கண்டிப்பதாக ஆர்ப்பாட்டத் தில் கலந்துகொண்டவர்கள் கோஷம் எழுப்பினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தால அந்தப் பகுதி யில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. பொலி ஸாரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

(த)

மிதிவெடி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தலைப் புலிகளின் இரண்டாவது முன்னரங்க மண் அணைப் பகுதியில் மேற்படி ஊழியர் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

இந்தப் பகுதியில் புல் அடர்த்தியாகக் காணப்படுவதுடன் குப்பைகளும் காணப் பட்டுள்ளன. அப்போது கண்ணிவெடிய கற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக் கும் போது புதைக்கப்பட்ட வாகன எதிர்ப்பு மிதிவெடி (பார் மைன்ஸ்) தவறுதலாக தொடு கைக்கு உட்பட்டுள்ளது.

இதனால் குறித்த வாகன எதிர்ப்பு மிதி வெடி வெடித்துள்ளது. சம்பவ இடத்திலேயே குறித்த கண்ணிவெடியகற்றும் பணியாளர் உடல் சிதறி உயிரிழந்தார்.

பின்னர் சம்பவ இடத்துக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் க.சிவபால சுப்பிரமணியம் நேரடியாகச் சென்று பார்வை யிட்ட பின்னர் சடலம் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.(த-5-6-9-12)

இந்தியா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விட 5 தமிழக மீனவர்கள் ஒரு வருடத்துக்கு மேலாக இலங்கையில் சிறை வைக்கப் பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் கடந்த 6 ஆம் திகதி 30 மீனவர்கள், கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைதுகள் தமிழக மீனவர்களி டையே பதற்றமான சூழ்நிலையையும், மிகுந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. அயல்நாட்டின் நட்புறவற்ற செயல்களால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படு வதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் ஆட்சேபகரமான அணுகுமுறையே தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலுக்குக் காரணம்.

இந்த நடவடிக்கை தொடராமல், கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றுள்ளது. (த-5)

இந்தியா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஈடுபடவுள்ளனர்.

ஈழத்தமிழர்கள் தொடர்பில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் அழுத்தம் காரணமாக இந்திய மத்திய அரசின் இலங்கை தொடர் பான அணுகுமுறையில் மாற்றம் ஏற் பட்டுள்ளது.

இதனால் ஈழத்தமிழர்களின் தற்போதைய நிலை தொடர்பில் அறிவதற்காக இந்திய அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கள் மற்றும் உயர்மட்டத் தூதுக்குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இலங்கை வந்தடைவர்.

அகில இந்திய திரிணாமூல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சௌகத்தா ரோய், பாரதீய ஜனதாகட்சி நாடாளுமன்ற உறுப் பினர்களான பிரகாசு ஜவதேகர், அனுராக்தா கூர், பகுஜன் சமாஜ்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தனஞ்ஜய்சிங், இந்தியத் தேசியக் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்தீப் தீக்ஷித், மதுகௌட்ஜக்சு ஆகியோரும்,

இந்திய உயர்மட்ட தூதுக் குழுவைச் சேர்ந்த இந்திய அபிவிருத்தி கூட்டு நிர்வா கம், வெளிவிவகார அமைச்சின் சிறப்புச் செயலர் எஸ்.இராகவன், இந்திய நிதி ஆலோ சகரும், வெளிவிவகார அமைச்சின் சிறப்புச் செயலருமான பமல் ஜீங்கா ஆகியோரும் இன்று யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளனர்.

இந்தக் குழுவினர் இன்று மாலை 6 மணி யளவில் இந்தியத் துணைத் தூதரகத்தில் யாழ்.சிவில் சமூகத்தினர் மற்றும் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாட வுள்ளனர். (த-5)

ஆஸி.முகாமில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

25 இலங்கையர்கள் உட்பட 28 பேர் மெல் பேர்ண் இடைக்கால முகாமில் காலவரை யறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் பாதுகாப்புக்கு அச்சு றுத்தல் ஏற்படுத்தக் கூடியவர்கள் என்ற அடிப்படையில் இங்கு இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அகதி அந்தஸ்துக் கிடைத்த பின்னரும் மெல்பேர்ண் முகாமில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் இரண்டு பர்மியர்களும் குவைத் நாட்டவர் ஒருவரும் 25 இலங்கையர்களும் இரண்டு நாள்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாக பி.பி. சியிடம் பேசிய இலங்கைத் தமிழர் ஒருவர் கூறினார்.

2009ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா சென்ற தனக்கு அகதி அந்தஸ்து கிடைத்து மூன்றரை ஆண்டுகள் ஆகியும் தடுப்பு முகாமிலிருந்து நாட்டுக்குள் செல்ல அனும திக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

தமது பெற்றோர், மனைவி- பிள்ளைக ளைப் பிரிந்து பல ஆண்டுகளான நிலையில் தமது குடும்பத்தினர் பெரும் மனவருத் தத்தில் இருப்பதாகவும் தம்மால் ஆஸ்திரே லிய மக்களுக்கு எந்தவிதமான அச்சுறுத்த லும் ஏற்படாது என்றும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

உரிய விசாரணை நடைமுறைகளின்றி இவர்களைத் தடுத்துவைத்திருக்க முடியாது என்று நீதிமன்றம் கூறியுள்ள பின்னணியில், மீளாய்வு நடைமுறையொன்று தொடங்கி யுள்ள போதிலும் அதில் தமக்கு நம்பிக்கை இல்லையென்று அவர் கூறினார்.

இதேவேளை, ஆஸ்திரேலியாவில் அக தித் தஞ்சம் கொடுக்கப்பட்ட பின்னரும் நாட்டு மக்களின் பாதுகாப்புக் கருதி இவ் வாறான 56 பேர் வரை விடுவிக்கப்படாமல் இருப்பதாக ஆஸ்திரேலிய பாதுகாப்புப் புல னாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதம், சமூக வன்முறைகள், நாச காரச் சதிவேலைகள் போன்றவற்றைத் தூண் டலாம் என்ற அடிப்படையிலேயே இவ்வா றான தனிநபர்களை நாட்டின் பாதுகாப்புக் கருதி சமூகத்துடன் கலக்கவிடாது தடுத்து வைத்துள்ளதாக அந்த அமைப்பு கூறியுள் ளது.

கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருப்பதாக உறுதியாக அடையாளம் காணப் பட்ட பின்னரே இப்படியான அறிவுறுத்தல் களை தாம் வழங்குவதாகவும் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையொன்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

நிலம், கடல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சங்கங்களின் சமாசத் தலைவர் க.ரவிகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததா வது:-

போரின் போது இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியேற்றப்பட்ட முல்லைத்தீவு கரை யோரப் பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சி னைகள் தொடர்பில் கரைத்துறைப்பற்று பிர தேசத்தின் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமா சத்தின் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுக்கு மனு ஒன்று சமர்ப்பிக்கப்படவுள் ளது. முல்லைத்தீவு அரச அதிபர் ஊடாக நாளை புதன்கிழமை இந்த மனு சமர்ப்பிக் கப்படும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வீடமைப்பு வசதிகள் முழுமையாகச் செய்து கொடுக் கப்பட வேண்டும். இந்திய வீடமைப்புத் திட் டத்தில் இந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்களுக்கு உதவி கிடைக்க வில்லை. இதனால் மீளக்குடியேறிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள னர். அதேவேளையில் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக குறைந்த வட்டியி லான கடனுதவி அல்லது நிவாரணம் வழங் கப்பட வேண்டும்.

கொக்கிளாய், நாயாறு, வட்டுவாகல், நந்திக்கடல் போன்ற பகுதிகளில் நன்னீர் மீன்பிடி இடம்பெறுகின்றது. அத்துமீறி வரும் தென்னிலங்கை மீனவர்கள் இங்கு தடை செய்யப்பட்ட வழிகளில் மீன்பிடியில் ஈடு படுவதால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படு கின்றது. இவர்களுக்குப் படையினர் தரப்பிலிருந்தும் உதவிகள் கிடைக்கின்றன. இவற்றைத் தடைசெய்வதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நாம் பாரம்பரியமாக விவசாயம் செய்து வந்த கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, குமுழமுனை, செம் மலை, அளம்பில் பகுதிகளிலுள்ள நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ள. அல்லது பாதுகாப் பைக் காரணம்காட்டி மக்கள் செல்லமுடியாத வையாகவுள்ளன. இதனால், எமது விவசாய நிலங்களை நாம் பெருமளவுக்கு இழந்துள் ளோம். வாழ்வாதாரப் பிரச்சினையும் இத னால் உருவாகியுள்ளது - என்றார். (த)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

இடிந்து விழுந்த வீட்டுக்குள் அழுது புலம்பும் நிலை தேவையா...?

உலகம் இலங்கைக்கு உள்ளேயே இருக்கிறது என்ற ரீதியில், நினைப்பில் எமது நாட்டு அரசாங்கம் செயற்படுகிறது. ஆனால் இலங்கை உலகத்துக்குள்ளேயே உள்ளது என்ற உண்மை நிலையைப் புரிந்து கொண்டு அரசு செயற்பட வேண்டும்-

இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர் வண.தம்பர அமிலதேரர். அவர் பல்கலைக்கழகம் ஒன்றின் மூத்த விரிவுரையாளரும் ஆவார்.

இப்போது கோவில்கள், பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப் படுகின்றன. பொது பல சேனா அமைப்பு, பூசகர்கள், மத குருமார்கள் மீது தாக்குதல்களை நடத்துகிறது. அறந்தலாவ பிக்குகள் கொலையுடன் தொடர்புள்ள சூத்திரதாரிகளும் இன்று அரசில் அங்கம் வகிக்கின்றனர்-

போரின் பின்னர் வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட தமிழ் மக்கள் இன்னமும் குடிசைகளிலேயே வாழ்கின்றார்கள். போர் நடைபெற்று நான்கு வருடங்கள் கழியும் நிலையிலும் அவர்கள் நரகத்திலேயே வாழ்கின்றனர்-

நெடுஞ்சாலைகளைப் புனரமைப்பதன் மூலம் போரினால் பாதிக் கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்க்கை மேம்பட்டுவிடுமா?-

அரசாங்கத்தின் பலவகையான தான்தோன்றித்தனமான செயற்பாடு களையும் நாட்டின் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான குரோத நடவடிக்கைகளுக்கு துணைபோகும் போக்கையும் மேற்கண்டவாறு புட்டுக் காட்டியுள்ளார் வண.தம்பர அமிலதேரர்.

தேரர் தொட்டுக்காட்டியுள்ள பின்வரும் அம்சங்களும் அவற்றுக்கான பின்னணிகளும் கவனத்தில் கொள்ளத்தக்கவை:

★ எங்கள் நாட்டில் பல மொழி பேசும் மக்கள், பல மதங்களை அனுஷ் டிக்கும் மக்கள் வாழ்கின்றனர். சிங்கள மக்கள் பெரும்பான்மையினர் என்பதால், ஏனைய மக்கள் மீது ஏறிமிதிக்கலாகாது. நற்பண்புகள் கொண்ட மூத்த சகோதரன் போன்று, அவர்களையும் அணைத்துச் செயற் பட வேண்டும்.

★ 1983 ஆம் ஆண்டில் விழுந்த குழிக்குள் மீண்டும் விழுந்துவிடக் கூடாது. இனவாதத்துக்குப் பதில் இனவாதம் அல்ல. நெல்லை விதைத்தவன் ஒருபோதும் பலாக்காயைப் பறிக்க முடியாது.

★ நாட்டின் எண்ணெய் வளம் மற்றும் பெறுமதிமிக்க நிலங்கள் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் தாரை வார்க்கப்பட்டுள்ளன.

★ அரசாங்கத்துக்கு ஆதரவான தரப்புக்கள் உண்மையான எதிரிக ளுடன் சமராடாது, தாம் போலியான எதிரிகளை உருவாக்கிக் கொண்டு அவர்களுடன் மோதுகின்றன.

★ இலங்கை அரசு தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு ஜெனி வாவுடன் மோதாமல், ஆக்கபூர்வமான பெறுமதிமிக்க ராஜதந்திரக் கொள்கைகளைக் கையாண்டு செயற்பட வேண்டும்.

★ நகத்தால் அகற்றிவிடக் கூடியதாகவிருந்த நாட்டின் பிரச்சினைகள், கோடரியால் வெட்ட வேண்டிய அளவுக்கு வளர்ந்து விட்டன.

வண.தம்பர அமிலதேரர் வெளியிட்டுள்ள கருத்துக்களையும், அவர் சுட்டிக்காட்டியுள்ள அரசின்- அதன் எடுபிடிகளின்-செயற்பாடுகளையும் வெறும் அரச எதிர்ப்பு வாதங்கள் என்று குறியிட்டுப் புறந்தள்ளி விட முடியாது.

பௌத்த மத மக்களிடையே தமது குருமார்களை பெரிதும் மதிக்கும், சிறப்பிடம் வழங்கும் பண்பு, இந்நாட்டில் மிக மேலோங்கிப் பரவியுள்ளது. அதனைத் தென்னிலங்கையின் அரசியல் கட்சிகள் தமக்கு ஆதரவு தேடும் 'சக்தி'யாக பயன்படுத்துவதும் வழக்கமாகிவிட்டது. அந்நிலையைத் தமக்குப் பெரும் மூலதனமாக மாற்றிக் கொண்டு பௌத்த மதகுருமார் அரசியலில் தமது செல்வாக்கைப் பலப்படுத்துவதும் ஒரு வாய்ப்பாடாகி விட்டது.

அத்தகைய 'பாரம்பரிய'த்துக்குப் புறநிலை நின்று வண.தம்பர அமில தேரர் உண்மையை, யதார்த்தத்தை வெளிப்படுத்தியுள்ளமை வரவேற் கத்தக்கதாகும்.

நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களை, தமது சகோதரர்களாக மதித்து அவர்களுக்குச் சேர வேண்டிய மொழி, மத, அரசியல் ஆட்சி உரிமைகளை வழங்கும் தாராள மனப்பக்குவத்தை வளர்க்கும் பொறுப்பு தென்னிலங்கையின் நிகழ்கால, வருங்கால பௌத்த குருமார்களுக்கு உண்டு.

நாட்டில் வாழும் இனங்கள், சகோதரத்துவ உணர்வுடனும், சம உரிமைகளுடனும் வாழ்வதற்கு வழி செய்ய வேண்டிய பொறுப்பு எவ்வாறு அரசியல் தலைவர்களுக்கு உண்டோ, அதே பொறுப்புணர்வு மதத் தலைவர்களுக்கும் சமமாக உண்டு என்பது தப்பன்று. இதனை மனதார உணர்ந்து, அரசியல் தலைவர்களை அத்திசை நாடிச் செயற்படுவதற்கு பௌத்த மத குருமார் உந்துசக்தியாக விளங்க வேண்டும்.

அத்தகைய ஒரு புதிய நிலை சாத்தியமில்லை என்று எழுந்தமானத் தில் தோன்றினாலும் அத்தகு நிலையை நீக்குவதிலேயே நாட்டின் எதிர்காலமும் அதன் சுபீட்சமும் தங்கியுள்ளன. தொடர்ந்தும் அதனை உதாசீனம் செய்யும் போக்குத் தொடரின்-

ஒரு கட்டத்தில் ஏனைய பலமுள்ள தேசங்களிளை "வால்பிடிக்க" வேண்டிய சூழ்நிலை உருவாகலாம்.

பிறர் தலையீடு அல்லது தயவில்லாத நிலையில் நமது நாடு சுயாதீனமும் சுயாதிபத்தியமும் இல்லாது சுணங்கிப் போகவே நேரிடும்.

வெள்ளம் வரும்முன் அணைகட்டிக் கொள்வதே புத்திசாலித்தனம். இல்லையேல் இடிந்துவிழுந்த வீட்டிற்குள் இருந்து அழுதுபுலம்ப நேரிடும்.

இதனைத் தென்னிலங்கையின் அரசியல் தலைவர்களும், அவர்களுக்கு உரு ஏற்றி வரும் பௌத்த குருமார்களும் உணர்வது எப்போது...?

சமுர்த்தி வங்கிகளில் புத்தாண்டை முன்னிட்டு அதிக தொகை பணத்தை வைப்பிலிட அறிவுறுத்து

பயனாளிகள் பெரும் நெருக்கடி நிலையில்

யாழ்ப்பாணம், ஏப். 9

சித்திரைப் புத்தாண்டை முன் னிட்டு சமுர்த்தி வங்கிகளில் அதிக தொகையான பணத்தை வைப்புச் செய்ய வேண்டும் என்று உயர் அதிகாரிகளின் கட்டளை களுக்கு அமைவாகச் சமுர்த்திப் பயனாளிகளிடம் பணம் சேர்க்கும் செயற்பாடுகளைச் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மேற் கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இதனால் தாம் பெரும் சிர மங்களை எதிர்கொண்டு வருகின் றனர் என்று பாதிக்கப்பட்ட பொது மக்கள் தரப்பில் இருந்து முறைப் பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

உரிய பணத் தொகையை வைப்பிலிடாவிட்டால் சமுர்த்தி உதவி வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுவதால் சமுர்த்திப் பயனாளிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

இதே போன்று கடந்த மாதங்க ளுக்கான முத்திரைகளுக்கான பணமும் சமுர்த்தி வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுச் சமுர்த்திப் பய னாளிகளுக்கு வழங்கப்படுவதும் நடைமுறையாகும்.

தற்போது இந்தப் பணத்தைப் பெறச் செல்லும் சமுர்த்திப் பயனா ளிகளுக்கு உரிய பணத்தைக் கூட மீள வழங்காது இழுத்தடித்து வரு வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வறுமையில் வாடுவதாகக் கூறி சமுர்த்தி உதவிகளை அரசு வழங் கினாலும் கூட அதனையே முழு மையாக அனுபவிக்க விடாது அரச ஊழியர்கள் தடுத்து வருவது மனித உரிமை மீறல் நடவடிக்கை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த புகைத்தல் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டும் கூட சமுர்த் திப் பயனாளிகள் இத்தகைய நெரு க்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

இது சம்பந்தமாக யாழ். மாவட்ட சமுர்த்தி உயர் அதிகாரிகள் கவனத் துக்கு கொண்டு வரப்பட்டது. எனி னும் உரிய நடவடிக்கைகள் எடுக் கப்படாமையும் சுட்டிக்காட்டப் பட்டது. (ம-86)

குறிஞ்சித்தமிழ் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 9

சப்பிரகமுவ பல்கலைக்கழகத் தின் தமிழ்க் கலாசார மன்றம் வருடாந்தம் வெளியிட்டு வரும் குறிஞ்சித்தமிழ் சஞ்சிகை இம் முறை யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் வைத்து வெளி யிடப்படவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரியின் சுப்பிரமணிய மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நூல் ஆய்வை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள வுள்ள சப்பிரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ் வரன் நிகழ்த்துவார். (ம)

வடமாகாணத்தில் தொழில் நீதிமன்றம்; கோரிக்கைக்கு பயன் இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 9

வடமாகாணத்தில் தொழிலா ளர்களின் வசதி கருதி தொழில் நீதி மன்றம் அமைப்பது தற்போதைய நிலையில் மிகவும் முக்கியமா னது என்று தொழில் திணைக்க ளத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

வடக்கில் முன்னர் தொழில் நீதிமன்றங்கள் செயற்பட்டன. பின்னர் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக அவற்றின் செயற்பாடுகள் யாவும் முடங்கின.

தற்போதைய நிலையில் தொழி லாளர்களின் நலன் கருதி இந்த தொழில் நீதிமன்றங்கள் மீளவும் செயற்படுத்தப்படுவது முக்கிய தேவை யாகும்.

இந்த தொழில் நீதிமன்றங்கள் செயற்படுவதன் மூலம் தொழிலா ளர்களின் பலதரப்பட்ட பிரச்சி னைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

இந்தத் தொழில் நீதிமன்றங் களை மீளவும் ஆரம்பிப்பது குறித்து ஏற்கனவே நீதி அமைச்சர் ரவூப் ஹக் கீமுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் நீதிமன்றங் களை அமைப்பதற்கு உரிய நட வடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் ஏற்கனவே தொழில் திணைக் களத்துக்கு உறுதியளித்தார்.

ஆனால், இதுவரைக்கும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் மீண்டும் நிதி அமைச்சுக்கு இது சம்பந்தமான கடிதம் ஒன்றை அனுப்பி வைக்க வும் தொழில் திணைக்களம் நட வடிக்கையை மேற்கொண்டுள் ளது.- என்று மேலும் தெரிவிக்கப் பட்டது. (ம-17)

கணினிப் பயிற்சி வகுப்பை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

வடமராட்சி, ஏப். 9

அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ள கணினி மூலம் கணினிப் பயிற்சி வகுப்பை ஆரம்பிக்குமாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் கரவெட்டிப் பிரதேசசபை உறுப் பினர் சி.இரத்தினேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினர் இரத்தி னேஸ்வரனின் சிபார்சின் பேரில் கணினிப் பயிற்சி வழங்கவென மனோகரா சனசமூக நிலையத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராசாவால் பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு கணினி ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

கணினி கிடைத்து ஆறுமாதங் களுக்கு மேலாகியும் மாணவர்க ளுக்கு கணினி அறிவைப் பெற் றுக்கொள்வதற்கு கணினிப் பயிற்சி வகுப்பு இன்னமும் ஆரம்பிக்கப் படவில்லை.

இது குறித்து பயிற்சியைப் பெற்றுக் கொள்ள விரும்பும் மாணவர்கள் பெரிதும் விசனம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கணினிப் பயிற்சியை ஆரம்பிக்க உரிய ஏற் பாடுகளைச் செய்ய ஆவன செய்யு மாறு மாணவர்கள் பிரதேச சபை உறுப்பினர்களிடம் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளனர். (ம-8)

யாழ். நகரில் களவுகளைத் தடுக்க விசேட பொலிஸ் பிரிவு கடமையில்

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ். நகரில் இடம்பெறும் சிறுசிறு களவுச் சம்பவங்களைத் தடுப்பதற்கு விசேட பொலிஸ் பிரிவினர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தாவது:-

யாழ். நகரின் பிரதான வீதிகளில் அண்மைக் கால மாக வீதிகளில் தனியாகச் செல்லும் பெண்களின் தங்க நகைகளைப் பறித்தெடுக்கும் சம்பவங்கள் அதி கரித்துள்ளன. அத்துடன் சிறு குற்றச் செயல்கள் குறித்த முறைப்பாடுகளும் அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளன. இதனைவிட யாழ். நகரில் சனநட மாட்டம் உள்ள பகுதிகளில் கைப்பைகளை பறித் தெடுக்கும் சம்பவங்க ளும் அதிகரித்துள்ளன.

இவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் விசேட பொலிஸ் பிரிவினர் கண்காணிப்பு நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளனர்.

விசேட பொலிஸ் பிரிவின் கண்காணிப்பை யடுத்து இவ்வாறான சிறுசிறு குற்றங்கள் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட் டுள்ளன என்றும் தெரிவித்தார். (ம-14)

நாளை தொடக்கம் வெள்ளிவரை வடமராட்சியில் புத்தாண்டுச் சந்தை

பருத்தித்துறை, கரவெட்டி சமுர்த்திப் பிரிவுகள் புத் தாண்டுச் சந்தைகளை நாளை புதன்கிழமை தொடக்கம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை நடத்தவுள்ளன.

கரவெட்டி சமுர்த்திப் பிரிவினர் ஏற்பாடு செய்த புத்தாண்டுச் சந்தை 10 ஆம் திகதி புதன்கிழமையும் மறுநாள் 11 ஆம் திகதி வியாழக்கிழமையும் நெல்லி யடி பொதுச் சந்தைக்கு முன்பாக உள்ள மைதானத்தில் இடம்பெறும். பருத்தித்துறை சமுர்த்திப் பிரிவு ஏற்பாடு செய்த புத்தாண்டுச் சந்தை 11 ஆம் திகதி வியாழக் கிழமையும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் கிராமக் கோடு புலோலி ப.நோ.கூ. சங்கத்துக்கு அருகில் உள்ள இடத்தில் இடம்பெறும்.

இந்தச் சந்தைகளில் உள்நாட்டு உற்பத்திப் பொருள் கள், தைத்த ஆடைகள் உள்ளிட்ட பொருள்கள் சந்தைப் படுத்தப்படும். பருத்தித்துறை பிரிவுச் சந்தையில் சதொச நிறுவனம் வழங்கும் ஆயிரத்து 500 ரூபா பொருள் கள் கொண்ட பொதி ஒன்று ஆயிரம் ரூபாவுக்கு விற் பனை செய்யப்படவுள்ளது.

சதொசவின் பொருள் பொதியில் 3 கிலோ நாட்டரிசி, 3 கிலோ சம்பா அரிசி, ஒரு கிலோ அரிசி மா, சீனி, ரின்மீன் உள்ளிட்ட பொருள்கள் அடங்கியுள்ளன என்று தெரிவிக் கப்படுகின்றது. புத்தாண்டுச் சந்தைகளை அந்தந்தச் சமுர்த்தி பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்திச் சங்கங்கள், வங்கிகள், மகாசங்கங்கள் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-8)

புதிய ஆட்சிமுறை இந்தியாவுக்கு தேவை

முன்னாள் தளபதி வி.கே.சிங்

புதுடில்லி, ஏப்.9

சாதி அல்லது மதத்துக்கு அப்பாற்பட்டுச் செயற்படுவது இராணுவமே. இராணுவத்தின் ஒரு பிரிவைப் போல அரசு செயற்பட வேண்டும். அப்படிப்பட்ட அமைப்பு முறையே, நம் நாட்டுக்குத் தேவை - இவ் வாறு தெரிவித்துள்ளார் இந் திய முன்னாள் இராணுவத் தளபதி வி.கே.சிங்.

ஊழலுக்கு எதிராகப் போராடி வரும் சமூக சேவகர் அன்னா ஹசாரே, ஜன்தந்திரா என்ற யாத்திரையை நடத்தி வருகிறார். அந்த யாத்திரையின் ஒரு பகுதியாக அரியானா மாநிலம் ஜிந்த் நகரில் பொதுக் கூட்டமொன்று இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே வி.கே.சிங் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்-

"நாட்டில் ஊழலும், வறுமையும் அதிகரித்து விட்டன. இவற்றை ஒழித்துக்கட்ட உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. தங்களது அரசியல் ஆதாயத்துக்காக, சாதி மற்றும் மத அடிப்படையில், மக்களை பல்வேறு அரசியல் கட்சிகளும் பிளவுபடுத்தி உள்ளன.

சாதி அல்லது மதத்திற்கு அப்பாற்பட்டு செயல்படுவது இராணுவமே. இராணுவத்தின் ஒரு பிரிவைப் போல அரசு செயற்பட வேண்டும். அப்படிப்பட்ட அமைப்பு முறையே, நம் நாட்டுக்குத் தேவை.

ஊழல்வாதிகள் மற்றும் சமூக விரோத சக்திகளுக்கு எதிராக, மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும்.- என்று தெரிவித்தார். (ற)

இந்தியாவின் பம்மாத்து

நட்பு நாடாம் இலங்கை சரத்குமார் காட்டம்

சென்னை, ஏப்.9

உலக நாடுகள் இலங்கையை விமர்சித்து வரும் நிலையில் இந்தியா இலங்கையை நட்பு நாடு என்று கூறி வருவது ஒரு பம்மாத்து என்று தெரிவித்துள்ளார். சமத்துவ மக்கள் கட்சித் தலைவரும், நடிகர் சங்கத் தலைவருமான சரத்குமார்.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு சாடியுள்ளார் சரத்குமார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"உலக நாடுகள் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்பாக விமர்சித்து வரும் நிலையில், இந்தியா இலங்கையை நட்பு நாடு என்று போற்றி வருவது ஏளனத்துக்குரியது.

இலங்கைக் கடற்படையால் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 19 பேர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இந்த நிலையில் மீண்டும் 51 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்காத இந்திய மத்திய அரசு இலங்கையை நட்பு நாடு என்று கூறிப் போற்றி வருவது ஏளனத்துக்குரியது.

கச்சதீவை இலங்கையிடமிருந்து திரும்ப மீட்பது மட்டுமே தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்பதை மத்திய அரசு உணர வேண்டும். மத்திய அரசு இனியும் மௌனம் சாதிக்காமல் தமிழக மீனவர்களை விடுவிக்கவும், இனியும் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காமல் தடுக்கவும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

அக்னி – 2 வெற்றிகரமாக சோதனை

பாலாசோர், ஏப்.9

ஆயிரம் கிலோ எடை அணு ஆயுதத்துடன் 2 ஆயிரம் கிலோ மீற்றர் பாய்ந்து சென்று இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் அக்னி 2 ஏவுகணை, ஒடிசா மாநிலம் பாலாசோரில் நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகப் பரிசோதனை செய்யப்பட்டது.

இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் குறிப்பிட்ட தரை இலக்கை பாய்ந்து சென்று எளிதில் தாக்கும் அக்னி-2 ஏவுகணையைத் தயாரித்துள்ளது.

அதிநவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட இந்த ஏவுகணை ஒடிசா மாநிலம் வீலர் ஐலேண்டில் வைத்து நேற்றுமுன்தினம் மு.ப. 10.30 மணிக்கு வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

இறையாண்மை மீது நடத்தப்படும் தாக்குதல்

ராமதாஸ் சீற்றம்

சென்னை, ஏப்.9

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் இந்திய இறையாண்மை மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு ஒப்பானது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய இந்திய மத்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தெரிவித்துள்ளார் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"கச்சதீவுப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 30 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். அதே போல் வங்கக்கடலின் இன்னொரு பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த காரைக்கால் மீனவர்கள் 26 பேரும் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய நாடுகளின் இறையாண்மையை மதிக்கின் றோம் என்று பேசி வரும் மத்திய அரசு, இந்தியர்களான தமிழக மீனவர்களை இலங்கைப் படைகள் சுட்டுக்கொல்வதும், கைது செய்வதும் இந்தியாவின் இறையாண்மை மீது நடத்தப்படும் தாக்குதல் என்பதை புரிந்துகொள்ள மறுக்கிறது.

தமிழக மீனவர்களுக்கு எதிரான சிங்களப்படையினரின் தாக்குதல் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது. இதுவரை 600க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்பட்ட போதிலும், ஆயிரக்கணக்கான மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள போதிலும், இதையெல்லாம் தடுக்க மத்திய, மாநில அரசுகள் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அனைத்துக் கட்சிக் குழுவுடன் புதுடில்லி சென்று பிரதமரைச் சந்தித்து பேச வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

ராஜீவ் இடைத்தரகர் விக்கிலீக்ஸ் அதிரடி

புதுடில்லி, ஏப்.9

இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்க முன்னர் ராஜீவ் காந்தி சுவீடன் நிறுவனங்களுக்கான இடைத்தரகராகச் செயற்பட்டார் என்று விக்கிலீக்ஸ் அதிரடியாகத் தகவல் வெளியிட்டுள்ளது.

விக்கிலீக்ஸ் தகவல்களின்படி 1970 ஆம் ஆண்டுப் பகுதியில் சுவீடன் நிறுவனமான சாப்-ஸ்கானியா, இந்தியாவுக்கு போர் விமானங்களை விற்பனை செய்யமுன் வந்தது. அதில் ராஜீவ் காந்தி இடைத்தரகராகச் செயல்பட்டிருக்கிறார். அப்போது அவர் விமானியாக இருந்தார். இந்தியாவின் போர் விமான கொள் முதலில் அவரது குடும்பத்தினருக்கு தொடர்பிருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தின் 1975ஆம் ஆண்டு ஆவணத்தில், சுவீடன் தூதரக அதிகாரி ஒருவர் இந்தியன் ஏயார் லைன்ஸ் விமானியாகப் பணி புரிந்து வந்த ராஜீவ் காந்தி 'தொழில் முனைவோர்' என்ற பெயரில் விமான நிறுவனங்களுடன் தொடர்பில் இருந்தார் என்று கூறியுள்ளதாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும் விக்கிலீக்ஸ் தகவல் வெளி யிட்டுள்ளது.

எனினும் இதை நிராகரித்திருக்கும் காங்கிரஸ் கட்சி, விக்கிலீக்ஸின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகும் என்று கூறியுள்ளது.

இதேவேளை 1989 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக, ராஜீவ் காந்தியின் போபர்ஸ் பீரங்கிப் பேர ஊழல் தொடர்பான தகவல்கள் நாளிதழ்களில் வெளியானதை அடுத்து தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியைச் சந்திக்க நேரிட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

இலங்கைப் பொருள்களை புறக்கணிப்போம்

இல்ங்கைப் பொருள்களை புறக்கணிப்போம் என்ற கையெழுத்து இயக்கம் மற்றும் விழிப்புணர்வுப் பிரசாரம் தமிழர் பண்பாட்டு நடுவம் சார்பில் நேற்முன்தினம் சென்னை மெரீனா கடற்கரையில் நடந்தது.

இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையை முடக்குவதுதான் இலங்கையின் மீதான தமிழக அரசின் பொருளாதாரத் தடை எனும் தீர்மானத்தை மேலும் வலுப்படுத்தும் என்ற அடிப்படையில், இலங்கையின் உற்பத்திப் பொருள்களை தமிழக தமிழர்கள் யாரும் வாங்க வேண்டாம் என்ற பரப்புரையில் தமிழர் பண்பாட்டு நடுவம் ஈடுபட்டுள்ளது.

"தமிழர்களுக்கு மட்டும் இந்தச் செய்தி சேரவில்லை. இந்தியாவில் இருக்கும் பிற மாநில மக்களுக்கும் இந்தச் செய்தியை கொண்டு சேர்த்தோம். பிற மாநிலத்தவர்களும் இனப் படுகொலை செய்த இலங்கையைத் தாம் புறக்கணிப்பதாக உறுதி அளித்தனர்.

இலங்கையின் சேவைகள் மற்றும் பொருள்களை புறக்கணிப் போம் என்று அவர்கள் படி வத்தில் கையெழுத்திட்டு நமக்கு உறுதி அளித்தனர். மக்கள் அனை வரும் ஆர்வமுடன் கையெழுத்துப் பரப்புரைக்கு ஆதரவு அளித்தனர் - என்று தெரிவித் துள்ளது பிரசாரத்தை மேற் கொண்ட அமைப்பு. (ற)

நேர்மையானவர் அத்வானி

புகழ்கிறார் முலாயம் சிங்

புதுடில்லி, ஏப்.9

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானிக்கு, மீண்டும் பாராட்டு தெரிவித்துள்ள சமாஜ்வாடி கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ் 'அவர் மிகவும் நேர்மையானவர்' என்று புகழ்ந்துள்ளார்.

சமாஜ்வாடி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவ், பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானியை மிகவும் உயர்ந்த தலைவர் என்று ஏற்கனவே பாராட்டுத் தெரிவித்திருந்தார். இப்போது அவர் மீண்டும் எல்.கே.அத்வானியைப் பாராட்டியுள்ளார்.

''எல்.கே.அத்வானி மிகவும் நேர்மையான தலைவர். நாடு பிரிவினையைச் சந்தித்தபோது அவர் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார். அப்போது மிகவும் கடினமான வாழ்க்கையை அவர் வாழ்ந்திருக்கிறார். எல்.கே.அத்வானியை நேர்மையானவர் என்று நான் கூறினால் மக்கள் கோபப்படுவார்கள்.

அவர் உண்மையானவர், நேர்மையானவர் தான். ஆனால் அவர் சார்ந்திருக்கும் கட்சி அவரை அவமரியாதை செய்கிறது. அவர் பாராட்டப்பட வேண்டியவர்.

இன்றைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் வெளியுறவுக் கொள்கை மிகவும் பலவீனமாக இருக்கிறது.

சீன-இந்தியா போரின் போது மற்ற நாடுகளுடன் சேர்ந்து அண்டை நாடான இலங்கையும் இந்தியாவுக்கு ஆதரவாக இருந்தது. ஆனால் இப்போது அந்த நாடு நம்மை பிரிந்து சென்றுவிட்டது. மக்களிடம் அரசியல் விழிப்புணர்வு அதிகம் இருக்கிறது. அதனால் தான் அவர்கள் விரல் நுனியில் அரசுகளை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். - இவ்வாறு முலாயம் சிங் யாதவ் கூறியுள்ளார். (ற)

சட்டசபையில் போராடிய தி.மு.கவினர் சபைக் காவலர்களால் வெளியேற்றம்

சென்னை, ஏப்.9

சட்ட சபையில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டமையால் சபைக் காவலர்களால் வலுக் கட்டாயமான அகற்றப்பட்டனர். சபாநாயகரின் அறிவுறுத்தலை மதிக்காத காரணத்தால் அவர்களுக்கு இருநாள்களுக்கு சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சட்டசபையில் நேற்று கர்நாடக அரசு பெண்ணையாற்று நீரைத் திருப்பும் நடவடிக்கை பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அப்போது பேசிய பொதுப் பணித்துறை அமைச்சர் கே.வி. ராமலிங்கம், தமிழ்நாட்டின் உரிமையை தி.மு.க. விட்டுக்கொடுத்து விட்டது. இழந்த உரிமையை மீட்பதில் நமது முதல்வருக்கு நிகராக யாரும் இல்லை - என்று தனது உரையில் குறிப்பிட்டார். அதற்கு எதிர்ப்புத் தெரி வித்த தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் தனது கருத்துக்குப் போதிய விளக்கம் தரவேண்டும் என்று கோஷமிட்டனர்.

எனினும் சபாநாயகர் விளக்கமளிப்பதற்கான சந்தர்ப்பம் இதுவல்ல எனத் தெரிவித்து வாய்ப்பு வழங்க மறுத்து விட்டார். அதையடுத்து சபாநாயகரின் முன் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர் தி.மு.கவினர்.

அதையடுத்து அவர்களை சபைப் பாதுகாவலர்களைக் கொண்டு வெளியேற்றிய சபாநாயகர், அவர்களுக்கு இரு நாள் சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது தடையையும் விதித்தார். (ற)

மரண அறிவித்தல்

திருமதி நாகம்மா சிவசம்பு

நவாலி கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகம்மா சிவசம்பு நேற்று (08.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு சிவசம்புவின் அன்பு மனைவியும் கந்தசாமி, பத்மாவதி, சிறீஸ்கந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் கமலாம்பிகை, கிருஷ்ணசாமி, கிருஷ்ணவேணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் கௌரி, காலஞ்சென்றவர்களான தயாளன், கவிதா மற்றும் நிஷாந்தினி, பாமினி (பிரான்ஸ்), சுபீகரன் (லண்டன்) பிரதீபா, ஷாருகாந் (ஜேர்மனி), மோவன்ஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டுஸ்யந்தி, சுகிர்தன், தர்ஷினி, சஞ்சீவன், அபர்ணா, பவிதா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2013) புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி கிழக்கு, மானிப்பாய். (35826) (23-16,14) தகவல்: மகன்.

மரண அறிவித்தல்

தம்பையா கோவிந்தபிள்ளை

(இளைப்பாறிய புகையிரத உத்தியோகத்தர்)

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை (கந்தசாமி கோயிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கோவிந்தபிள்ளை நேற்று (08.04.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் இரத்தினத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், செல்லம்மா, தங்கம்மா மற்றும் பொன்னம்மா(கனடா) ஆகியோரின் சகோதரரும் சோமசுந்தரம் தவமணியின் சிறிய தகப்பனும் பத்மகாந்தன், பிரியா, கிரிஷன், நிலானி(ஜேர்மனி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2013) செவ்வாய்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று கோப்பாய் கந்தன் காடு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொன்னையா சோமசுந்தரம்
(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்
ப.நோ.கூட்டுறவு சங்கம்,நீர்வேலி)

கந்தசாமி கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

புத்தாண்டில்
NDB Real Saver மூலம்
உங்கள் இல்லமெங்கும் புது ஒளி



NDB REAL SAVER
සැබෑ ඉතිරිකරන්නාට
உண்மையாக சேமிப்போருக்கு

ஏப்ரல் 14ம் திகதி கொடுக்கல் வாங்கலுக்கான சுப நேரத்தில், இருமடங்கு வட்டி தரும் NDB Real Saver சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள். கணக்கினை ஆரம்பிக்கும் அனைவருக்கும் CFL மின்குமிழ்களும், சேமிக்க சில வழிகளைச் சொல்லும் சிறு புத்தகமும் இலவசமாக வழங்கப்படும்.

கொடுக்கல் வாங்கலுக்கான சுப நேரமான
காலை 9.00 - நண்பகல் 12.00 வரை NDB கிளை திறந்திருக்கும்.

அழையுங்கள் 011 244 8888

AA (lka) Fitch Rating -
நெதலன்ட் டிவலப்மென்ட் பேங்க் பிரல்சி ஆளது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

NDB வங்கி

PHOENIX OBM

Cargills food City
புது வருட குறைந்த விலை
சவால்

எந்தவொரு சுப்பர் மார்க்கெட்டும் எமது விலைகளைச் சமப்படுத்த முடியாது.
எம்மை விடக் குறைவாக இருப்பின், நாமும் தருவோம் அதே விலைக்கே!

சம்பத் வங்கி கிறடிட் காட்களுக்கு மொத்த பில் தொகையில்
10% தள்ளுபடி
ஏப்ரல் 13 வரை
SampathCards

வெள்ளைச் சீனி — இப்போது 1Kg ரூ. 97/-
சிவப்பு பருப்பு — இப்போது 1Kg ரூ. 144/-
சம்பா அரிசி — இப்போது 1Kg ரூ. 65/-
வெள்ளை பச்சை அரிசி — இப்போது 1Kg ரூ. 50/-
சிவப்பு பச்சை அரிசி — இப்போது 1Kg ரூ. 50/-
இச்சலுகை ஏப்ரல் 5 முதல் 12 வரை மட்டுமே.

அங்கர் பால்மா — சேமிப்பு ரூ. 15/- இப்போது ரூ. 310/- 400g
அங்கர் பால்மா — சேமிப்பு ரூ. 40/- இப்போது ரூ. 770/- 1Kg
நெஸ்டொமோல்ட் — சேமிப்பு ரூ. 10/- இப்போது ரூ. 245/- 400g
அஸ்ட்ரா பற் ஸ்பிரெட் — சேமிப்பு ரூ. 15/- இப்போது ரூ. 150/- 250g
செவன்ஸ்டார் கோதுமை மா — சேமிப்பு ரூ. 12/- இப்போது ரூ. 95/- 1Kg
காகில்ஸ் மெகரல் — சேமிப்பு ரூ. 17/- இப்போது ரூ. 168/- 400g
இச்சலுகை ஏப்ரல் 5 முதல் 30 வரை மட்டுமே.

பெரிய வெங்காயம்
கரட்
தக்காளி
கோவா
25% தள்ளுபடி
இச்சலுகை ஏப்ரல் 5 முதல் 12 வரை மட்டுமே.

Cargills food City
வீடு செல்லும் போது

திருத்தாளர் உரிமை — குறைக்கப்படும் கொள்வனவுக்கு மறைவாக உரிமை



லக்ஷ்மி இஞ்சினியரிங்
Lukshmee Engineering

கணினி பழுதுபார்த்தல், வலையமைப்பு (Computer Repair, Net works, Computer Services)

மின்இணைப்பு வேலைகள் (House & Industrial wiring)

மீளச்சுற்றுதல் (Rewinding Works)
பான், மோட்டார், கிறைண்டர், டைனமோ, ராண்ஸ்போமர்.

குழாய் பொருத்துதல் (Plumbing Works)

மின் ஒட்டுதல், கேற் ,கிறில், றஸ், றோலிங் சட்டர் வேலைகள் (Welding. Gate, Grill , Truss, Roller Shuter works)

கடைச்சல் வேலைகள் (Lathe Works)

ஒவ்செற் அச்சு இயந்திரங்கள் பழுது பார்த்தலும் அதற்கான கடைச்சல் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

பேப்பர் கட்டர் கத்தி தீட்டிக்கொடுக்கப்படும். (இயந்திரம் மூலம்)

வாகன திருத்த வேலை (Vehicle Repair)
டீசல், பெற்றோல் வாகனங்கள் மற்றும், ஜெனறேற்றர்கள் திருத்தப்படும்.

105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

TP.021 567 0256

ஜெனரேட்டர் விற்பனை

லண்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
3HP. 15KAV லிஸ்கர் ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு.

(35828)(8.16.14) தொடர்பு: 0775771710

மணல் விற்பனைக்கு

தொடர்பு:- 0755110767

கட்டட வேலைகளுக்கான பூநகரி மணல் குறைவான விலையில் நேரடியாக டிப்பர்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

மரண அறிவித்தல்கள்

திருமதி தவமணி கணேசபிள்ளை

காரைநகர் அண்டவயலைப் பிறப்பிடமாகவும், சின்னாலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசபிள்ளை தவமணி நேற்று (08.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு- காமாட்சி தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற கணேசபிள்ளையின் (வான் கணேஸ்)அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையதம்பி -சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சிவலிங்கம், தவமலர், தங்கமலர், சந்திரலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், சுசிலாதேவி, லோகராசா, இரத்தினராசா, பிறேமா, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், மணிக்குமரன், குலச்செல்வன், கோபிறமணன், தவலோஜினா, லோகிதன், கீர்த்தனா, ரஞ்ஜிதமலர், தனுசாந், பத்மலோஜன், ஜலக்சிகன், ஜலக்சிகா, வேதாரணி, அனோசன், குகதீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சின்னாலடி, காரைநகர். (35829)(16.14.9)

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நல்லதம்பி சற்குணநாதன்

வளலாயைப் பிறப்பிடமாகவும், சந்நிதி வீதி, இல. 56, பத்த மேனியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சற்குணநாதன் கடந்த (06.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி-சின்னாச்சிப்பிள்ளை தம் பதியரின் சிரேஸ்ட புதல்வனும், நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், கிரிதரன்(லண்டன்), சுபாஜினி(கனடா), தபோதினி (கனடா), நளாயினி(ஆஸ்திரேலியா), சசிகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசுதர்சினி(ராஜி), குகதாசன், டிலோஜன், சிவேந்திரகுமார், பானுஷா ஆகியோரின் மாமனும், சதுர்த், ஷானிகா, ஷஞ்சிகா, ரிஷிகர், சுரபி, ரசிக்கா, வினுஜன், ஆருணி, அபிஷன், ஆருஜன், ஆதவன் ஆகியோரின் அன்புப் பேரனும், வரதராசன், அன்னலட்சுமி, தவ மணிதேவி(சோலை), மல்லிகாதேவி(சின்னச்சோலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கமணி,காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற ஸ்ரீகனகசபேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (11.04.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வளலாய் இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்நிதி வீதி,
இல.56,பத்தமேனி,
அச்சுவேலி. 021 791 2390

தகவல்:
குடும்பத்தினர்.

35824(17,14, 16)

மரண அறிவித்தல்

திருமதி அன்னபூரணம் கணேசு

சுன்னாகத்தைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் கணேசு நேற்றுமுன்தினம் (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2013) செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தி யாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயிலடி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (35831) (23-16,14)

நவலி:குடும்பத்தினர்.

ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி-புத்தூர்
பழைய மாணவர் சங்கம்
புதுவருட ஒன்று கூடலும் வருடாந்த பொதுக்கூட்டமும்

காலம்-21.04.2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம்-காலை: 9.00 மணி
இடம்-குமாரசுவாமி ஞாபகார்த்த மண்டபம்

பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ்.இராசமனோகரன்
தலைவர்

க.சிறீஸ்காந்தராசா
செயலாளர்

மரண அறிவித்தல்

செல்லப்பா வீரசிங்கம்

(முன்னாள் முகாமையாளர் கரைச்சி ப.நோ.கூ.சங்கம்)

அரசடி நவாலியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி 1215 திருநகர் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா வீர சிங்கம்நேற்று(08.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நவாலி சண்டியன் செல்லப்பா-லெட்சுமிப் பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்க ளான தங்கச்சியம்மா, சின்னம்மாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புக் கணவரும், விஜய குமாரி(ஜேர்மனி), விஜயகாந்தன் (காந்தன், கிளிநொச்சி), காலஞ் சென்ற விஜய மோகன் மற்றும் விஜயலட்சுமி(முன்னாள் நடன ஆசிரியை, கிளி/கனிஸ்ட மகா வித்தியாலயம்), விஜயசீலன் (பிரான்ஸ்), விஜயமனோகரி(கனடா), விஜயநாதன்(ஈசன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவச்சந் திரன்(ஜேர்மனி), மதிமோகன்(கனடா), ரோஷினி(பிரான்ஸ்), சுதாகரன் (கனடா), யோகசண்டிகா(கொழும்பு) ஆகியோரின் மாமனும், சியாமினி(ஜேர்மனி), ஷாருக்க, அஸ்விக்கா, ரிஷிக்கா(கனடா), அகஸ்தியன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.04.2013)செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பி.ப.4மணியளவில் திருநகர் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1215, திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

தகவல்:
ஈசன், காந்தன்.
(மகன்மார்)

பிரிட்டனின் இரும்புப் பெண்மணி காலமானார்

லண்டன், ஏப்.9

இரும்புப் பெண்மணி என்று அழைக்கப்பட்ட பிரிட்டனின் முன்னாள் பிரதமரான மார்கரெட் தாட்சர் நேற்றுக் காலமானார். இறக்கும் போது அவருக்கு 87 வயதாகும்.

பக்கவாத நோய் தாக்கியதை அடுத்து அமைதியாக அவரது உயிர் பிரிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனின் முதலாவது பெண் பிரதமரான இவர் கான்சர்வேட்டிவ் கட்சியின் முன்னாள் தலைவியாகவும் இருந்தார்.

1979 ஆம் ஆண்டுதான் பதவி ஏற்றதை அடுத்து பிரிட்டனின் அரசியல் அரங்கில் பல மாற்றங்களை அவர் ஏற்படுத்தினார். (ற)

இரகசிய ஆவணங்களை வெளியிட்டது விக்கிலீக்ஸ்

லண்டன், ஏப்.9

அமெரிக்க தூதரகங்களின் மேலும் சில இரகசிய இராஜதந்திர ஆவணங்களை வெளியிட்டுள்ளது விக்கிலீக்ஸ் இணையத்தளம்.

உலகளாவிய ரீதியில் நாடுகளின் 1.7 மில்லியன் இராஜதந்திர மற்றும் புலனாய்வு அறிக்கைகளை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் இருந்த காலப் பகுதியில் இது தொடர்பான பணிகளை விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலின் அசாஞ் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவிற்கு அனுப்பப்படலாம் என்ற அச்சம் காரணமாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் அசாஞ்சே தஞ்சமடைந்தார்.

ஈக்குவடோர் அரசு ஜூலியன் அசாஞ்சிற்கு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளதுடன், தமது தூதகரத்தில் வைத்து அசாஞ்யை விசாரணை செய்ய முடியும் என ஈக்குவடோர் கூறியுள்ளது.

இந்தநிலையில் தற்போது மேலும் பல இரகசிய ஆவணங்கள் விக்கிலீக்ஸால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

ஆசியப் பிராந்தியத்தில் எவரும் வாலாட்ட விடோம்

சீன ஜனாதிபதி ஜீ ஜின் பிங்

போவா, ஏப்.9

கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், சுய லாபத்துக்காக ஆசிய பிராந்தியத்தில் குழப்பம் ஏற்படுத்த எவரையும் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் சீன ஜனாதிபதி ஜீ ஜின் பிங்.

சீனாவின் போவா நகரில் நடைபெற்ற கருத்தமர்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்போது ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகள் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

சுய லாபத்துக்காக ஆசிய பிராந்தியத்தில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் குழப்பம் ஏற்படுத்த யாரையும் அனுமதிக்க மாட்டோம். அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவுவதற்கு ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகள் பரஸ்பர நம்பிக்கையை அதிகரித்துக் கொள்வதுடன், இணைந்து பணியாற்றவும் வேண்டியது மிகவும் அவசியம்.

சீனா தனது இறையான்மையைப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கும். அதேநேரம், ஆசிய பிராந்தியத்தில் அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் நிலை நாட்டுவதற்கும் பாடுபடும்- என்றார் ஜீ ஜின் பிங்.

தென்கொரியா மற்றும் அமெரிக்கா மீது போர் தொடுக்க வடகொரியா ஆயத்தமாகி வருகிறது. இந்நிலையில், வடகொரியாவின் நெருங்கிய நட்பு நாடான சீனா இவ்வாறு கருத்து தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

கொரியத் தீபகற்பத்தில் தற்போது ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றத்தை அடுத்து தென்கொரிய இராணுவத்தினர் எல்லைப்பகுதிக்கு விரைவாக நகர்த்தப்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் ஹிலாரி போட்டியிடுவார்

கிளின்டன் தெரிவித்தாராம்

நியூயோர்க், ஏப்.9

எதிர்வரும் அமெரிக்கத் தேர்தலில் ஹிலாரி கிளிங்டன் போட்டியிடுவார் என்று கிளின்டன் சூசகமாகத் தெரிவித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக 1993 முதல் 2001ஆம் ஆண்டு வரை பதவி வகித்தவர் பில் கிளிண்டன். இவரது மனைவி ஹிலாரி கிளின்டன். இவர் ஒபாமாவின் அமைச்சரவையில் வெளியுறவு துறை அமைச்சராக நான்கு ஆண்டு பணியாற்றி சமீபத்தில் ஓய்வு பெற்றார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி கிளிங்டன் போட்டியிடுவார் என்ற செய்திகள் வெளியாகிய போது, அதை ஹிலாரி கிளிங்டன் உறுதியாக மறுத்தார்.

இந்தநிலையில், 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஹிலாரி கிளிங்டன் போட்டியிடுவார் என்று அவரது கணவரும் அமெரிக்க முன்னாள் அதிபருமான பில் கிளிங்டன் தெரிவித்துள்ளார் என்று தற்போது தகவல் வெளியாகியுள்ளது. (ற)

இரு பெண்களின் தலைகள் துண்டிக்கப்பட்டு படுகொலை

சூனியக்காரர்கள் என்ற சந்தேகத்தில்

மெல்பேர்ன், ஏப்.9

சூனியக்காரர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் தலை துண்டிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொடூரச் சம்பவம் ஆஸ்திரேலியா அருகே உள்ள பப்புவா நியூகினியா தீவில் இடம்பெற்றுள்ளது.

அந்த நாட்டில் பேய், பிசாசு மற்றும் மூட நம்பிக்கைகள் தொடர்பான உயிர் கொலைகள் ஏராளமாக நிகழ்ந்து வருகின்றன. கடந்த 2011ஆம் ஆண்டு, பிறந்த ஆண் சிசுவை அவரது தந்தை துடிதுடிக்க கடித்து தின்ற சம்பவம் நாகரிக சமுதாயத்தை திகிலுக்குள் ஆழ்த்தியது.

தற்போது சூனியம் வைத்து ஓய்வு பெற்ற ஆசிரியையை கொன்று விட்டதாக கூறி 2 பெண்களை கடந்த வாரம் போலேல் கிராமவாசிகள் பிடித்துச் சென்றனர்.

அவர்களை 3 நாள்கள் சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தி 2 பேரின் தலையையும் துண்டித்து கிராம மக்கள் கொலை செய்யப்பட்டனர்.

பொலிஸாரின் முன்னிலையிலேயே இந்த கோரச் சம்பவம் நடந்திருப்பது மனித உரிமை ஆர்வலர்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

முஷாரப்பின் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது

சித்ரால் தொகுதியில் போட்டியிடுகிறார்

இஸ்லாமாபாத், ஏப்.9

அடுத்த மாதம் நடைபெற்றவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப், தாக்கல் செய்திருந்த மூன்றாவது வேட்புமனு தேர்தல் திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மே 11ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்காக கராச்சி, இஸ்லாமாபாத், சித்ரால், காசுர் ஆகிய 4 தொகுதிகளில் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

அதில் காசுர் தொகுதி யில் அவரது மனு கடந்த வெள்ளியன்று நிராகரிக்கப்பட்டது. மனுவில் அவரது கையெழுத்து, அடையாள அட்டையில் உள்ள கையெழுத்து போல் இல்லாததால் வேட்பு மனுவை தேர்தல் அதிகாரி நிராகரித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, கராச்சி தொகுதியிலும் நேற்று முஷாரப் மனு நிராகரிக்கப்பட்டது. முஷாரப் ஆட்சியின் போது நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுத்தது சட்ட விரோதமானது என அதற்கு ககாரணம் கூறப்பட்டது.

எனினும் வடக்கு பாகிஸ்தானில் உள்ள சித்ரால் தொகுதியில் முஷாரப்பின் மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த தொகுதியில் முஷாரப்புக்கு அதிக செல்வாக்கு என்று கூறப்படுகிறது. (ற)

4 ஆவது அணுப்பரிசோதனை தயாராகிறதா வடகொரியா?

பியாங்யாங், ஏப்.9

நான்காவது அணுப் பரிசோதனையை நடத்துவதற்கு வடகொரியா தயாராகி வருகின்றது என்று கூறப்படுகிறது.

வடகொரியாவின் முன்னைய அணுபரிசோதனையின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தென் கொரிய இராணுவத்தை மேற்கோள் காட்டி தகவல்



கள் வெளியாகியுள்ளன.

வடகொரியாவின் அணுப் பரிசோதனை திட்டப் பகுதியை தாம் கண்காணித்து வருகின்றோம் என்று தெரிவித்துள்ள தென்கொரியா வட கொரியாவின் தென்பகுதியில் பணியாளர்கள் மற்றும் வாகனங்களின் நகர்வுகள் காணப்படுகின்றன- என்றும் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் வடகொரியா மேற்கொண்ட அணு குண்டு சோதனையை அடுத்து அடுத்து அந்த நாட்டிற்கு எதிரான தடைகளை ஐக்கிய நாடுகள் சபை கடுமையாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

வடகொரிய ஏவுகணைகள் இடைநடுவில் அழிக்கப்படும்

ஜப்பான் இரகசியத் திட்டம்

டோக்கியோ, ஏப்.9

தென் கொரியாவுக்கு எதிராக வட கொரியா போர் பிரகடனம் செய்துள்ளதை அடுத்து ஜப்பான் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியுள்ளது.

ஜப்பானுக்குள் வட கொரிய ஏவுகணைகள் நுழையும் பட்சத்தில் அவை தாக்கி அழிக்கப்படும் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

இதற்கான அனுமதி விரைவில் இராணுவத்துக்கு வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜப்பான் பாதுகாப்புத் துறை அமைச்சர் இட்சுனாரி ஒனோடெரா இதுகுறித்து ஆராய்ந்து வருவதாகவும், விரைவில் இந்த அனுமதி இராணுவத்துக்கு வழங்கப்படும் என்று அந்தநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த உத்தரவு வெளிப்படையாக வெளியிடப்படாது என்றும் வட கொரிய ஏவுகணைகளை



இடைமறித்து அழிக்க 'ஏஜிஸ்' ஏவுகணைகளை தமது கடல் பகுதியில் நிலைநிறுத்த ஜப்பான் அரசு திட்டமிட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.(ற)

வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் இன்றி ஆனைவிழுந்தானில் மக்கள் அவலம்

ஒருவேளை உணவுடன் காலத்தை கழிக்கும் நிலை

கிளிநொச்சி, ஏப்.9

கிளிநொச்சி, ஆனை விழுந்தான் கிராமத்தில் மீள் குடியமர்ந்து வாழ்ந்து வரும் எண்பது வீதமான மக்கள் தமக்கான தொழில் வாய்ப் புகள் இன்றியும் வாழ்வாதார உதவிகள் இன்றியும் வாழ்ந்து வருவதால் அடுத்த கட் டத்தை நோக்கி நகர முடி யாத அவலநிலை காணப் படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத் தின் கரைச்சிப் பிரதேச செய லர் பிரிவின் கீழ் உள்ள மிக வும் பின் தங்கிய கிராமங் களில் ஒன்றாகக் காணப்படும் இந்தக் கிராமத்தில் மீள் குடியமர்ந்த எண்பது வீத மான குடும்பங்கள் மோச மான நிலையில் உள்ளன.

> நிவாரண உதவிகளும் கிடைக்கவில்லை. தொழில் வாய்ப்புகளும் இல்லை. கூலி வேலை கூட எங்களது கிராமத்தில் கிடைக்காது. வேலைக்கு அக்கராயன்குளம் அல்லது வன்னேரிக்குளத்துக்குத்தான் போக வேண்டும்.

இந்தக் குடும்பத்தவர்கள் தொழில் வாய்ப்புகள் இன்றி யும் வாழ்வாதார உதவிகள் இன்றியும் பல்வேறு சிரமங் களை எதிர் கொண்டு வரு கின்றனர்.

அங்கு வசிக்கும் மூதாட் டியான தெய்வானை தனது மனக் குமுறலை வெளி யிட்டார். எனது கணவரும், கணவனை இழந்த எனது மகளும் மகளின் பிள்ளைகள் இரண்டு பேருமாக ஐந்து பேர் பெரும் சிரமங்களுடன் காலத் தைக் கழித்து வருகிறோம்.

தற்போது எந்தவிதமான நிவாரண உதவிகளும் கிடைக்கவில்லை. தொழில் வாய்ப்புகளும் இல்லை. கூலி வேலை கூட எங்களது கிரா மத்தில் கிடைக்காது. வேலைக்கு அக்கராயன்குளம் அல்லது வன்னேரிக்குளத்துக்குத்தான் போக வேண்டும். அவ்வாறு போவது என்றாலும் போக்கு வரத்து வசதிகள் இல்லை. இவ்வாறான நிலையில் என்னதான் செய்வது?

ஏதோ கிடைப்பதை வைத்து ஒரு நேர உணவைக் கொண்டு காலத்தைக் கழித்து வருகின்றோம். ஒரு சில நாள்களில் அதற்கே பெரும் பாடு. இதைவிடஎனை தேவை களுக்கு எதுவும் செய்ய முடியாது. இந்தப் பகுதியில் நாங்கள் மாத்திரமல்ல, வேறு குடும்பங்கள் பலவும் இவ் வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன என்று கவலையுடன் தெரி வித்தார் அந்த மூதாட்டி.

(ஒ-6)

பாடசாலை கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

கிளிநொச்சி,ஏப்.9

முரசுமோட்டை முருகா னந்தாக் கல்லூரியின் மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி கல்வி வல யத்துக்குட்பட்ட முதன்மை யான கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் முருகானந்தாக் கல்லூரியில் சுமார் 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலை யில் போதிய கட்டட வசதி கள் இன்றி பல்வேறு நெருக் கடிகளைக் கல்லூரி சந்தித்து வருகின்றது.

இந்த நிலையில் குறித்த கல்லூரிக்கான மூன்று மாடிக் கட்டடம் அமைக்கும் பணி இசுறு திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி முதல்வர் தி.வரதன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ் வரன், கண்டாவளைப் பிர தேச செயலர் ரி.முகுந்தன், வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கோட்டக் கல்வி அதிகாரி வீ.இராஜகுலசிங்கம், ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

மூன்று கோடியே எழுபது லட்சம் ரூபா செலவில் அமை யவுள்ள குறித்த மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த முத லாம் திகதி நடைபெற சகல ஏற்பாடுகளும் மேற்கொள் ளப்பட்ட நிலையில் குறித்த நிகழ்வு அரசியல் தலையீடு காரணமாக நிறுத்தப்பட்டு மீண்டும் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. (வ-6)

வீதி புனரமைப்பு

மாங்குளம், ஏப்.9

கனகராயன்குளம் மகா வித்தியாலய பாடசாலை வீதியூடாக புதுக்குளத்தில் இருந்து ஏ-9 வீதி வரையான சுமார் 2.5 கிலோ மீற்றர் வீதி தற்போது புனரமைக்கப் பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதியு தவியுடன் வவுனியா வடக்கு பிரதேச சபையால் இந்த வீதி புனரமைக்கப்பட்டுள்ளதாக வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ஜெ.ஜெய ரூபன் தெரிவித்துள்ளார்.

17.6 மில்லியன் ரூபா உலக வங்கியின் நிதியுத வியுடனும், 9 லட்சத்து ஐம்ப தாயிரம் ரூபா பிரதேச சபை யின் நிதியுடனும், 7 லட்சம் ரூபா மக்கள் பங்களிப்பு நிதியிலிருந்தும் இந்தவீதி புனரமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-422)

மன்னார் பஸார் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சேமிப்பு வங்கியின் கிளைக் காரியாலயம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.
தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் ஆரிய திலக தஹநாயக, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் றிஸாத் பதியுதீன் ஆகியோர் கலந்து கொண்டு புதிய காரியாலயத்தை திறந்து வைத்தனர். (ஐ-12)

மருத்துவப் பரிசோதனை

வவுனியா,ஏப். 9

வவுனியாவிலுள்ள உண வகங்களைக் கையாளும் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மருத்து வப் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக வவுனியா நகரசபையின் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.தியா கலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியாவிலுள்ள உண வகங்களின் உரிமையாளர் கள் மற்றும் ஊழியர்களின் நலன்கருதி சுகாதாரத் திணைக்களத்தினால் கடந்த மாதம் முதல் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

இதுவரை 200 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை பரிசோதனை களை மேற்கொள்ளாதவர்கள் சுகாதாரப் பணிமனைக்கு வந்து பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கேட் டுக் கொண்டார்.

(க-400)

நகர், கிராம வேறுபாடின்றி வளங்கள் பகிரப்பட வேண்டும்

பாடசாலை அபிவிருத்தி குறித்து ஓய்வு நிலை அதிபர்

அக்கராயன்,ஏப்.9

நகர பாடசாலைகளில் மாணவர்களுக்கு கிடைக்கும் வசதி வாய்ப்புகள் கிராமப்புற மாணவர்களுக்கு கிடைக்க வேண்டும். இல்லையேல் கிராமப்புற மாணவர்களின் திறமைகள் மழுங்கடிக்கப் பட்டுவிடும் என ஓய்வு நிலை அதிபர் நா.நடராஜா தெரிவித் தார்.

அக்கராயன் மகாவித்தியா லய பரிசளிப்புவிழாவில்சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வரறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

நகர்ப்புற, கிராமப்புற வேறுபாடுகள் இன்றி மாண வர்களுக்கு சகல வளங் களும் கிடைக்க வேண்டும். அப்போதுதான் எல்லா மாண வர்களாலும் சாதிக்க முடியும். கிராமப்புற மாணவர்கள்

> திறமையுடைய கிராமப்புற மாணவர்கள் வள வாய்ப்புக்கள் கிடைக்காமை யால் பாதிக்கப்படு கின்றனர்.

திறமையான மாணவர்களாக இருந்தும் வசதி வாய்ப்புகள் கிடைக்கப் பெறாமல் உள்ள னர்.

இந்த மாணவர்களுக்கு தகுந்த வசதிகளை கல்வி அதிகாரிகள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் -என் றார். (ஐ-18)

புழுதியில் குளிக்கும் கிளி மாணவர்கள்

கிளிநொச்சி நகரில் நடை பெறும் வீதிப் புனரமைப்பு களால் மாணவர்கள் புழுதிக் குளியலுடன் பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் சுவாச நோய்களை யும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டிப்போச்சந்தியில் இருந்து கனகபுரம் செல்லும் வீதியின் திருத்தப் பணிகள் நீண்ட காலமாக இழுபடும் நிலை யால் மாணவர்கள் தினமும் பெரும் அவலங்களை எதிர் கொள்கின்றனர்.

கனகபுரம் மகாவித்தியால யம், மத்திய கல்லூரி, கிளி நொச்சி மகா வித்தியாலயம், புனித திரேசா மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களே நாள் தோறும் புழுதியில் நனைந்த படி பயணிப்பதைக் காண முடிகிறது. வீதி வேலைகளை விரைந்து முடிக்கும்படி மக்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர். (ஐ-18)

வீதியை புனரமைப்பார்களா?

முல்லைத்தீவு, ஏப். 9

முல்லைத்தீவு பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளுக்கான பிரதான வீதிகள் புனரமைக் கப்படாமையினால் இந்தப் பகுதிகளில் வாழும் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாண்டியன்குளம், சுரும்புளியான், நட்டாங்கண்டல், பனங்காமம் உள்ளிட்ட சுமார் 14 வரையான கிராமங்களுக்கான பிரதான போக்குவரத்து வீதியாக மேற்படி பிரதான வீதிகள் காணப்படுகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்து தருவார்களாயின் இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் இலகுவான முறையில் தமது பயணங்களை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கின்றனர். (எ-6)

அக்கராயன் ம.வியில் இவ்வருடம் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பம்

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன்,ஏப்.9

அக்கராயன் மகா வித் தியாலயத்தில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவு களை இந்த ஆண்டில் ஆரம் பிப்பதற்கான நடவடிக் கைகள் நடைபெற்று வருவ தாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முரு கவேல் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் மகா வித்தி யாலய பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மட்டத்தில் க.பொ .த. உயர்தரப் பரீட்சையில் 69 வீத மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு சித்திபெற்றுள் ளனர். அக்கராயன் மகா வித்தியாலயத்திலேயே 79 வீத மாணவர்கள் சித்தி யடைந்துள்ளனர். தேசிய மட்டத்தை விட அதிகமாக 10 வீதமானோர் சித்தியடைந் துள்ளார்கள் என்பது பாராட் டுக்குரிய விடயம்.

கிளிநொச்சி மாவட்டத் தில் 21 உயர்தர பாடசாலை கள் உள்ளன. உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவு களில் கற்பிக்கக் கூடிய 10 ஆசிரியர்கள் கடமைக்கு வரவுள்ளனர். இதில் நான்கு ஆசிரியர்கள் அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு வரவுள்ளனர். அத்துடன் 70 லட்சம் ரூபா செலவில் இரு மாடிக் கட்டடங்கள் இந்தப் பாடசாலையில் அமைக்கப் படவுள்ளன. அந்தக் கட்ட டங்களுக்கான அடிக்கல் விரைவில் நடப்படவுள்ளது- என்றார். (வ-18)

பொன்சேகாவின் கோரிக்கையை நிராகரித்தார் ரணதுங்க

கொழும்பு,ஏப்.9

தனது கட்சியில் மீண்டும் இணையுமாறு ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகா விடுத்திருந்த கோரிக்கையை, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க நிராகரித்துள்ளார்.

கடந்தவாரம் செய்தியாளர்களிடம் பேசிய சரத் பொன்சேகா, ரணதுங்கவும், டிரான் அலசும் விரும்பினால் மீண்டும் எனது கட்சியில் இணைந்து கொள்ளலாம் என்று தெரிவித்திருந்தார்.

எனினும் இந்த அழைப்பை நிராகரித்துள்ள ரணதுங்க, தாம் எடுத்த தீர்மானத்தில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார்.(ச)

இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு ஆயுள்தண்டனை

கொழும்பு,ஏப்.9

இலங்கை சிறைச்சாலைகளில் 400 மரண தண்டனைக் கைதிகளின் தண்டனை, ஆயுள் தண்டனையாக மாற்றம் செய்யப்படவுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் வயதைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

குறித்த கைதிகளின் வயதைக் கருத்தில் கொண்டு மரண தண்டனையை, ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திரரட்ண பல்லேகம கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கை சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சிடம் விடுக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனைக் கைதிகளை அண்மையில் சந்தித்தபோது அவர்கள் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் குறித்து அறிந்து கொண்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்தார். (ச)

பூனை கண்களை மூடி குடிக்கும் பால் ஜனாதிபதி மஹிந்தவும் அதேபோல்

குமரகுருபரன் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.9

1915 ஆம் ஆண்டு முஸ்லிம்களின் மாபெரும் அழுத்தத்தால் சிங்களத் தலைவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களை விடுவிப்பதற்கு சேர். பொன். இராமநாதனின் உதவியைத்தான் அநாகரிக தர்மபால நாடினார். இது போன்ற வரலாற்றுச் சிறப்புகளை மறந்துவிட்டு கண்களை மூடிப் பால் குடிக்கும் பூனை போல ஜனாதிபதி இருக்கிறார் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனப் பிரச்சினைத் தீர்வுக்காக ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவகாரத்தைத் திசை திருப்ப பொது பல சேனாவைக் கொண்டு அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. அதனூடாக நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம்மக்களிடையே பிரிவினைவாதத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறது. வெள்ளையர்களிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினத்தவருமே பங்காற்றினர் என்ற வரலாற்றை நாம்மறந்துவிடமுடியாது.

1915 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் நாட்டில் மிகவும் சக்திமிக்கவர்களாக இருந்தனர். இதன்போது முஸ்லிம்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் பல சிங்களத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்களை விடுதலை செய்வதற்காக சேர். பொன். இராமநாதனிடம்தான் அநாகரிக தர்மபால உதவி கோரினார். இத்தகைய வரலாறுகளை நாம் ஒருபோதும் மறந்துவிட முடியாது. இருப்பினும், இவையாவற்றையும் மறந்து கண்களை மூடி பால் குடிக்கும் பூனைபோல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருக்கிறார்.

தமிழகத்தில் இடம் பெற்றுவரும் இலங்கை எதிர்ப்புப் போராட்டங்கள் மிகச் சிறந்தவையாகும். ஏனெனில், அரசியல் பேதங்களைக் கடந்து பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் போராட்டம்தான் அது. இந்தத் தொடர் போராட்டங்கள் இலங்கைக்குத் தாக்கத்தை ஏறபடுத்தும் - என்றார்.(ச-சி)

நீதிவான்களுக்கு திடீர் இடமாற்றங்கள்

கண்டிக்கிறது நீதிச் சேவைகள் கூட்டமைப்பு

கொழும்பு,ஏப்.9

நீதிவான்களுக்கு வழங்கப்பட்டுள்ள திடீர் இடமாற்றங்கள் தொடர்பில் நீதிச் சேவைகள் கூட்டமைப்பு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

சிறிய நீதிமன்றங்களைச் சேர்ந்த 30 நீதிவான்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சில சிரேஷ்ட நீதிவான்களுக்கு சிறிய நீதிமன்றங்களில் பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது என்று நீதிச் சேவைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் திடீர் இடமாற்றமானது நீதிமன்றக் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும் என்று நீதிச் சேவைக் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கு நீதிச் சேவைகள் கூட்டமைப்பு எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

முன்றாண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 16.10.1945

மறைவு: 15.03.2010

அப்பா,மூன்றாண்டுகள் பறந்து போனதப்பா
அன்பான உங்கள் திருமுகம் பார்த்து
கனிவான உங்கள் குரல்கேட்டு
நன்னெறி காட்டி வாழவைத்த தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்-நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்த துயர் மறையாது.
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

அமரர்
நாகமுத்து இராசா
[முன்னாள்கிளைமுகாமையாளர்,
ப.நோ.கூ.ச.-சங்கானை]
மாளியாவத்தை,
சங்கானை.

என்றும் தங்களை மறவாத குடும்பத்தினர்.

(C:8270)(5.6.7)

மரண அறிவித்தல்

சிவகுரு குலசேகரம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு குலசேகரம் கடந்த 06.04.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், மகேந்திரனின் (மகேன் - இத்தாலி) பாசமிகு தந்தையும், பாமினியின் அன்பு மாமனும், கிஷாந், லக்ஸினி ஆகியோரின் அருமைப் பேரனும், கனகசபாபதி - சிவபாக்கியம், சாந்தமூர்த்தி - தேவரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2013) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நுணாவில் மேற்கு குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
மகன் (மகேன்).

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(27824) (45.6.7)

ஓராண்டு நினைவலைகள்

மலர்வு
18
12
1946

உதிர்வு
09
04
2012

அமரர்
தம்பிராசா விக்கினேஸ்வரன்
(முன்னாள் ஆசிரியர் : யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை)

திதி: திருதியை

புன்னாலைக் கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், பிரதேச சபை வீதி, கொல்லங்கலட்டியை நிரந்தர வதிவிடமாகவும் ஊரெழுவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அமரர் தம்பிராசா விக்கினேஸ்வரன் அவர்களின் ஈராம் ஆண்டு நினைவலைகள்

ஓராண்டு கழிந்தும் ஓயாத நினைவுகளுடன் ஒன்று பட்டிடும் துயரம் ஓர் அளவினதன்றே
ஒருவாறு ஆறுதல் அடைகின்றேன் காலம் எல்லாம் மாற்றும் வலியறிந்து
தாங்கள் வாழ்ந்த வாழ்க்கை இன்று வரலாறு ஆக தங்களின் வாழ்க்கைப் பாடம் எனக்காய்
சோகத்தின் வடுக்கள் ஆறாது.
என்றும் தங்களின் இறையுலக இன்பத்தை விரும்பிப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி.

ஊரெழு.

(35807)(5.6.7)

இலங்கை அகதிகள் மீள அழைக்கப்படுவர்

இரு வருட காலப்பகுதிக்குள் நடவடிக்கை என்கிறது அரசு

கொழும்பு,ஏப்.9

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை மீளவும் நாட்டுக்கு அழைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் இரண்டு வருட காலப்பகுதிக்குள் சகல இலங்கை அகதிகளையும் மீள அழைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் இந்திய அரசுடன் இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது..

இந்தியாவிலிருந்து 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 5304 இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 5304 இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளனர்.

தென் இந்தியாவில் தற்போது 68000 இலங்கை அகதிகள் அகதி முகாம்களிலும் வேறும் இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இலங்கை அகதிகளை மீள அழைத்துக் கொள்வது தொடர்பில் ஒரு பொறி முறையை உருவாக்க வேண்டும் என்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

நாடு திரும்பும் இலங்கை அகதிகளுக்கு இலவச கடவுச் சீட்டுக்களும், பிறப்புச் சான்றிதழ்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது. (ச)

இம்மாத இறுதிக்குள் பணிப் பகிஷ்கரிப்பு

தனியார் போக்குவரத்துச் சங்கம் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.9

இலங்கைத் தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கம் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது என்று இலங்கை தனியார் போக்குவரத்துச் சங்க தலைவர் கெமுனு விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பஸ்களுக்கு வர்ணம் தீட்டுதல், பஸ் கட்டணம் அதிகரிப்பு, எரிபொருள் கட்டணங்கள் அதிகரிப்பு தொடர்பில் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெறும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

கொம்பனித்தெரு கொள்ளை மற்றொரு சந்தேகநபர் கைது

கொழும்பு,ஏப்.9

கொம்பனித்தெருவில் ஒரு கோடி ரூபா கொள்ளை யிடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப் பட்டுள்ளார்.

வெளிநாட்டில் தலைமறைவாகியிருந்த குறித்த நபர் மீண்டும் நாடு திரும்பி மற்றுமொரு நாட்டுக்குத் தப்பிச் செல்ல முயற்சித்த போதே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு, கோட்டைப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கடந்த மாதம் 13ஆம் திகதி சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றுள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

அண்மையில் வெள்ளவத்தையைச் சேர்ந்த வர்த்தகரொருவர் வெளிநாட்டுப் பணத்தை கொம்பனித்தெருவிலுள்ள தனியார் வங்கியொன்றில் பெற்றுக் கொண்டு திரும்பிக்கொண்டிருந்தபோது சந்தேகநபர்களினால் அவர் பயணித்த வாகனமும் பணமும் கொள்ளையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

விபத்தைக் கட்டுப்படுத்த தெளிவுபடுத்தும் திட்டம்

கொழும்பு மாவட்டத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மக்களை தெளிவுபடுத்தும் விசேட வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்குப் பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

பாதசாரிகள் வீதியை கடந்து போதல், வீதியால் நடந்து செல்லும் விதம் உட்பட பாதசாரிகள் கடைப்பிடிக்க வேண்டிய வீதி விதிமுறைகள் குறித்து இதன் போது விளக்கமளிக்கப்படவுள்ளன. (ச)

மரண அறிவித்தல்

திருமதி தவமணிதேவி மகாலிங்கம்

யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி மகாலிங்கம் நேற்று முன்தினம் (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகாலிங்கத்தின் (உரிமையாளர்- மகாலிங்கம் கூல்பார், இல.11, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு - வள்ளியம்மை தம்பதியரின் அன்புப் மருமகளும், காலஞ்சென்ற சுந்தரம்மாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசசேகரம், இராசரத்தினம், சிவஞானம்மா, தங்கரத்தினம்மா மற்றும் அன்னலட்சுமி, சிந்தாமணி ஆகியோரின் மைத்துனியும், செல்வமலர், சுந்தரவல்லி (பூபதி), காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா, தங்கராசா, செந்தில்நாதன், பாலதுரை ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.23, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(35801) (6.7.11)

தகவல்:
சி.மகாலிங்கம்
(கணவர்)

4ஆம் ஆண்டு நினைவலைகள்

4ஆம்வட்டாரம் முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

சாரதாக்கள்

திருமதி பரமேஸ்வரன் ஜெயரஞ்சினி
செல்வி பரமேஸ்வரன் ஜெனோஜா

10.11.1957 தோற்றம் 27.09.1982

மரணம் :- 25.03.2009
திதி :- சதுர்த்தசி - 09.04.2013

எம் உள்ளத்து அணையா தீபங்களே
எம்மை விட்டு நீர் சென்று
ஆண்டுகள் நான்கு வந்ததுவோ
நம்ப முடியவில்லை உம்இறப்பு
எம்முன் தினம் தினம் தேடுகின்றோம் உம்மை
உம் ஆத்ம சாந்திக்காக தினம் தினம்
பிரார்த்திக்கின்றோம்
உம் பிரிவில் துயருற்றிருக்கும் கணவர் பிள்ளைகள்.

(15792) (6.7) 4ஆம்வட்டாரம் முள்ளியவளை.

தகவல் - அன்னாரின் தாய், சகோதரர்கள்

18ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

10★09★1903 தோற்றம் 06★06★1908
29★03★1995 மறைவு 05★04★1995

அமரர்
கந்தையா குமரேசு

அமரர்
தங்கம்மா குமரேசு

திதி: 09.04.2013

நேசத்துடன் எமை வளர்த்து
நேர்வழியில் வாழவைத்து
ஆசைக்கனவுகளை அவனியிலே நிறைவேற்றிய
எமது அன்புத் தெய்வங்களே!
ஆண்டுகள் பதினெட்டு கடந்தாலும்
ஆறாது எம் துயரம்

ஆத்ம சாந்திக்காக பழவளவு வைரவரை வேண்டுகின்றோம்.

(3532) (10.6.7)

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.
T.P: 0777242516

குடும்பத்தினர்.

3 ஆம் ஆண்டு நினைவுப்பூக்கள்

திருமதி
பிறேமலோஜினி
பிரபாகரன்

மலர்ந்த மலராக
30.08.1982

கருகிய பூவாக
13.04.2010

திதி: சதுர்த்தசி
(2013.04.09)

ஆண்டுகள் மூன்று ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரமம்மா
முப்பதாண்டு நீ பிறந்தம்மா
மூன்று ஆண்டு நீ மறைந்தம்மா
எப்பிறப்பில் இனிக் காண்போமம்மா
எமைவிட்டு ஏன் பிரிந்தாயம்மா
பிரிவு எம்மை வாட்டுதம்மா
பிறேமா ஏன் நீ பிரிந்தாயம்மா
காலம் செய்த கொடுமையினால்
காலன் உன்னை கவர்ந்தானம்மா
ஆத்மா சாந்தி அடைந்திடவே – நாம்
அனுதினமும் வேண்டி நிற்கின்றோம்.

(3571)(9.4.7)

103/23, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.

அப்பா, அம்மா,
பிள்ளைகள், குடும்பத்தினர்.

சிறுநீரக நோயை இனங்காண மதவாச்சியில் வேலைத்திட்டம்

சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைப்படி

கொழும்பு,ஏப்.9

வட மத்திய மாகாணம் உட்பட நாட்டின் சில பிரதேசங்களில் பரவியுள்ள சிறுநீரகப் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதவாச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் மதவாச்சி மைத்திரிபால சேனாநாயக்கா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் சிறுநீரக நோய்க்கு உள்ளாகியுள்ள புதிய நோயாளர்களை இனம் காணல், அவர்களைச் சிகிச்சை பெற ஊக்குவித்தல், இந்த நோய்க்குரிய சிகிச்சையை நோயாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

சிலர் சிறுநீரக நோயை முன்வைத்து அரசியல் லாபம் பெற முயற்சி செய்கின்றனர். அதன் மூலம் எந்த நன்மையையுமே பெற முடியாது என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

இந்த நோய்க்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வசதிகளை மேம்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டமும் விரைவில் செயற்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வட மத்திய மாகாணம் உட்பட நாட்டின் சில பிரதேசங்ளில் பரவியுள்ள சிறுநீரகப் பாதிப்பு தொடர்பாக 1992 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு மருத்துவ நிபுணர்களால் பல மட்டங்களிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

வட மத்திய மாகாணம் உட்பட நாட்டின் சில பிரதேசங்ளில் பரவியுள்ள சிறுநீரகப் பாதிப்பு தொடர்பாக 1992 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு மருத்துவ நிபுணர்களால் பல மட்டங்களிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

இது தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் உலக சுகாதார ஸ்தாபனம் ஆய்வுகளை மேற்கொண்டது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் உலக சுகாதார ஸ்தாபனம் சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டமே நேற்று முன்தினம் ஆரம்பிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ச)

'அக்ரஹார' காப்புறுதித் திட்டம் மூலம் அரச ஊழியருக்கான இழப்பீடு அதிகரிப்பு

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.9

அரச ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'அக்ரஹார' காப்புறுதித் திட்டம் மூலம் வழங்கப்படும் இழப்பீடு மற்றும் மருத்துவ காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அறிவித்துள்ளது.

அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கமைய இதய நோய் சம்பந்தமான சத்திர சிகிச்சைகளுக்கு ஆகக் கூடியது நான்கு லட்சம் ரூபாவும், சாதாரண சத்திர சிகிச்சைகளுக்கு ஆகக் கூடியது ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

திடீர் விபத்து அல்லது இயற்கை உயிரிழப்புகளுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும் என்று தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தெரிவித்துள்ளது.

அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன என்று நிதிய பொது முகாமையாளர் கூறினார். முன்னர் இதய நோய் சத்திர சிகிச்சைகளுக்காக 3,50000 ரூபாவும், சாதாரண சத்திர சிகிச்சைகளுக்காக ஒரு லட்சம் ரூபாவும், இயற்கை உயிரிழப்புக்கு 50,000 ரூபாவும் வழங்கப்பட்டது.

எனினும், தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் பிரசவ சத்திர சிகிச்சைகளுக்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது என்று தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 'அக்ரஹார' காப்புறுதி திட்டத்தில் சகல அரச ஊழியர்களும் சேர்ந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

இரசாயன உபயோகமற்ற உற்பத்திக்கு ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டும்

மகாநாயக்க தேரர்கள் வேண்டுகோள்

கொழும்பு,ஏப்.9

இரசாயன உபயோகமற்ற விவசாய உற்பத்திகளுக்கு ஊக்குவிப்பு வழங்கி அத்தகைய விவசாயிகளின் உற்பத்திகளுக்கு உரிய பெறுமதியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

இவ்வாறு பௌத்த மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி தலைமையில் அநுராதபுரம் ஸ்ரீமகாபோதி விகாரையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேசிய அறுவடைப் புதிர் விழாவில் உரையாற்றிய மகாநாயக்க தேரர்களே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அடுத்த வருடம் இடம்பெறும் தேசிய அறுவடைப் புதிர்ப் பெருவிழாவில் புனித புதிர்ப்பாத்திரத்தை இரசாயனமற்ற புதிர் அரிசியால் நிரப்புவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று அவர்கள் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டனர்.

. இரசாயனத்தை உபயோகித்து உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருள்கள் நாட்டு மக்கள் மத்தியில் நோய்களைப் பரப்பி வருவதைச் சுட்டிக் காட்டிய மகாநாயக்க தேரர்கள், இரசாயன மற்ற நெல்லையும் ஏனைய உற்பத்திப் பொருள்களையும் உற்பத்தி செய்து நோயற்ற வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

எனவே அதனை உறுதிப் படுத்தும் வகையில் அவ்வாறான உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கு முன்னுரிமையளித்து அவர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். (ச)

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 14.04.2013 வரை மட்டும்

வழங்கும் விசேட அதிரடித் தள்ளுபடி

ஈஸ்வரன் ரேடர்ஸ்



Lumala
ஆண்கள் மிதிவண்டி - 11.500/=
(சீற், கரியர், பெல், ஸ்ராண்ட், பூட்டு அடங்கலாக)

Lumala
பெண்கள் மிதிவண்டி - 11.750/=
(சீற், கரியர், பெல், ஸ்ராண்ட், பூட்டு அடங்கலாக)

அத்துடன் Lumala மிதிவண்டி

உதிரிப் பாகங்கள் அனைத்தும் 30% தள்ளுபடி விலையில்

உங்கள் தெரிவுக்கு இன்றே முந்துங்கள்

மேலும்:

இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சொகுசு பஸ் சேவை யாழ் - கொழும்பு - யாழ். சேவையும் நடைபெறுகின்றது.

விவசாயிகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு வெங்காயம் ஒரு மூடைக்கு 14.04.2013 வரை 100/= மட்டும்.

(C/8275)(2.6.7)

ஈஸ்வரன் ரேடர்ஸ்

இல.69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 2813

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன் ரமேஸ்குமார் நிரூஜன்

யா/ ஏழாலை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று க.பொ.த(சா.தா.தரம்) பரீட்சைக்குத் தோற்றி 7A,1B,1S என்ற முன்னிலைப் பெறுபேற்றினைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

அதிபர், ஆசிரியர்கள்,
ஆசிரிய நலன்புரி சங்கம்.
யா/ஏழாலை ம.வி

(35810)(6.2.13)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்-வ.து

கூட்டுறவுக் கிராமிய வங்கி

மீதி உறுதிப்படுத்தல்

01.01.2011-31.12.2011 நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் கிராமிய வங்கியில் கணக்குகளைப் பேணும் சகல வாடிக்கையாளர்களும் தமது அங்கத்தவர் கையேட்டினை 09.04.2013-22.04.2013 ஆம் திகதி வரை விடுமுறை நாள் தவிர ஏனைய கிழமை நாள்களில் முற்பகல் 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணி வரை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். தவறின் சங்கப் பேரேட்டு மீதிகள் சரியெனக் கருதி கணக்காய்வு முடிவுறுத்தப்படும் என்பதனை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

பொது முகாமையாளர்.

(c/8273)(6.7.11)

ஜனசக்தி விற்பனைப் பிரிவு ஊழியர்களுக்கு விருதுகள்

விருதுகள் வழங்கும் நிகழ்வில் வெற்றியீட்டியவர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிச் சுற்றுலாக்கள், விமானப் பயணச்சீட்டுகள், பணப்பரிசுகள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் போன்றவை வழங்கப்பட்டன.

தனது விற்பனைக் குழுவில் சிறப்பாக செயலாற்றிய ஊழியர்களை கௌரவிக்கும் வகையில் ஜனசக்தி நிறுவனம் அண்மையில் விருதுகளை வழங்கியது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் வெற்றியீட்டியவர்களுக்கு வெளி நாட்டு பயிற்சிச் சுற்றுலாக்கள், விமானப் பயணச்சீட்டுகள், பணப் பரிசுகள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் போன்றவை வழங்கப்பட்டன.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரகாஷ் ஷாப்ட்டர் கருத்து தெரிவிக்கையில், எமது விற்பனை அணியில் முதலீடு செய்வது என்பது நிறுவனத்தினதும், அவர்களினதும் வளர்ச்சியிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. அத்துடன், நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அவர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டைப் போற்றிக் கௌரவிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. இந்த வருடாந்த நிகழ்வு எமது நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், ஊழியர்களின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் கலியாட்ட நிகழ்வாக அமைந்துள்ளதுடன், மனித வள அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக 60 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது என்றார்.

S Cologn வெற்றியாளர்களுக்கு பரிசுகள்

S Cologn தொடர்பாக பத்திரிகைகளில் வெளியான கேள்விகளுக்கு சரியான பதிலளித்தவர்களுக்கு S Cologn வாசனைத்திரவியங்கள் அடங்கிய பரிசில்கள் வழங்கப்பட்டன. கொழும்பு கோட்டையிலுள்ள பழைய ஒல்லாந்த மருத்துவ கட்டடத்தில் அமைந்துள்ள Nature's Secrets விற்பனை நிலையத்தில் வைத்து இப்பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது.

உள்ளூர் வாசனைத்திரவிய உற்பத்தி நிறுவனமான S Cologn தற்போது இலங்கை மகளிர் மத்தியில் பிரபலமடைந்துள்ளதுடன் துரிதமாக விற்பனையாகின்றது. நிகழ் கால மகளிரின் தேவைகளை அறிந்து S Cologn மூன்று வகைகளில் தயாரிக்கப்பட்டுள்ளது. காலை நேரத்துக்காக Morning Glory பகல் நேரத்துக்காக Day Delight இரவு நேரத்துக்கு Night Fever உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் முதற்தர மூலிகை உற்பத்தி வர்த்தக நாமமான Nature's Secrets உற்பத்தி செய்து விநியோகிக்கும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் பெருமையுடன் S Cologn உற்பத்தி செய்கின்றமை விசேட அம்சமாகும்.

ஐரோப்பா வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட GMP மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ISO 9001 மற்றும் ISO 14001 ஆகிய தரச்சான்றிதழின் கீழ் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் உற்பத்திகளை மேற்கொள்கின்றது.

சன்சில்க்கின் 8ஆவது பட்டமளிப்பு விழா

அண்மையில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் முன்னணி கூந்தல் தயாரிப்பான சன்சில்க் மற்றும் அதன் நீண்டகால பங்காளராகிய ரமணி பெர்னாண்டோ கூந்தல் மற்றும் அழகுக் கலை கல்விக்கூடத்தின் 8ஆவது பட்டமளிப்பு விழாவும் மாணவர்களின் கலைத் திறமையை வெளிப்படுத்தும் வகையிலான சிகையலங்கார அணிவகுப்பும் நடைபெற்றது.

இவ்வருட பட்டமளிப்பு விழாவில் கொழும்பு மற்றும் கண்டி கல்விக் கூடத்தில் கூந்தல் மற்றும் அழகு பராமரிப்பு டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்த 101 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது.

மேலும் சிறந்த சன்சில்க் மாணவர் விருது, சிறந்த Fantasy படைப்பு விருது, சிறந்த பெண் மற்றும் ஆண் ஆடையலங்காரம் போன்ற பிரிவுகளின் கீழ் விசேட விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் சர்வதேச தங்கப்பதக்கத்தை வென்ற லகிலெனகல தமது விருதினை City & Guilds நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வின் தொனிப்பொருள் 'Hair Art 2013' என அமைந்ததுடன்; மாணவர்களின் படைப்புகள் "Bling – the 2013 Brazilian Beat', 'Man power – Power Dressing', 'Bridal Show Stoppers' and 'Fantasy – Fantasia Wearable Art' போன்ற நான்கு பிரிவுகளில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பெஷன் குரு என்றழைக்கப்படும் சேனக டி சில்வா மூலம் இயக்கி தயாரித்து வழங்கிய பெஷன் ஷோவில் மாணவர்கள் தமது திறமைகளை 70 மாடல்களின் பங்கேற்றலுடன் வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வின் கௌரவ விருந்தினராக ரோஸி சேனாநாயக்க கலந்து கொண்டார். மேலும் ஹேமமாலிந்திர ரணவக(Koluu), சங்கீதா வீரரத்ன, ரம்சி ரஹ்மான், லோ சிங்; வொங், சனத் ஜயசூரிய, கீர்த்தி சிறி கருணாரத்ன மற்றும் ஹசான் திலகரத்ன ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

ரமணி பெர்னாண்டோ அழகு நிலையத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திருமதி. ரமணி பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், இப்பட்டமளிப்பு விழாவினை 8ஆவது ஆண்டாக நடத்துவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த 8 ஆண்டுகளாக எமது பங்காளராக விளங்கிய சன்சில்க், இலங்கையின் கூந்தல் மற்றும் அழகுக்கலை சிகிச்சைகளின் தரத்தினை மேம்படுத்த எமக்கு பல உதவிகளை வழங்கியுள்ளது. எமது மாணவர்கள் பல்வேறு விதமான சிகையலங்காரங்கள் மூலம் தமது முழுமையாக படைப்பாற்றல்களையும் வெளிப்படுத்தியுள்ளனர்' என்றார்

யாழ். மாவட்டத்தில் 3 வருடங்களில் வர்த்தன வங்கி ரூ 300 மில்லியன் கடன்

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்.மாவட்டத்தில் கடந்த 3 வருட காலப்பகுதியில் மட்டும் 300 மில்லியன் ரூபா கடன் உதவிகளை வர்த்தன வங்கி (டி.எம்.சி.சி.) வழங்கியுள்ளது என்று வர்த்தன வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் வேலாயுதம் சிவபாலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசியாவிலேயே அபிவிருத்தி வங்கியாக 1955 ஆம் ஆண்டின் நாடாளுமன்ற சட்டத்தின் கீழ் இலங்கையில் அபிவிருத்தி நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கீழாக 2002 ஆம் ஆண்டு தொடக்கம் வர்த்தன வங்கியாக வர்த்தக நோக்கத்துடன் விரிவுபடுத்தப்பட்டது.

வடமாகாணத்தில் 6 கிளைகளைக் கொண்டுள்ள வர்த்தன வங்கி, யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம், நெல்லியடி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் வங்கிச் சேவையை வழங்கி வருகிறது.

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் வியாபார முன்னேற்ற நடவடிக்கைகள், கடற்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பிரதானமாக கடன்களை வழங்கி வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் வங்கிச் சேவை ஆரம்பிக்கப்பட்டு 3 வருடகாலப் பகுதிக்குள் இதுவரை 300 மில்லியன் ரூபா கடன் உதவிகளை வழங்கியுள்ளது.

இதனைவிட வெகு விரைவில் சாவகச்சேரிப் பிரதேசத்தில் இன்னொரு கிளையை விரிவுபடுத்தவுள்ளது. தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகளுக்கென விசேட கடன் திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (த-14)

05.04.2013ஆம் திகதி அன்று நெல்லியடியில் வர்த்தன வங்கிக் கிளையை பிரதம நிறைவேற்று அதிகாரி லக்ஸ்மன் சில்வா திறந்து வைக்கின்றார். (த-253)

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' --மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்டர் – மன்னார்: 0232222052 'மீசாலை கணபதி' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிடி, ஓட்டுசுட்டான் : 0775035571.

காலம் நமக்கொரு பாட்டெழுதும்

சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்பதில் அரசு விடாப்பிடியாக இருக்கிறது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஓர் ஆரம்பப் புள்ளியாக தேசிய கீதத்தை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும், கலந்து பாட வேண்டும் என்ற ஒரு யோசனையை தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்வைத்திருந்தார்.

இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் அரச கரும மொழிகளாக இருப்பதாக பெயரளவில் மாத்திரமே சொல்லப்படுகிறது. ஆயினும், உண்மையில் தனிச்சிங்கள ஆட்சியே இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ய வேண்டும் என்றால் சிங்கள மொழியிலேயே செய்ய முடியும். தமிழ் இளைஞர்கள் பொலிஸில் இணைக்கப்பட்ட பின்னரும்கூட தமிழர் பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலிஸாரைத் தேடிக் கண்டு பிடிப்பதை விட மலையைக் கெல்லி எலியைப் பிடித்து விடலாம்.

பொலிஸ் நிலையங்களில் மட்டும்தான் இந்தக் கதையென்று இல்லை. அமைச்சுகள், திணைக்களங்கள் என்பன மூலம் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள், அனுப்பப்படும் கடிதங்கள் என்பனவும் சிங்களத்தையே முதன்மைப்படுத்தியதாக அமைகின்றன. இத்தகைய நிலையில்தான், மும் மொழிக்கும் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், வாசுதேவ நாணயக்கார இருமொழித் தேசிய கீதம் என்ற திட்டத்தை முன்வைத்திருந்தார். அரச கருமமொழிகளான சிங்களத்தையும், தமிழையும் கொண்டதாக தேசிய கீதத்தை இசைக்கச் செய்வதன்மூலம் மொழி ரீதியான நல்லிணக்கத்துக்கான முதல்பொறியை பற்றவைக்க அவர் விரும்பியிருக்கலாம். அல்லது, ''இங்கே பாருங்கள். எங்களது தேசிய கீதத்தில்கூட சிங்களத்துக்கு இணையாகத் தமிழுக்கும் சரியாசனம் வழங்கியிருக்கிறோம்'' என்று உலகத்துக்குக் காட்டுவதற்காகக்கூட இந்தத் திட்டம் வாசுதேவவின் உள்ளத்தில் உதித்திருக்கலாம். எதுவாக இருந்தாலும் தேசிய கீதத்தில் தமிழுக்கும் சம பங்கு வழங்குவதன்மூலம் அரசுக்கு ஒன்றும் குறைந்துவிடப்போவதில்லை.

ஆனால், தேசிய கீதத்தில்கூட தமிழுக்கு இடம்கொடுக்க பேரினவாதிகளுக்கு எள்ளளவும் மனமில்லை. மனமில்லாதபோது, இடம் எப்படி கிடைக்கும்? விழாக்களிலும், முக்கியவைபவங்களிலும் பாடப்படும் தேசியகீதத்தில் கூட தமிழுக்கு சரி பங்கு கொடுக்க மறுத்தவர்கள், மறுப்பவர்கள் எப்படி நாட்டில் தமிழுக்கும் தமிழர்களுக்கும் நீதியான தீர்வை வழங்குவார்கள்? எப்போதுமே சிங்களம் என்ற முதன்மையின் கீழேயே தமிழ் ஒண்டிக் கொண்டிருக்கவேண்டும் என்பதே பேரினவாதிகளின் எண்ணம். அந்த எண்ணத்தின் ஓர் வெளிப்பாடே தனிச் சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதத்தை பாட முடியும் என்ற அரசின் தீர்மானம்.

எல்லாவற்றையும் காலம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. யார் கண்டது, என்றோ ஒருநாள் காலம் நமக்கொரு பாட்டெழுதக்கூடும். அன்றைக்கு தனித் தமிழில் மட்டுமே நமக்கென்றான தேசியகீதத்தை நாங்கள் பாடவும் கூடும்.

சஞ்சய் தத்துக்கு கழியுமா தத்து?

■ தகனன்

12.3.1993 அன்று மும்பையில் அடுத்தடுத்து 17 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இதில் பலர் பலியாகினர்; ஆயிரத்துக் கும்மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

பகல் 1.30 மணிக்கு மும்பை நரிமன்முனை அருகே 28 மாடிகள் கொண்ட பங்குச் சந்தைக் கட்டடத்தில் ஆரம்பித்த சங்கிலித் தொடர் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சுமார் ஒரு மணிநேர இடைவெளிக்குள் 12 இடங்களில் தொடர்ச்சியாக சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தன, இதில் 257 பேர் உயிரிழந்தனர். 713 பேர் படுகாயம் அடைந்தனர். 27 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமானதாக மதிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் 1993 நவம்பர் 4ஆம் திகதி, ஒன்பதாயிரத்து 392 பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரிகையை சி.பி.ஐ., தாக்கல் செய்தது. தாவூத் இப்ராகிம், டைகர் மேமன் உட்பட 189 பேர் மீதுகுற்றம் சாட்டப்பட்டது. பிரபல பொலிவூட் நடிகர் சஞ்சய் தத், நிழல் உலகதாதா அபு சலீம் உட்பட பல முக்கிய பிரபலங்கள் மீதும்குற்றம் சுமத்தப்பட்டது.

மும்பை ஆர்தர் ரோடு சிறையில் ஏற்படுத்தப்பட்ட சிறப்பு தடா நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

1995 ஜூன் 30ஆம் திகதி விசாரணை ஆரம்பித்தது. 10 வருடங்களுக்கு மேலாக நடந்த வழக்கில் 2006 இல் தீர்ப்புக் கூறப்பட்டது. இதில் மொத்தம் 100 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 12 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

சஞ்சய் தத் மீது இந்தியத் தண்டனை சட்டத்தின் கீழ் 10 பிரிவுகள், தடா சட்டத்தின் படி ஐந்து பிரிவுகள் உட்பட 24 பிரிவுகளில் சி.பி.ஐ. வழக்குப் பதிவுசெய்தது. இதில் நடிகர் சஞ்சய் தத்திற்கு ஆறு வருடம் கடுங்காவல் தண்டனையும், 25, 000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இவ்வளவு கடுமையான தண்டனை சஞ்சய் தத்திற்குக் கிடைத்தது எப்படி?

சஞ்சய் தத்தின் நண்பன் தாவூத் இப்ராகிம்!

நடிகர் சஞ்சய் தத் வேட்டைப் பிரியர். அதனால் வீட்டில் அனுமதிப் பத்திரம் உள்ள மூன்று துப்பாக்கிகள் வைத்திருந்தார். அவற்றில் இரு துப்பாக்கிகள் ''டபுள் பரல்'' துப்பாக்கிகள். இந்நிலையில் துபாய்க்கு ''யால்கர்'' 'படசூட்டிங்'கிற்குபோனார் சஞ்சய் தத். அங்குசூட்டிங் நடந்து கொண்டிருந்த இடத்திற்கு வந்த தாவூத் இப்ராகிமுடனும் அவர் தம்பி அனீஸுடனும் சஞ்சய் தத்திற்குப் பழக்கம் ஏற்படுகிறது.

இது ஒருபுறமிருக்க மும்பையில் நடைபெற்ற கலவரங்கள் போன்றவற்றில் சஞ்சய் தத்தின் தந்தை சுனில் தத் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு மட்டும் உதவிசெய்கிறார் என்ற குற்றச்சாட்டு பா.ஜ.க. மற்றும் சிவசேனா அமைப்புகளால் முன் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் காலகட்டத்தில் தான் மும்பை குண்டு வெடிப்பு நிகழ்கிறது. அந்த வழக்கைசி.பி.ஐ. விசாரிக்கிறது.

சிக்கிய சஞ்சய் தத்

விசாரணையின் முதல் கட்டமாக தாவூத் இப்ராஹிமின் குழுவைச் சேர்ந்த கனீப், சமீர் ஆகிய இருவரையும் சி.பி.ஐ. கைது செய்கிறது. இந்தத் தகவல் மொரிஷீயஸில் சூட்டிங்கில் இருந்த சஞ்சய் தத்திற்குத் தெரியவரவே அவர் மிகவும் பதறிப் போகின்றார். ஏனென்றால் இவர்கள்தான் மூன்று ஏ.கே- 56 ரைபில் மற்றும் 250 ரவுண்ட் குண்டுகள், 9 எம்.எம். ரிவால்வர், கையெறிகுண்டுகள் என எல்லாவற்றையும் சஞ்சய் தத்திற்கு விற்றவர்கள்.

பதறிப்போன சஞ்சய் தத் தன் ''வேட்டைநண்பர்'' நுல்வாலாவை போனில் கூப்பிட்டு, ''என் வீட்டுக்குப் போ. அந்த அறையில் உள்ள ஏ.கே.-56 மற்றும் ரிவால்வர் எல்லாவற்றையும் எடுத்து அழித்துவிடு. இல்லையென்றால் எனக்குப் பிரச்சினையாகிவிடும்''என்கிறார். அதன் படியே அந்த நண்பரும் தத் வீட்டிற்கு சென்று அந்தத் துப்பாக்கிகளை எடுத்து உடைத்து அழித்து விடுகிறார். இதை அவரே நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ஆனால் அதற்குள் மும்பை பத்திரிக்கைகளில் ''சஞ்சய் தத்திடம் ஏ.கே.-56 ரைபிள் இருக்கிறது''என்று செய்திகள் வெளிவரத் தொடங்கின. நிலைமை சிக்கலாகவே சஞ்சய் தத் சூட்டிங்கிலிருந்து கிளம்பி மும்பை வருகிறார். வரும்போது மும்பை பொலிஸார் விமான நிலையத்தில் அவரை கைது செய்கிறார்கள்.

சஞ்சய் தத் செய்த குற்றங்கள் என்ன?

தாவூத் இப்ராகிமை சந்தித்தமை, தாவூத்தின் தம்பி அனீஸை சந்தித்தமை, அடிக்கடி அனீஸுடன் டெலிபோனில் பேசியமை, லைசென்ஸ் உள்ள துப்பாக்கிகள் (வேட்டைக்காக) வைத்திருந்தும் மூன்று ஏ.கே.-56 ரைபிள்களை வாங்கியமை, லைசென்ஸ் இல்லாமல் வைத்திருந்தமை, ஆதாரங்களை அழித்தமை போன்று பல குற்றச்சாட்டுகள் சஞ்சய் தத் மீதுசுமத்தப்பட்டன.

இறுதியில் ''சட்டவிரோதமாக ரைபிள் மற்றும் குண்டுகள் வைத்திருந்த சஞ்சய் தத் குற்றவாளி'' என்று தீர்மானிக்கப்பட்டு, அவருக்கு ஆறு ஆண்டுகாலம் கடுங்காவல் தண்டனையும், 25000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. ஒரேயொரு நிவாரணம் சஞ்சய் தத்திற்கு கிடைத்தது. அது ''ரைபிள் வைத்திருந்தது தீவிரவாதச் செயலுக்கு அல்ல. சொந்த பாதுகாப்பிற்கு'' என்பதுமட்டுமே.

இந்த அடிப்படையில் இந்திய உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்த சஞ்சய் தத் தன் மீதான தண்டனையைரத்துச் செய்யக் கோரினார்.

> செய்தியாளர்களிடம் பேசிய போது சஞ்சய் தத் உணர்ச்சிவசப் பட்டு அழுதும் விட்டார். மேலும் ''நான் சட்டத்திற்கு கீழ்படியும் ஒரு இந்தியக் குடிமகன். நான் சுப்ரீம் கோர்ட் மீது அதிக மதிப்பு வைத்துள்ளேன். நான் அனைத்து உத்தரவுக்கும் கீழ்படிவேன். நான் கொடுக்கப் பட்டுள்ள நாள்களில் சரண் அடைவேன். நான் மன்னிப்புக்கு முறையிடமாட்டேன்'' என்றார்.

முதன் முதலாக குற்றம் செய்வோரை மன்னித்துத் திருந்துவதற்கு வழி கொடுத்து விடுதலை செய்யும் சட்டத்திற்கமைய தன்னை விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நீதிபதி சதாசிவம் தலைமையிலான உயர்நீதிமன்ற ஆயம், சஞ்சய் தத்திற்கு எதிராக கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள், சஞ்சய் தத்தே கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம், உள்ளிட்ட அனைத்து விஷயங்களையும் அலசியது. இறுதியில், குற்றத்தின் தன்மை மற்றும் சூழ்நிலைகள் மிகவும் கடுமையாக இருக்கின்றன. அதனால் முதன் முதலாக குற்றம் செய்வோரை மன்னித்துத் திருந்துவதற்கு வழி கொடுத்து விடுதலை செய்யும் சட்டத்தின்கீழ் சஞ்சய் தத்தின் விஷயத்தை பரிசீலிக்கமுடியாது. ஆனால் ஒட்டுமொத்த வழக்கின் விவரங்களை கவனத்தில் எடுத்துக் கொண்டு சஞ்சய் தத்திற்கு வழங்கப்பட்ட ஆறு வருடசிறை தண்டனையை ஐந்து வருடமாகக் குறைக்கிறோம்'' என்று தீர்ப்பளித்திருந்தது.

மன்னிப்புக் கிடைக்குமா?

இப்போது சஞ்சய் தத்தின் தண்டனையை ஆளுநர் ரத்துச் செய்ய வேண்டும் என்றகோரிக்கை எழுந்திருக்கிறது. அரசியல்சட்டப்பிரிவு 161 இன் படி ஆளுநருக்கு தண்டனையை ரத்து செய்யவோ, குறைக்கவோ அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த அதிகாரத்தை ஆளுநர் தன்னிச்சையாக பயன்படுத்தமுடியாது. மாநில அமைச்சரவையின் பரிந்துரை அல்லது அறிவுரையின் பேரில்தான் இந்த அதிகாரத்தை ஆளுநர் பயன்படுத்த முடியும். இதற்கமைவாகவே சஞ்சய் தத் விடுவிக்கப்படவேண்டும் என்ற குரல்கள் வலுத்து வருகின்றன.

இந்நிலையில் மிக அண்மையில் செய்தியாளர்களைச் சந்தித்து பேசிய நடிகர் சஞ்சய் தத், தான் ''சரணடையப் போகிறார்'' எனக் கூறியுள்ளார். மேலும், ''நான் மன்னிப்புக் கோரி முறையிடமாட்டேன்'' என்றும் கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய போது சஞ்சய் தத் உணர்ச்சிவசப் பட்டு அழுதும் விட்டார். மேலும் ''நான் சட்டத்திற்குக் கீழ்படியும் ஒரு இந்தியக் குடிமகன். நான் சுப்ரீம் கோர்ட் மீது அதிக மதிப்பு வைத்துள்ளேன். நான் அனைத்து உத்தரவுக்கும் கீழ்படிவேன். நான் கொடுக்கப்பட்டுள்ள நாள்களில் சரண் அடைவேன். நான் மன்னிப்புக்கு முறையிடமாட்டேன்'' என்றார்.

எனினும் முன்னாள் நீதிபதிகள், திரையுலக பிரபலங்களான அமிதாப், ரஜனிகாந் உள்ளிட்டோரும் சஞ்சய் தத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றனர். தனதுவேட்டையாடும் பழக்கத்தினால் சிக்கலில் மாட்டிக்கொண்ட நடிகர் சஞ்சய் தத் எதிர்வரும் 5 ஆண்டுகளைச் சிறையிலே கழிக்க வேண்டிய நிலை ஏற்படுமா? அல்லது அவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுமா? என்பது இன்னும் சிலநாள்களில் தெரிந்துவிடும். ★

தருவது வித்தியா

இன்றைய நாள்

உங்களுக்கு எப்படி?

மேடம்: உங்களது குறிக்கோளை எட்டிப் பிடிக்க முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் அடிமனதில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிட்டும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் கிட்டும்.

இடபம்: குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்துக் கொடுத்துப் போவது நல்லது. நெருங்கியவரிடம் உங்களின் மனக் குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

மிதுனம்: அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தி யோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

கடகம்: முகப்பொலிவு கூடும். அதிகாரப்பூர்வமாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

சிங்கம்: கணவன்-மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். வருங்காலத்திற்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத் தில் சகஊழியர்களின் ஆதரவு கிட்டும். அரசு காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். தாய்வழி உறவினர்களால் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.

கன்னி: தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

நாளை

பங்குனி-28 புதன்கிழமை 10.04.2013
திதி: அமாவாசை பி.ப.03.40 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.இ. 09.57 வரை
சுபநேரம்: 04.36- 06.06 வரை
இராகுகாலம்: 12.06- 01.36 வரை

துலாம்: மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். கன்னிப்பெண்களுக்கு உடல்நிலை சீராகும். உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும்.

விருச்சிகம்: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை விலகும். மனதுக்குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். தாயின் உடல் நலம் சீராகும். மனநிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

தனுசு: நண்பர்கள், உறவினர்களுடன் உரிமையில் வரம்பு மீறிப் பேச வேண்டாம். முன் கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

மகரம்: பழைய கசப்பான சம்பவங்களைப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். பிள்ளைகளின் வருங்காலம் குறித்த கவலைகள் வந்து போகும். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

கும்பம்: நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். கணவன் -மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும்: உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் நன்மை பிறக்கும். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள்.

மீனம்: சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் உடல் நலம் சீராக இருக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

சுடோக்கு

எண் விளையாட்டு

			8			3	4	7
4		5				6		
	8		3	9	4		1	
1		7			6			2
	2	4				9	5	
6			2			1		3
	7		9	5	1		6	
		1				7		9
8	4	9			2			

நேற்றைய சுடோக்கின் விடை

4	7	1	8	5	9	2	3	6
9	2	5	7	3	6	4	1	8
8	6	3	4	2	1	5	7	9
3	4	8	1	9	2	7	6	5
7	1	2	5	6	8	9	4	3
5	9	6	3	4	7	1	8	2
1	5	4	2	8	3	6	9	7
6	3	7	9	1	5	8	2	4
2	8	9	6	7	4	3	5	1

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
வீரசிங்கம் திலகவதி
மலர்வு
28.11.1958

உதிர்வு
10.03.2013

என்றும் புன்னகை பூத்த பூ முகம் எங்கள் அம்மா!
சூரியகாந்தி பூவைபோல் அழகிய முகம் எங்கள் அம்மா!
ரோஜா பூப்போல் எல்லோரையும் கவரும் முகம் எங்கள் அம்மா!
என்றும் வாசனைதரும் மல்லிகைப் பூவைபோல்
குணம் படைத்தவள் எங்கள் அம்மா!
அம்மா! நீ எங்கு சென்றாலும் வீடு வந்து சேரும் வரை
வழி மேல் விழிவைத்து இருப்போமம்மா! வந்துவிட்டால்
இருளைவிரட்டிய சூரியனைக்கண்ட பூமி போல்
மலர்ச்சி வரும் எங்கள் உள்ளத்தில் அம்மா!
ஆனால் சிவராத்திரி அன்று நீ சிவனிடம் போய்விட்டாய்!
நாம் நீ வருவாய் வருவாய் என காத்திருந்து காத்திருந்து
இன்று வரைக்கும் நீ வரவில்லை.
ஏன் போன வழி ஒரு வழி எனத் தெரியாதோ!
ஆம்! நீ போன வழி ஒரு வழிதான் அம்மா!
நாம் இப்போதுதான் அறிகின்றோம் அம்மா!
இறைவா எங்கள் அம்மாவை உன் நிழலில் வைத்துக்கொள்.
தாயே! உனது ஆத்மா சாந்தி பேற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குல தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்.
அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும்
எங்களோடு நின்று தோள்கொடுத்து உதவிய உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

கடந்த (10.03.2013) சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி வீரசிங்கம் திலகவதி அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

மலர்வு
18*05*1932

உதிர்வு
10*03*2013

அமரர் கந்தையா கனகரத்தினம்

நீங்கள் சென்று முப்பத்தொரு நாள்கள்
கழிந்து விட்டன வாடுகிறோம் நாளும்
உமை நினைத்து வானத்திலிருந்து
வழிகாட்டுங்கள் எங்களுக்கு.

கடந்த 10.03.2013 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர் கந்தையா கனகரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலம் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், தபால் மூலம் அனுதாபம் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி நுணாவில், சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

அரசிலிருந்து மு.கா. வெளியேறினால் சிங்கள- முஸ்லிம் கலவரம் ஏற்படும்

அது குறித்து எம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்கிறார் தவம்

மட்டக்களப்பு,ஏப்.9

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இல்லாமல் இருந்திருந்தால் பொது பல சேனாவால் மேற்கொள்ளப்படும் பிரசாரத்துக்கு சிங்கள - முஸ்லிம் இனக்கலவரம் ஏற்பட்டிருக்கும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்குள் இருக்கின்றமையால் தான் அவ்வாறான ஓர் இனக் கலவரம் ஏற்படவில்லை.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவம் கூறினார்.

அக்கரைப்பற்றில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது இடம்பெற்றுவருகின்ற அசாதாரண சூழ்நிலையை கவனத்திற்கொண்டு முஸ்லிம்கள் விழிப்பாக இருக்கவேண்டும். மக்களை விழிப்பூட்ட வேண்டிய தேவை நமக்கிருக்கிறது.

தற்போது ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரான சக்திகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இருந்து வெளியேற வேண்டும் என்று கூறுகின்றன. அரசில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியேற வேண்டுமென்று கூறுகின்றவர்கள் அவர்களுடைய இழிவான அரசியல் நோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டே இவ்வாறு கூறுகிறார்கள்.

பெரும்பான்மை சமூகத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இருந்து வெளியேறினால் ஆட்டம் காணுமா என்ற கேள்வியை வெளியேற வேண்டும் என்று கூறியவர்கள் தங்களுக்குள் கேட்டுக்கொள்ளவேண்டும்.

இப்போது முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இருக்கின்ற காரணத்தினால் ஜனாதிபதியை சந்திக்கமுடிகிறது. அமைச்சரவையிலே முஸ்லிம்களுடைய பிரச்சினைகளை பேசமுடிகிறது, அரசில் இருக்கின்ற கட்சித்தலைவர்களை சந்தித்து பேசமுடிகின்றது.

அதே போன்று, பொது பல சேனா போன்ற அமைப்புகள் மேற்கொள்கின்ற சமூக விரோத செயல்களுக்கு எதிராக சட்டத்தை உருவாக்கக் கூடிய அழுத்தத்தைக் கொடுக்க முடிகின்றது.

எல்லாவற்றையும் அரசில் இருந்து வெளியேறிய பின்னர் செய்ய முடியுமா என்பதையும் இப்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இருந்து வெளியேற வேண்டும் என்பவர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும். - என்றார். (ச)

இலங்கையில் உஷ்ண நிலை என்றுமில்லாதவாறு உச்சத்தில்

திரவ உணவை உட்கொள்ளுங்கள் அதிக தண்ணீரை அருந்துங்கள்

கொழும்பு,ஏப்.9

நாடெங்கும் வெப்பநிலை மக்களால் தாங்கமுடியாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது. கடந்த 5 ஆம் திகதி முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை சூரியன் இலங்கைக்கு மேலாக நிலைகொண்டிருப்பதால்தான் உஷ்ண நிலை மோசமடைந்துள்ளது. வெப்ப நிலையால் சரும ரோகங்கள், வியர்க்குரு போன்றவற்றின் தாக்கம் அதிகரித்துள்ளது. அதனால் உடம்பு முழுவதும் வியர்க் கும் போது எரிச்சலை ஏற்படுத்துகிறது.

வெப்பத்தின் தாக்கத்தை ஈடுகொடுக்க வேண்டுமாயின் மக்கள் கூடுதலான திரவ உணவை உண்ண வேண்டும். அவை எல்லாவற்றிலும் சுத்தமான குடிதண்ணீரை அதிகமாகப் பருகுவதே வெப்பத்தை சம நிலைப்படுத்துவதற்கு பேருதவியாக அமையும் என்று சமூக வைத்தியத்துறையின் பேராசிரியர் ரோஹினி செனவிரட்ன தெரிவித்தார். குடிதண்ணீருடன் இளநீர், பழ வகைகளை பிழிந்து குடித்தல் போன்றவை உடலில் நீர்த்தன்மை குறையும் தாக்கத்தை ஈடுசெய்யக் கூடியதாக இருக்கும் என்று அவர் கூறினார்.

வெப்பத்தின் தாக்கத்திலிருந்து தப்புவதற்காக இந்த மாத இறுதி வாரத்தில் நுவரெலியாவுக்கு செல்பவர்களுக்கு நோய்கள் ஏற்படலாம் என்று வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஏப்ரல் மாத விடுமுறைக் காலத்தில் மக்கள் தொகை அதிகரிப்பதனால் நுவரெலியா நகரமே மிதமிஞ்சிய தூசியின் தாக்கத்தினால் பாதிக்கப்படுகின்றது.

எனவே நுவரெலியாவுக்கு தங்கள் பிள்ளைகளை அழைத்துச் செல்பவர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். (ச)

சிறைக் காவலாளியை தாக்கிவிட்டு தப்பிச் சென்ற கைதி

கண்டி, போகம்பரை சிறைச்சாலைக் கைதி ஒருவர் சிறைக் காவலாளியைத் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். இவ்வாறு தப்பிச் சென்றவர் அவிசாவளை பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதான ஒருவர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் குறிப்பிட்டனர். இவர் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகக் கூறி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்தவரான நபரே தப்பிச் சென்றுள்ளார் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். தப்பிச் சென்ற குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

தொழிலாளர் வாழ்வாதாரத்தை ஏமாற்றிய கூட்டு ஒப்பந்தம்

அரசியல்வாதிகளின் இருப்பையும் பாதிக்கும் என்கிறார் பாஸ்கரா

நுவரெலியா,ஏப்.9

தொழிலாளர் சம்பளத்தை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தம் தொழிலாளர்களுக்கு வாழ்வாதார ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசியல்வாதிகளின் இருப்பின் வீழ்ச்சிப் பயணமாகவும் இது அமையும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆங்கிலேயர் காலம் தொடக்கம் அடிப்படை வசதிகள் அற்று வாழ்ந்து வரும் சமூகமாக மலையக தொழிலாளர் வர்க்கம் காணப்படுகிறது. அன்றாட வாழ்வாதார தேவைகளுக்காக பல போராட்டங்களை நடத்தி இன்றும் கூட அவர்கள் வெற்றியடையாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

அவர்களது வாழ்வாதாரம் அடிமை வாழ்வாதாரமாகவே காணப்படுகின்றது. அவர்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் செல்பவர்களின் பாராமுகப் போக்கு அவர்களின் வளர்ச்சியில் ஓர் வீழ்ச்சியாகவே காணப்படுகிறது. ஆனால் இலங்கையின் வருமானத்தை ஈட்டித் தரும் முக்கிய துறைகளில் தொழிலாளர்களாக அவர்கள் சேவையாற்றுகின்றனர்.

இந்த மக்களின் சம்பளத்தில் காட்டிக்கொடுப்பான ஏமாற்றமான ஒப்பந்தங்கள் தொழிலாளர்கள் தொழிலை மாற்ற வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். தொழிலாளர் பற்றாக்குறையான இந்தக் காலகட்டத்தில் தொழிலாளர்கள் வேறு மாவட்டங்களில் சென்று வேறு தொழிலை செய்து தமது இருப்பை மாற்ற முனையும் பொழுது, அரசியல்வாதிகளின் இருப்பும் கேள்விக்குறியாக மாறும். வடக்கில் கடந்த காலங்களில் நடைபெற்ற போரால் வடக்கு மக்களின் இடப்பெயர்வு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதை காணக் கூடியதாகவுள்ளது. இப்படியான சூழ்நிலைகள் மலையகத்திலும் ஏற்படாமல் இருக்க தொழிலாளர்களது சம்பளங்கள், வாழ்வாதாரம் ,உரிமைகள் பேணப்படுதல் அவசியமானது.-என்றார். (ச)

மரண அறிவித்தல்

மயில்வாகனம் பொன்னுத்துரை

(இளைப்பாறிய நடத்துநர், இ.போ.ச)

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், 43/20, குலுடா கொட வீதி, கல்கிசையைத் (Mountlavaniya) தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பொன்னுத்துரை கொழும்பில் (06.04.2013) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், சரவணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிய ரின் அன்பு மருமகனும், கருணாநிதியின் அன்புக் கணவரும், அருணாசலம் (இளைப்பாறிய பிரதி அதிபர்-யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புச் சகோதரனும், பரணிதரன் (ஜேர்மனி), சிற்சபேசன் (பாங்கொக்), கவிதா (லண்டன்), ரஜனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மஞ்சுளா (ஜேர்மனி), சிவதர் மிகா (அமெரிக்கா), சசிகுமார் (லண்டன்), றாகவன் (கனடா) ஆகியோ ரின் அன்பு மாமனும், அஸ்வின் (லண்டன்), அஸ்வினா (லண்டன்), அர்ச்சுன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை மீசாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ம. அருணாசலம் - 077 768 1166,
பொ. பரணிதரன் - 0049 152 145 49617,
பொ. சிற்சபேசன் - 0015 102 743 555,
ச. கவிதா - 0044 208 997 76068,
றா. ரஜனி - 0016 472 821 408.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
ம. அருணாசலம்
(சகோதரன்),
மீசாலை வடக்கு, மீசாலை.

(ச.8279) (45.6)

வீடு வாடகைக்கு உண்டு
யாழ்.கல்விக் கந்தோருக்கு அருகில் மூன்று அறைகள், ஹோல், குசினி, குளியல்/ மலசல அறைகள் கொண்ட வீடு, நல்ல பிரயோசனங்களுடன் வாடகைக்கு உடனடியாக உண்டு.
தொடர்பு: 021 222 8582 (35813) (6.7.11)

யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
City & Guilds A1, A2, B1 B2
(ESOL) Diploma International English for Speakers of other Languages
சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
(சித்தியடையாவிட்டால் கட்டணம் மீளளிக்கப்படும்)
திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.
IELTS • Unique Test Tips • Latest course Materials (Duration: 50 hrs with 5 mock exams)

Spoken English Veta Fluency Diploma
வார இறுதிநாள் (c/8274)
புதிய பிரிவுகள் ஆரம்பம்
13/4/2013 காலை 9.00 மணி
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி, (எயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி, (மக்கிய கலவிக்கியாலை முன்பாக) Tel.:021-226 2470
சாவகச்சேரி கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டோஸ் சந்தி Tel.:021-224 1970

தவறிவிட்டது
வல்லை முனியப்பர் கோயிலுக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் முக்கிய ஆவணங்களுடன் பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 923 2436 (35325) (6.7.11)

திருமண சேவை
1977, அத்தம்,2 இல் செவ்வாய், 12 பாவம், கனடா சிற்றிசன். வந்துள்ள மணமகனிற்கு மணமகள் தேவை.
தொடர்பு: துர்க்கா திருமண சேவை
077 818 5978 (35808)(6.7.11)

புவி வெப்பமடைவதால்

இந்திய நகரங்களுக்குள் கடல்நீர் புகும் அபாயம்

கொல்கத்தா ஏப் 9

புவி வெப்பமடைவதால், எதிர்காலத்தில், கடல் நீர்மட்டம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. இதனால்,கொல்கத்தா , ஷாங்காய், தாகா போன்ற கடலோர நகரங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது, என, பிரபல விஞ்ஞானி, ஆர்.கே.பச்சோரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

சுற்றுச்சூழல் பாதிப்புகளால், புவி, வேகமாக, வெப்பமயமாகி வருகிறது. இதனால், பனிப் பாறைகள் உருகி, கடல் நீர் மட்டம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எதிர்காலத்தில், இந்த அபாயம் ஏற்படலாம்.கடல் நீர்மட்டம் அதிகரிப்பதால், உலகெங்கும் உள்ள, கடலோர நகரங்களுக்குள், கடல்நீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கொல்கத்தா, ஷாங்காய், தாகா போன்ற நகரங்களுக்கு, பெரும் பாதிப்பு ஏற்படலாம்.இந்த அபாயத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு, சர்வதேச நாடுகள், இப்போதிருந்தே நடவடிக்கை எடுக்க வேண்டும். சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுப்பதன் மூலம், இந்த பிரச்சனைக்குத் தீர்வு காணலாம்.

சேது சமுத்திர திட்டம்:

சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, எனது தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. பொருளாதார ரீதியாகவும், சுற்றுச்சூழல் அடிப்படையிலும், இந்தத் திட்டம், சாத்திய மற்ற ஒன்று என, குழு அறிக்கையில் தெரிவிக் கப்பட்டு உள்ளது.எனது தலைமையிலான, குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள், உறுதியானவை. இனி மேல், இந்த விவகாரத்தில், அடுத்த கட்ட முடிவை, மத்திய அரசு தான் எடுக்க வேண்டும், எனவும், பச்சோரி கூறினார்.(ந)

விளையாட்டு உபகரணம் இன்று கையளிப்பு

தென்மராட்சி, ஏப். 9

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாவகச்சேரி கிளையால் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு இன்று விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்படவுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வராஜாவால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கபடவுள்ளன என்று மன்ற சாவகச்சேரி பிரிவு இணைப்பாளர் த.விமலதாஸ் தெரிவித்தார். (ம-9)

மாணவர்கள் கல்வியின் ஊடாக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

பரிசில் வழங்கும் நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 9

கல்வி என்பது ஒரு மாற்றம். இந்த மாற்றத்தின் ஊடாக எமது செயற்றிட்டங்களைக் கொண்டு செல்ல வேண்டும். இதுவே எமது வாழ்க்கையை சிறந்த முறையில் அமைத்துக் கொள்ள வாய்ப்பாக அமையும் என்று யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் சுப்பிரமணியம் தியாகலிங்கம் தெரிவித்தார்.

கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையின் ஏற்பாட்டில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மக்களுக்கு யுத்த காலத்தில் வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட சேமிப்பே வாழ்வாதாரத்துக்கு கைகொடுத்தது. இதனைப் போன்று மாணவர்களின் கல்வியை மேம்படுத்த இந்தச் சேமிப்புப் பழக்கம் உதவியாக இருக்கும். இந்த அரிய செயற்றிட்டத்தை வங்கிகள் மேற் கொண்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் 10 வீதமான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வங்கிகள் மூலமாக பரிசு பெற்று வருகிறார்கள்.

மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான செயற்றிட்டங்கள் சகல பாடசாலைகளிலும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் குறைந்தது 70 புள்ளிகளுக்கு மேல் மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என்பது எதிர் பார்ப்பாகவுள்ளது. இதுவே கல்வி அமைச்சின் நோக்க மாகவுள்ளது.

சித்தியடைந்தவர்கள், சித்தியடையாதவர்கள் என்று மாணவர்களை வித்தியாசப் படுத்த முடியாது. சகல மாணவர்களும்திறமையுடையவர்கள்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகளவான மாணவர்கள் திறமையான புள்ளிகளை பரீட்சையில் பெற்றிருக்கிறார்கள். சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றவர்கள் வங்கிகளில் சேமிப்பதன் மூலம் தமது கற்றலை மேம்படுத்த முடியும். -என்றார். (எ-14)

சரவணா ரெக்ஸ்
SARAVANA TEXS

பிறக்கப்போகும் விஜய புதுவருடத்தை முன்னிட்டு மிகப் பிரமாண்டமான
புத்தம்புது தொழிவுகளுடன் மாபெரும் அசரவைக்கும்

மலிவு விற்பனை

சிறுவர் முதல் பெரியவர் வரை
அனைவருக்குமான ஆடைகள் ஒரே இடத்தில்

04.04.2013 முதல்
13.04.2013 வரை

★ இறுதியாக வெளிவந்த புதுப் புது டிசைன்களுடன்
பஞ்சாபிகள் பல விலைகளில்....

★ Office Wear Cotton Saree (W/B)
Rs. 950/= 500/=

★ Office Wear கொட்டன் பஞ்சாபி துணிகள்
Rs.1350/= 950/=

★ திரட்வேக் கொட்டன் பஞ்சாபி துணிகள்
Rs.2300/= 1250/=

★ இந்தியன் கல்கி கவுண் Rs.680/= 350/=

★ இந்தியன் செல்வி கவுண் Rs.680/= 350/=

★ இந்தியன் சில்க் பஞ்சாபித் துணிகள்
Rs.1080/= 750/=
Rs.1680/= 1250/=

★ இந்தியன் சில்க் சாறி Rs.1190/= 750/=

★ ஒரு சேட்டும் ஜீன்ஸ் துணியும் Rs.1000/=

★ ஒரு லெந்தும் 15 Cm உம் உடைய ஜீன்ஸ்
துணி Rs.500/=

★ பூட்டுமார்க் நம்பர் 01 சாரம் (999) Rs.600/=

★ ரெடிமேற் ஜீன்ஸ் சோக்கோ (Prova)
Rs.2600/= 1800/=

மற்றும் சிறுவர்கள் அனைவருக்குமான
ஆடைகளையும் மலிவாகப் பெற்றுக்கொள்ள.....

சரவணா ரெக்ஸ்
(களஞ்சியசாலை)
சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(டாக்டர் கெங்காதரன் மருத்துவமனை அருகில்)

(C/8278(2.6.7)

PATRICIAN INSTITUTES
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன
ஆரம்பம் : 15.04.2013

1. COMPUTER COURSES (கணினி பயிற்சிநெறி)

A. Advanced in Computer programming	Duration 8 Months
B. Diploma in Microsoft Office	Duration 4 Months
C. Diploma in Desk Top Publishing	Duration 4 Months
D. Diploma in Video Editing	Duration 4 Months
E. Diploma in Type Setting	Duration 3 Months
F. Diploma in Computerized Accounting	Duration 4 Months
G. Diploma in Software Engineering	Duration 6 Months
H. Diploma in Micro media	Duration 4 Months
I. Diploma in web Multimedia	Duration 4 Months
J. Professional Diploma in Graphic Design	Duration 6 Months
K. Computer Hardware Technology	Duration 4 Months
L. Inernet &E.mail	Duration 1 Month
M. General Information Technology (GIT)	Duration 4 Months
N. Information&Communication Technology (ICT)	Duration 4 Months
O. Children's Kids	Duration 4 Months

2. Short Hand Typing (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
3. Short Hand Typing (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
4. Sewing (தையல்)
5. General Moto Mechanism (மோட்டார் வாகனம் திருத்தல்)
6. General Electrician (ஜெனரல் எலக்ரீசியன்)
7. Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
8. Arc Welding (மின் ஒட்டுநர் ப்யிற்சி)
9. Carpentry (மரவேலை)
10. Refrigeration and Air Conditioning (குளிர்சாதனப் பெட்டி திருத்துதல்)
11. General motor cycle Mechanism (மோட்டார் சைக்கிள் திருத்தல்)

மேலதிக விவரங்களுக்கு:

Registrar,
Patrician Institute,
61,(59), St.Patrick's Road, Jaffna.
T.P.: 021 222 6148,
Fax: 021 222 6148.
Email: Spitee@Sltnet.lk. (C/8276)(5.6.7)

நல்லூர் மத்தியஸ்த சபை சனிக்கிழமை நடைபெறும்

பிரதி ஞாயிற்றுக்கிழமை களில் நடைபெறும் நல்லூர் மத்தியஸ்த சபையின் அமர்வு சித்திரைப் புத்தாண்டு காரண மாக 14ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை நடைபெறமாட் டாது.

பதிலாக எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை மத்தியஸ்த சபையின் அமர்வு நடைபெறும் என சபைத் தலைவர் நா.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (ந)

செல்லப்பா சுவாமிகளின் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்.9

செல்லப்பா சுவாமிகளின் 98 ஆவது குருபூசைத் தினம் நாளை மறுதினம் வியாழக் கிழமை நல்லூரில் உள்ள சுவாமியின் நினைவாலயத் தில் காலை 8 மணிக்கு நடை பெறவுள்ளது.

நிகழ்வில் தேவார பண் ணிசையும், நற்சிந்தனைப் பாடல்களும் இடம்பெறும். தொடர்ந்து சுவாமியின் நினை வாலயத்திலும், தேரடியிலும் பூசைகள் நடைபெற்று மகேஸ்வர பூசையும் இடம் பெறும். (ந)

உதவிப் பணம் பெறுபவர்களுக்கு மீளாய்வு

யாழ்ப்பாணம், ஏப். 9

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட 25 கிராம அலுவலர் பிரிவுகளில் மாதாந்த உத விப்பண மீளாய்வு மீண்டும் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலக சமூக சேவை அதிகாரி வீ.அருந்த வராசா தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் இடம்பெறும். முதற்கட்டமாக ஜே/169 பிரிவுக்குட்ட தொல் புரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி ஜே/181 சங் கானை மத்தி வரை இடம் பெறும்.

எனவே சகல பொதுசன மாதாந்த உதவியைப் பெறு பவர்கள் குடும்ப அட்டை, மாதாந்த உதவி பண அட் டையுடன் சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளது. (ந-50)

இரட்டைக் குடியுரிமை விவகாரம்;

இத்தாலியில் இலங்கையர் இறந்தால் உடலை எடுத்துவர முடியாத நிலை

கொழும்பு, ஏப். 9

இத்தாலியில் வசிக்கும் இரட்டைக் குடியுரிமை வழங்கப்படாத இலங்கையர் ஒருவர் அங்கு இறந்தால் அவரது உடலை இலங்கைக்கு எடுத்து வருவதற்கு இத்தாலிய அரசு அனுமதிக்காது என்பதால் அங்குள்ள இலங்கையர்கள் பெரும் மனக்கவலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு இத்தாலியிலுள்ள இலங்கைப் பிரஜைகள் அமைப்புகள் பலவற்றின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் இலங்கையர்கள் இத்தாலியில் வசிக்கின்றனர். அவர்களுள் பலருக்கு இரட்டைக்குடியுரிமை வழங்கப்படவில்லை.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து இலங்கை அரசும் கூட இரட்டைக் குடியுரிமை வழங்குவதை இடைநிறுத்திவிட்டது.

இதன் காரணமாக இத்தாலியில் வசிக்கும் இலங்கையர் ஒருவர் இறந்தால் அவரது இறுதி விருப்புரிமையின் பிரகாரம் இலங்கையில் இறுதிச் சடங்குகளை மேற்கொள்ள முடியாது. எனவே இதற்குத் தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு இத்தாலியிலுள்ள இலங்கைப்பிரஜைகளின் அமைப்புகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (க-22)

தென்மராட்சி பிரதேச செயலக சர்வதேச மகளிர் தின விழாவில் சுயதொழில் உதவிக் கடன் பெற்று தனது குடும்பத்தின் வாழ்வாதார செயற்பாடுகளை மேம்படுத்திய சங்கத்தானை மகளிர் சங்கத்தைச் சேர்ந்த சிவசக்தி குணசேகரனுக்கு சிறந்த பயனாளிக்கான விருது வழங்கப்பட்டது. இந்த விருதை நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் வழங்குகிறார். அருகில் கெயர் நிறுவன பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஜோய் றோஸ் ஞானேஸ்வரன் காணப்படுகிறார். (9)

ஏட்டுக் கல்வியை புகட்டி ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்க முடியாது

தீவக வலய கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

காரைநகர், ஏப்.9

ஏட்டுக் கல்வியை புகட் டுவதால் மட்டும் ஆளுமை மிக்க மாணவர்கள் சமுதா யத்தை உருவாக்கி விட முடியாது. மாணவர்கள் மத்தியில் பல்வேறுவகையான ஆளுமைகளையும் -வளர்த் தெடுக்க வேண்டும். ஆளுமை களை வளர்த்தெடுக்க பாட சாலை மைதானங்கள் மாணவப் பருவத்தில் எல்லோருக்கும் உதவியாக உள்ளன என்று தீவக வலய கல்விப் பணிப் பாளர் தி.ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

காரைநகர் கலாநிதி ஆதியா கராச்சா ம.ம வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லு நர் போட்டியில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே கல்விப் பணிப்பாளர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

கற்றலை விட ஆளு மையை வளர்த்தெடுக்கும் முக்கியமான இடமாக மைதா னம் அமைந்துள்ளது. இந்த நிகழ்வானது இன்றுடன் மட் டும் முடிந்துவிடும் நிகழ்வு அல்ல, தொடர்ந்து தினமும் குறிப்பிட்ட நேரம் மாணவர் கள் மைதானத்தைப் பயன் படுத்தி உடல் ஆரோக்கி யத்தை வளர்க்க வேண்டும்.

மாறிவரும் உலகிலே கற்றலுக்கான அளவு குறைந்து வருகின்றது. கல்விக்கான வாய்ப்பு வழங்கும் நிறுவனங் கள் அதிகமாக இருந்தும் கல்வி கற்பது குறைந்து வருகின்றது. இன்று உயர் கல்வியை அதாவது முது கலைமாணி போன்ற பட்டங் களை ஒரு வருடத்திற்குள் நிறைவு செய்கின்ற நிலைமை காணப்படுகின்றது என்றார். (எ-250)

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி தேநிலாணி -9ஏ, வி.நிவேதா -9ஏ, ஏ.அனுசினி -8ஏபி, எஸ்.ஊர்மிளா- 8ஏபி, த.விதுஷா -8ஏசி, என்.வினோதினி- 8ஏசி, வி.பாலாஜினி- 8ஏசி, கே.ஜனனி-8ஏசி, ஆர்.சஹானா -8ஏசி , ஏ.தர்மிளா-7ஏ2பி, கே.துஷானி-7ஏபி, என்.ரம்யா -7ஏபிசி, வை.அமிர்தவர் தனா-7ஏபிசி, த.தக்சலா -7ஏபிசி, . எஸ்.கௌசலா -6ஏ3பி, ஆர்.சாம்பவி- 6ஏ2 பிசி, ஆர்.கஸ்தூரி-6ஏ2 பிஎஸ், எஸ்.ஜிலானி -6ஏபிசிஎஸ், என்.கிருஷாந்தி -6ஏ2சிஎஸ்

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்

ந.தூயவன்-6ஏபிசிஎஸ், மு.நிதுர்சன்-2ஏ2பி4எஸ், சி.அஜந்தன்-2ஏபி4சிஎஸ், து.பிறேமினி-ஏ4பி2சி2எஸ், வி.றதீஸ் குமார்-ஏ3பி4சிஎஸ், ந.தனுசன்- ஏ3பி4சி, த.தர்சி கன்- ஏபி3சி3எஸ், கி.விஜிதா- ஏ3சி3எஸ், வி.விஜயரூபன் -ஏபி5சிஎஸ், க.அனுசன்- ஏசி6எஸ்.

(ந)

நோயாளி ஒருவருக்கு 100 ஊசிகள் ஒரே நாளில் ஏற்றப்பட்டனவா?

அமைச்சின் கவனத்துக்கு மருத்துவமனை சிட்டை

கொழும்பு, ஏப். 9

நோயாளி ஒருவருக்கு ஒரே தினத்தில் 100 ஊசி மருந்துகள் வழங்கப்பட் டுள்ளதாகக் குறிப்பிட்டு தனியார் மருத்துவ மனை யொன்றிலிருந்துவழங்கப் பட்ட சிட்டை சுகாதார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த வாரம் நாரஹேன் பிட்டியில் உள்ள தேசிய குருதி மையத்தால் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற புத்திஜீவிகள் குழுக்கூட்டத்தில் மருத்துவ பீடமொன்றைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவராலேயே இந்த சிட்டை அமைச் சருக்குக் காண்பிக்கப்பட்ட தாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி சிட்டையில் நோயாளி ஒருவருக்கு ஒரு நாளில் 100 ஊசி மருந்துகள் வினியோகிக்கப் பட்டுள்ளதாகவும் 200 சத்திர சிகிச்சைக் கையுறைகள் பாவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

அந்த சிட்டையானது உலக சாதனையை நிலை நாட்டி விடுமெனவும் அந்தப் பேராசிரியர் தெரிவித்தி ருந்தார்.

தனியார் துறை மருத்துவ மனைகளுக்குத் தேவைப் படும் மருந்துவகைகள் மற் றும் மருத்துவ உபகரணங் களைக் கொள்வனவு செய் வதற்கு அரசு வரிச் சலுகை களை வழங்கியுள்ளது. ஆனால் அந்தச் சலுகைகளின் பலாபலன்கள் மக்களுக்குச் சென்றடைகின்றனவா என்பது தொடர்பாக சுகாதார அமைச்சு கவனம் செலுத்த வேண்டுமெனவும் அந்தப் பேராசிரியர் சுட்டிக்காட்டி யுள்ளார். (க-22)

பாஷையூரில் வீட்டுப்பொருள்கள் நேற்று எரிந்து நாசமாகின

கொழும்புத்துறை, ஏப்.9

பாஷையூர் பகுதியில் நேற்றுப் பகல் வேளையில் ஏற்பட்ட தீ விபத்தினால் குடியிருப்பாளர் ஒருவரின் பெறுமதி மிக்க பொருள்கள் எரிந்து சாம்பராகின.

உடுபுடைவைகள், தளபா டங்கள், மின்சார பாவனைப் பொருள்கள் போன்றவை கருகி நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

பாஷையூர் 3 ஆம் குறுக் குத் தெருவில் உள்ள அரு ளானந்தம ராஜூ என்பவரின் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பாக தெரியவருவ தாவது:-

வீட்டில் பெரியவர்கள் இல்லாத நேரத்தில் வீட்டின் பிரதான அறையில் சிறுவர்கள் மெழுவர்த்தியைக் கொளுத்தி கட்டிலின் கீழ் வைத்துள்ளனர். சிறுவர்கள் அந்த மெழுகு வர்த்தியால் மெத்தை எரித்து தீ வீட்டினுள் பரவி ஏனைய பொருள்களும் நாசமாகி விட்டன என்று கூறப்பட்டது.

தகவல் கிடைத்ததும் விரைந்து வந்த யாழ். மாநகர சபை தீயனைப்புப் பிரிவினர் மேலும் தீ பரவாது அணைத்துக் கட்டுப்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

விற்பனைச் சந்தையும் பொருள்கள் காட்சிப்படுத்தலும்

யாழ்.பிரதேச செயலகத் தின் சமூர்த்தி மற்றும் வாழ்வு எழுச்சி விற்பனைச் சந்தையும் உற்பத்திப் பொருள்கள் காட் சிப் படுத்தலும் நாளை புதன் கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் நடை பெறவுள்ளன.

இந்த நிகழ்வு றக்கா வீதி யில் அமைந்துள்ள இளம் சிங்கம் சனசமூக நிலைய விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது என யாழ். பிரதேச செயலர் தெரிவித்துள் ளார். (ந)

சுவாமியார் வீதி தார் வீதியாகியது

கொழும்புத்துறை, ஏப். 9

கொழும்புத்துறை வளன் புரம் பகுதிக்குச் செல்லும் சுவாமியார் வீதி நெல்சிப் திட் டத்தின் கீழ் புதிதாக தார் வீதியாக அமைக்கப்பட் டுள்ளது.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளமை புதிதாக புனித சூசையப்பர் ஆலயம் கட்டப்பட்டு வழி பாட்டுக்காகத் திறந்து வைக் கப்பட்டமை போன்ற கார ணங்களால் இந்த வீதியூடான போக்குவரத்து அதிகரித்துக் காணப்பட்டது.

இதனை அடுத்து இந்தப் பகுதி மக்கள் விடுத்த கோரிக் கைக்கு அமைய புதிய வீதி அமைக்கப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். (ந-135)

அனலைதீவு விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஆர்வம்

அனலைதீவில் வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட கூடுதலான விவசாயி கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த போகத்தில் வேதாள வெங்காயச் செய்கையில் சில விவசாயிகள் ஈடுபட்டனர். அவர்களுக்கு இதன் மூலம் அமோக விளை சலைப் பெற முடிந்தது. அதனால் அடுத்த போகத்துக்கும் வெங்காயச் செய்கையில் ஈடுபட 50 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்போது தயாராகி வருகின்றனர்.

வெங்காயச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் தமக்கு 50 வீத மானிய அடிப்படையில் வெங்காயத்தைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-1

தீவகக் கல்வி வலயத்தில் தமிழ்த்தினப் போட்டிகள்

தீவகக் கல்வி வலயத்தின் தமிழ்த்தினப் போட்டிகள் நாளை புதன்கிழமையும், நாளை மறுதினம் வியாழக்கிழமையும் வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்வுள்ளன.

நாளை வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு, பாவோதல், இசைவும் அசைவும், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு வினாவிடை ஆகிய போட்டிகளும், நாளை மறுதினம் இசை தனி, இசை குழு நடனம், குழு நாட்டிய நாடகம், தனி நடனம், நாட்டார் பாடல், மேலிட நாடகம் ஆகிய போட்டிகளும் நடைபெறுமென தீவக கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார். (ந)

இன்றைய காலத்தின் தேவை கருதி சிவபூஜா கிரம பத்ததி வெளிவந்துள்ளது

சிதம்பரத்தின் பிரதம சிவாச்சாரியார் தெரிவிப்பு

காலத்தின் தேவை கருதி இந்து சமயப் பேரவையினர் சிவபூஜா கிரம பத்ததி நூலை வெளியிடுவது எமக்குப் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது ஏன்று சிதம்பரத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீட்சிதர் தெரிவித்தார்.

சிவபூஜா கிரம பத்ததி நூல் வெளியீட்டு விழா அண்மையில் இந்து சமயப் பேரவை நடராஜர் மண்டபத்தில் திருக்கைலை தரிசித்த பெரும் பேராளர் தில்லை வாழ் அந்தணர் பிரம்மஸ்ரீ உ.ரா உமாநாத தீட்சிதர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்தும் போதே சிதம்பரத்தின்பிரதம சிவாச்சாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தில்லை வாழ் அந்தணர்கள் முன்னைய காலங்களில் கடல் கடந்து யாத்திரை செய்வதில்லை. எனினும் இங்குள்ளவர்களின் வழிபாட்டு நெறிமுறைகள் எம்மை இங்கு வருவதற்கு வழி செய்து விட்டன.

மூவாயிரம் தில்லை வாழ். அந்தணர்களுக்குப் பதிலாக மூன்று தில்லை வாழ் அந்தணர்கள் இங்கு வந்துள்ளோம் என்றார்.

பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் தெரிவித்த தாவது:-

கோடிக்கணக்கான ரூபா செலவில் ஆலயங்களை அமைத்து மகிழும் நம்மவர் ஆன்மார்த்த பூஜையை வலுப்படுத்துவதற்கு ஏற்ற வசதிகளை வழங்க முன்வராமல் இருப்பது எமக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்துகிறது.

ஆன்மார்த்தம் இல்லாத பரார்த்த கிரியை எந்த விதபலனையும் வழங்காது என்பது தெளிந்த முடிவு என்றார்.

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் பிரம்மஸ்ரீ ச.வாசுதேவக் குருக்கள் தெரிவித்ததாவது:-

ஆகமம் சம்பந்தமான விடயங்களிலும் பஞ்சாங்கத் திதி நிர்ணயம் சம்பந்தமான விடயங்களிலும் சந்தேகங்கள் ஏற்படுகின்ற பொழுது தீர்க்கமான முடிவை வழங்குவதற்கு இந்து சமயப் பேரவை தில்லை வாழ் அந்தணர் சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீட்சிதரைப் பெருந்தலைவராகக் கொண்டு உயர் பீட மொன்றை அமைத்திருப்பதை நாம் மனதார வரவேற்கின்றோம். அந்த உயர் பீடத்தில் இணைந்து கொள்வதற்கும் முழுமையான ஒத்துழைப்பும் வழங்குவதற்கும் என்றும் தயாராக உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

சைவக்குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சதாமகாலிங்க சிவகுருக்கள் தெரிவித்ததாவது:-

உலகிலுள்ள அனைத்து இந்து மதம் சம்பந்தமான பிணக்குகளையும், சந்தேகங்களையும் தீர்த்து வைப்பதற்கு முன்வர வேண்டும்- என்றார்.

இணுவில் சாஸ்தா குருகுலப் பாடசாலை அதிபர் சிவாகமாக ஞான பாஸ்கரன் சிவ ஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் தெரிவித்ததாவது:-

இந்து சமயப் பேரவையால் நிறுவப்பட்டுள்ள உயர் பீடம் இதற்கு முன் என்றோ நிறுவியிருந்தால் பல பிரச்சினைகள் எம்மத்தியில் எழுந்திருக்காமல் போயிருக்கும் - என்றார். (எ)

''இன்று மரங்களை நடுவோம், நாளை பயன் பெறுவோம்'' என்னும் தொனிப்பொருளில் சிறப்புக் கருத்தரங்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் அதிபர் மு.கனகலிங்கம் தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரன், மாணவன் ஒருவனுக்கு மரக் கன்றை வழங்குகிறார். அருகில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரிய ஆலோசகர் செ.கருணாகரன். (வ-253)

பெரும் சிரமத்துக்குள் சீவல் தொழிலாளர்கள்

உரிய நேரத்துக்கு கள் சந்தைப்படுத்த முடியாது திண்டாட்டம்

வடமராட்சி, ஏப். 9

கரவெட்டி கிழக்கு சீவல் தொழிலாளர்கள் அன்றாடம் சீவும் கள்ளை தவறணைக்கு எடுத்துக் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர்களான பொ.தம்பிமுத்து, கே.பரஞ்சோதி ஆகியோரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் யார்க்கரு என்னும் இடத்தில் இருந்து வந்த 754 ஆம் இலக்கம் கொண்ட கரவெட்டி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்டு வந்த கள்ளுத் தவறணைக்கிளை மூடப்பட்டுள்ளது.

தவறணை மூடப்பட்டுள்ளதால் அன்றாடம் சீவப்படும் கள்ளை கரணவாய், மண்டானில் அமைந்துள்ள கள்ளுத் தவறணைக்கு எருத்துச் சென்று வழங்க வேண்டிய நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

கரவெட்டி கிழக்கில் இருந்து நீண்ட தூரத்தில் உள்ள தவறணைக்கு கள்ளை எடுத்துச் சென்று வழங்கப் பெரிதும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக பகல் 11.30 மணிக்கு இடையில் கள்ளை தவறணைகளுக்கு வழங்க வேண்டும். அந்த நேரத்துக்குள் கள்ளை வழங்காவிட்டால் சட்ட விரோதமாகக் கள்ளை வீட்டில் வைத்திருந்ததாக பொலிஸார் மற்றும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களனால் சட்ட நடவடிக்கைக்கு ஆளாகின்றோம்.

இந்த நிலையில் ஜீவனோபாயமாக உள்ள சீவல் தொழிலைச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே நாங்கள் சீவும் கள்ளை தவறணை களுக்கு மிக இலகுவாக குறித்த நேரத்துக்குள் வழங்குவதற்கு வசதியாக ஏற்பாடுகளைச் செய்து தருமாறு வேண்டுகின்றோம்.- என்று தொழிலாளர்கள் மேலும் தெரிவித்துள் ளனர். (ம-8)

ஆலய வீதியில் கண்டெடுத்த 'பேர்ஸ்' உரியவரிடம் ஒப்படைப்பு

6 வயதுச் சிறுவன் முன்மாதிரி

அடியார்களின் நெரிசலின் மத்தியில் ஆலய வீதியில் கண்டெடுத்த 'பேர்ஸ்' மற்றும் திறப்புக் கோர்வை ஆகியவற்றை ஆலய தகவல் மையத்துக்கு கொண்டு வந்து கொடுத்தான் ஆறு வயதுச் சிறுவன். ஆலய வீதியில் தந்தையுடன் சென்ற வேளையில் வீதியில் தேடுவாறற்ற நிலையில் காணப்பட்ட 'பேர்ஸ்' மற்றும் திறப்புக் கோர்வை ஆகியவற்றைக் கண்டெடுத்து அவற்றினை ஆலயத்தில் இயங்கிய அறிவிப்பு மையத்துக்கு தந்தையை அழைத்து வந்து கொடுத்துள்ளான்.

அந்தவேளையில் - அங்கு 'பேர்ஸை' தொலைத்த தகவலை ஒலிபெருக்கி மூலம் அறிந்த அடியார் ஒருவர் தன்னுடைய 'பேர்ஸ்' என்று உறுதிப்படுத்திப் பெற்று அதனுள்ளிருந்த பணம் மற்றம் பொருள்கள் சரியாக இருப்பதாகவும் கூறி சிறுவனைப் பாராட்டி சிறு அன்பளிப்பு வழங்கினார். ஆனால் அதனை வாங்க மறுத்து தந்தையுடன் ஆலய வளாகத்தினுள் சென்று விட்டான் சிறுவன். ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த சிவலிங்கம், சம்ஸன் (வயது -6) என்ற சிறுவனே கண்டெடுத்த 'பேர்ஸை' இவ்வாறு கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

கரவெட்டி கோட்டப் பாடசாலைகளின் தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

வடமராட்சி, ஏப். 9

கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே எழுத்தாக்கம் தவிர்ந்த தமிழ்த்தினப் போட்டிகள் நடத்தப்பட்டு அவற்றின் விவரம் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களும், பாடசாலைகளும் வருமாறு:-

பிரிவு 1 பேச்சு

ஸ்ரீ.பதஞ்சலி (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி), சி.கஜன் (நெல்லியடி மெ.மி.த.க.பா.), பா.நிலக்ஷன் (துன்னாலை காசிநாதர் வித்தி).

பிரிவு 1 பாவோதல்

சொ.கோவர்த்தினி (கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தி.), இ.நிஷானி (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.), சி.லதாங்கி (துன்னாலை காசிநாதர் வித்தி.).

பிரிவு 1 இசையும் அசைவும்

மு.தமிழாயினி (கட்டைவேலி மெ.மி.த.க.பா.), ச.சுவந்திக்கா (நெல்லியடி மெ.மி.த.க.பா.), செ.நிவேரகன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

பிரிவு 1 ஆக்கத்திறன் கதை கூறல்

த.சந்தோஷ் (நெல்லியடி மெ.மி.த.க.பா.), ம.மதுரா (கர வெட்டி மாணிக்கவாசகர்), சி.நியூசன் (துன்னாலை காசிநாதர்).

பிரிவு 1 வாசிப்பு

சி.சிவானுஜன் (நெல்லியடி மெ.மி.த.க.பா.), சே.சதுஸ் ரிகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கு.கபிலன் (கரவெட்டி விக்கினேஸ்வரா ஆரம்பப்பாடசாலை), ஸ்ரீ.மதுரங்கா (கரணவாய் மணியகாரன் தோட்ட வித்தி.).

பிரிவு 2 வாசிப்பு

ஆ.தர்சினி (கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ப.துவாரகா (கரவெட்டி திருஇருதயக் கல்லூரி), வ.சுருதிகா (நெல்லியடி ம.ம.வி).

பிரிவு 2 பேச்சு

ஜெ.கஜிதா (நெல்லியடி ம.ம.வி), த.சோபியா (கரவெட்டி திருஇருதயக் கல்லூரி), த.தர்மிக (கரணவாய் ம.வி.).

பிரிவு 2 பாவோதல்

ச.நிவாசிகா (நெல்லியடி ம.ம.வி.), செ.தர்சிகா (வடமராட்சி மத்திய மகளிர்), பூ.நிதர்சன் (கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தி.)

பிரிவு 2 இசை (தனி)

ர.சாமந்தி (கரவெட்டியார்க்கரு விநாயகர் வித்தி.), ஆ.நிதர்சனா (கரவெட்டி திருஇருதயக் கல்லூரி), வி.சக்திவேல் (கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தி.)

பிரிவு 2 நடனம் (தனி)

கி.தனபைரவி (உடுப்பிட்டி மகளிர்), க.ஹம்சாயினி (நெல்லியடி ம.ம.வி.), கி.காதம்பரி (கரவெட்டி விக்கினேஸ் வராக் கல்லூரி).

பிரிவு 3 பேச்சு

ஜெ.சயந்தினி (உடுப்பிட்டி மகளிர்), வ.ஜெயானி (கரவெட்டி திரு இருதயக் கல்லூரி), ச.கோகர்ணன் (உடுப்பிட்டி அ.மி.).

பிரிவு 3 பாவோதல்

ஜெ.நிலாந்தி (நெல்லியடி ம.ம.வி.), சி.தனுசன் (அல்வாய் சின்னத்தம்பி வித்தி), பே.பவித்திரா (கரவெட்டி திருஇருதயக் கல்லூரி).

பிரிவு 3 இசை (தனி)

வி.ரவிப்பிரகாஸ் (கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி), வி.திகல்யா (வடமராட்சி மத்திய மகளிர்), தி.நிகாசன் (தேவரையாளி இந்து).

பிரிவு 3 நடனம் (தனி)

ஆ.யவனப்பிரியா (உடுப்பிட்டி மகளிர்), சி.லக்சிகா (நெல் லியடி ம.ம.வி.).

பிரிவு 4 பேச்சு

வ.சங்கீர்த்தனா (வடமராட்சி மத்திய மகளிர்), வி.விதுர்ஷா (நெல்லியடி ம.ம.வி.), கு.தமிழ்ச்செல்வன் (தேவரையாளி இந்து.).

பிரிவு 4 பாவோதல்

சி.நிதர்சனா (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), க.சிவப்பிரியா (கரவெட்டி திருஇருதயக் கல்லூரி), சி.லக்சனா (கரவெட்டி திரு இருதயக் கல்லூரி).

பிரிவு 4 இசை (தனி)

சி.டயன்சன் (நெல்லியடி ம.ம.வி.), ஜெ.லாவண்யா (வடமராட்சி மத்திய மகளிர்), பி.உஷ்ளினி (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.).

பிரிவு 4 நடனம் (தனி)

சா.நோமிகா (உடுப்பிட்டி மகளிர்), ரு.திவ்வியா (வடமராட்சி மத்திய மகளிர்).

பிரிவு 5 பாவோதல்

சி.பிரசன்னா (நெல்லியடி ம.ம.வி).

பிரிவு 5 இசை (தனி)

ஜே.ரூபிகா (உடுப்பிட்டி மகளிர்), த.தர்சிகா (நெல்லியடி ம.ம.வி.), அ.மரியசிவன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

பிரிவு 5 நடனம் (தனி)

ம.மயூதினி (உடுப்பிட்டி மகளிர்), த.ஜெனோசன் (கட்டைவேலி ஞானசாரியார்).

பிரிவு 5 பேச்சு

கு.வைதேகி (வடமராட்சி மத்திய மகளிர்), இ.சிறிதி வாகரன் (நெல்லியடி ம.ம.வி.), பா.ரம்மியா (கரவெட்டி விக்கினேஸ்வரா.).

இசை குழு I 6-9 தரங்கள்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.

இசை குழு II 10-13 தரங்கள்

நெல்லியடி ம.ம.வி., கரவெட்டி வடமராட்சி மத்திய மகளில் கல்லூரி., உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

நடனம் குழு I 4-9 தரங்கள்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ் வராக்கல்லூரி, உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

திறந்த போட்டிகள் நாட்டிய நாடகம்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

நாட்டார் பாடல்

கரவெட்டி திரு இருதயக்கல்லூரி, உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

விவாதம்

கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி, நெல்லியடி ம.ம.வி., கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

தமிழறிவு வினாவிடை

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

மேடை நாடகம்

நெல்லியடி ம.ம.வி., கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி. (ஒ-8)

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர்களான திருமதி விஜயராணி பசுபதிப்பிள்ளை, திருமதி ச.கல்யாணசுந்தரேசன் மற்றும் உப அதிபர் வேணுகா சண்முகரெத்தினம் ஆகியோர் நலன் விரும்பிகளால் நேற்று முன்தினம் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் முன்னாள் ஒய்வு பெற்ற கிராம அலுவலர் எஸ்.சிவகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியைகள், பழைய மாணவிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ். சண்முகநாதன், தற்போதைய அதிபர் எஸ்.சிவனேசன், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், கே.முகுந்தன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். இந்தக் கௌரவிப்பு நிகழ்வின்போது பாடசாலை முன்றிலில் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் தடையான இந்த நிகழ்வு அவசியமா என்ற வகையிலான அனாமதேய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

நெடுந்தீவு மக்கள் பிரச்சினைக்கு தீர்வு எப்போதுதான் கிட்டுவது ?

யாழ்ப்பாணம், ஏப். 9

திருத்தம் செய்யப்பட்டு கடந்தவாரம் சேவைக்குத் திரும்பிய நெடுந்தீவுக்கான அரச படகு குமுதினி இரண்டு தினங்கள் சேவையில் ஈடுபட்ட மீண்டும் பழுதடைந்தது.

அடிக்கடி இயந்திரக் கோளாறு காரணமாக சேவையைத் தொடர முடியாத நிலையில் உள்ள குமுதினி படகுக்கு புதிய இயந்திரம் பொருத்தப்படும் என்று ஏற்கனவே தெரியப்படுத்தியிருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் புதிய இயந்திரம் பொருத்துவதற்குப் பதிலாகத் தற்போதுள்ள இயந்திரத்தையே அடிக்கடி திருத்திக் கொண்டிருப்பதன் நோக்கம் என்னவென்று மக்கள் கேட்கின்றனர்.

பலகோடி ரூபாவுக்குத் தருவிக்கப்பட்ட வடதாரகை அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்ட புராதன சின்னமாக நிறுத்தப்பட்டுள்ளது. குமுதினி ஒவ்வொரு வாரமும் திருத்தங்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது.

நூறு கோடி ரூபா அபிவிருத்திக்கென வழங்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளிவந்த சமயம் குமுதினிக்கு புதிய இயந்திரம் பொருத்தப்படும் எனக் கூறப்பட்டது.

பலகோடி ரூபாவுக்குத் தருவிக்கப்பட்ட வடதாரகை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்ட புராதன சின்னமாக நிறுத்தப்பட்டுள்ளது. குமுதினி ஒவ்வொரு வாரமும் திருத்தங்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது.

அபிவிருத்தி செய்கிறோம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளூர் அதிகாரிகளாகப் பதவிகளில் இருப்பவர்களுக்கு ஒரு முக்கிய போக்குவரத்துச் சேவையின் நிலைமை எப்படி உள்ளது என்பது தெரியவில்லை. இங்கு என்ன நடக்கிறது என்று புரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

தமது முக்கிய கடமைகளுக்காக யாழ்ப்பாணம் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் நெடுந்தீவு மக்கள்.

அரச படகு அடிக்கடி பழுதடைவதால் தனியார் படகுகளை மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியுள்ளது.

போதியளவு பயணிகள் இல்லாத நிலையில் தனியார் படகு உரிமையாளர்களுக்குச் சேவையை நடத்துவது என்பது இயலாத விடயம்.

அரச படகுகள் சேவையில் இல்லாதபோது முன்னரெல்லாம் தனியார் படகுகளை வாடகைக்கு அமர்த்திய வீதி அபிவிருத்தி அதிகாரசபை தற்போது அந்தச் செயற்பாட்டையும் கைவிட்டுள்ளது.

இந்த நிலையில் நம்பிக்கையுடன் பயணம் செய்ய முடியாதுள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு தினங்களாகப் படகுச்சேவை பிரச்சினைக்கு உரிய ஒன்றாகியுள்ளது என்று யாழ். நகரில் இருந்து நெடுந்தீவுக்குச் சென்று உடன் திரும்ப முடியாதுள்ளவர்களும் நெடுந்தீவு மக்களும் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-7)

காலாவதியான பொருள்கள் விற்றோர் மீது நடவடிக்கை

தென்மராட்சி, ஏப். 9

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வணிக நிலையங்கள் மீது சாவகச்சேரி நகரசபை சுகாதாரப் பிரிவினர் திடீர் பாய்ச்சல், நடத்தியுள்ளனர்.

அதன்போது வணிக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த திகதி காலாவதியான பொருள்கள் மீட்கப்பட்டன.

இந்த வணிக நிலைய உரிமையாளர்கள் மீது நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குளிர்பான வகைகள், பிஸ்கட்டுகள், சொக்லேட் வகைகள் உட்பட பல பொருள்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

டிப்பர் மோதி வெடித்தது மின்மாற்றி

யாழ்ப்பாணம், ஏப். 9

மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மோதியதில் மின்மாற்றி வெடித்தது.

இந்தச் சம்பவத்தில் பாஷையூர் கடற்கரை வீதியில் உள்ள மின்மாற்றியே நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வெடித்தமை குறிப்பிடத்தக்கது.

கடற்கரையை ஆழமாக்கும் பணியில் ஈடுபட்டு வந்த டிப்பரே இவ்வாறு மோதியுள்ளது. அதனை அடுத்து அந்தப் பகுதி இருளில் மூழ்கிக் காணப்பட்டது. (ம-ரி)

தந்தைக்கு விழுந்தது அடி

தென்மராட்சி, ஏப்.9

காணிக்குள் தேங்காய் பிடுங்கிய மகனைக் கண்டித்த தந்தையைக் கொட்டனால் தாக்கினார் மகன்.

இதனால் தந்தைக்கு தலையில் காயமேற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கைதடி நவபுரத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த 69 வயதான முதியவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

வலி. கிழக்கில் பாதீனியம் திடீரென்று அதிகரித்தது

யாழ்ப்பாணம், ஏப்.9

வலி. கிழக்கு பிரதேசத்தில் பாதீனியச் செடிகளின் பெருக்கம் திடீரென அதினித்துள்ளது.

இந்தப் பாதீனியச் செடிகள் விவசாய நிலங்களை ஆக்கிரமித்துள்ளதால் விவசாயச் செய்கை பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அநேகமான விவசாய நிலங்களை அண்டிய பகுதிகளில் இந்தச் செடிகள் கிடுகிடுவென வளர்ந்து காணப்படுகின்றன.

அண்மையில் காலம் பிந்திப் பெய்த மழை தான் இந்தப் பாதீனிய செடிகளின் பெருக்கம் திடீரென அதிகரிக்க முக்கிய காரணம் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்தப் பாதீனியச் செடிகள் வருடாந்தம் சிரமதானம் மூலம் அழிக்கப்பட்டாலும் கூட அவை மழை காலங்களில் முளைத்து மீண்டும் பெருகுகின்றன என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்தப் பாதீனியச் செடிகளின் திறன் பெருக்கம் குறித்தும் அதை மீண்டும் பிடுங்கி அழிப்பதற்கு வலி. கிழக்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமா என்று சபையின் தலைவர் அ.உதயகுமாரிடம் கேட்டபோது,

தற்போது இந்தப் பாதீனியச் செடிகளின் பெருக்கம் இந்தப் பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

விவசாய நிலங்கள், பொது இடங்கள் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் போன்றவைகளை இவை முற்றுகையிட்டு அடர்ந்து வளர்ந்துள்ளன. இவற்றை உடனடியாகப்

பிடுங்கி அழிப்பதற்கு சபை நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் இந்தப் பாதீனியச் செடிகள் சிரமதானம் மூலம் அழிக்கப்பட்டாலும் கூட வலிகாமம் பகுதியில் இருக்கும் பாதீனிய செடிகள் இங்கு பரவி மீண்டும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

வலிகாமம், வலி. கிழக்குப் பிரதேசத்தை உள்ளடக்கி இந்தப் பாதீனியக் களைகளை ஒரே சமயத்தில் அழிப்பதே சிறந்தது.

இந்தக் காரணத்தால் இந்தச் செடிகளை தற்போதைய கோடை காலத்தில் அழிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாய நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் இந்தச் செடிகளை அழிப்பதற்கு பிரதேச மக்கள், விவசாயிகள் பொது அமைப்பினர் முன்வர வேண்டும்.- என்றார். (ம-17)

சாவகச்சேரி வைத்தியசாலையில் காது, மூக்கு, தொண்டை கிளினிக்

மக்கள் கோரிக்கைக்கு மதிப்பளிப்பு

தென்மராட்சி, ஏப். 9

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்தது வடமாகாண சுகாதார திணைக்களம்.

வைத்தியசாலைக்கு வரும் தென்மராட்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சிக் கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் காது, மூக்கு, தொண்டை நோய்களுகான கிளினிக்கை ஆரம்பிக்குமாறு கோரியிருந்தனர்.

இதனை அடுத்து பிரதி திங்கட்கிழமைகளில் அதற்கானகிளினிக் நடத்த யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வைத்தியசாலையில் முதலாவது காது, மூக்கு, தொண்டை கிளினிக் எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி திங்கட் கிழமைகளில் இந்தக் கிளினிக்கை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது

இந்தக் கிளினிக் யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் நடத்தப்படுவதால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கிளினிக்கு வருவதால் தமக்கு நேரவிரயம் ஏற்படுவதாக நோயாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

உலக வங்கியின் நிதியுதவியில்

நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களில் ஒன்றை ஆரம்பிக்க அனுமதி கிடைத்தது

யாழ்ப்பாணம், ஏப். 9

உலக வங்கியின் நிதியுதவியில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் நிறுத்தப்பட்ட 3 வேலைத் திட்டங்களில், ஒரு வேலைத் திட்டத்தை மீளத் தொடர்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உலக வங்கியின் நிதியில் வடமாகாணத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத் திட்டங்கள் சில உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படாததன் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளன. இதுவரையில் வடமாகாணத்தில் 14 வேலைத் திட்டங்கள் இவ்வாறு நிறுத்தப் பட்டுள்ளன என்று உலக வங்கிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 3 வேலைத் திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.

மருதங்கேணி பிரதேச செயலகக் கட்டடம், தெல்லிப்பழை சந்தை, மருதங்கேணி வாரிவிட்டான் வீதி ஆகியனவே யாழ்.மாவட்டத்தில் நிறுத்தப்பட்ட வேலைத் திட்டங்களாகும்.

இதில் மருதங்கேணி பிரதேச செயலகக்கட்டடபுனரமைப்புவேலைகளை மீளத் தொடங்குவதற்கு அனுமதி உலகவங்கியால் வழங்கப் பட்டுள்ளது. எஞ்சிய 2 திட்டங்களுக்கு உரிய அனுமதி விரைவில் வழங்கப்படும் என்று யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம-5)

தமிழை வழக்காடும் மொழியாக்க வேண்டும்

உச்ச நீதிமன்றில் முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஏப் 9

சென்னை உயர்நீதிமன்றில், தமிழை வழக்காடும் மொழியாக அறிவிக்க வேண்டும் என, முதல்வர் ஜெயல லிதா, மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

டில்லியில், முதல்வர்கள் மற்றும் அனைத்து மாநில உயர்நீதி மன்ற தலைமை நீதிபதிகள் மாநாடு, உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதி அல்டமாஸ் கபீர் தலைமையில், நேற்று முன்தினம் நடைபெற்றது. மாநாட்டை, பிரதமர் மன்மோகன் சிங் தொடக்கி வைத்து உரையாற்றினார். மாநாட்டில், தமிழக உள்ளாட்சி துறை மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கே.ப.முனுசாமி பங்கேற்று, முதல்வர் ஜெயலலிதாவின் உரையை வாசித்தார்.

அந்த உரையில், முதல்வர் ஜெயலலிதா தெரிவித்திருப்பதாவது:

நம் நாட்டின், சிறந்த தலைவர்கள் உருவாக்கிய சட்டநெறி முறைகளின் படி, நமது நாடு, ஜனநாயகப் பாதையில் இயங்குகிறது. சட்ட சபை, நிர்வாகம், நீதி ஆகிய மூன்றும், மாநிலங்களில், மூன்று தூண்களாக விளங்குகின்றன. இந்த மூன்று அமைப்புகளும், தனித் தனி அதிகாரம் பெற்றதாகும். இருப்பினும், ஒன்றோடு ஒன்று இணைந்து செயலாற்றி வருகிறது. அரசியல் சட்டத்தில் உறுதி அளித்துள்ளபடி, நாட்டு மக்கள் அனைவருக்கும் நீதி, உரிமை ஆகியவை, சமமாக வழங்கப்பட வேண்டும்.

கடந்த, 65 ஆண்டு கால, ஜனநாயக பயணத்தில், சிறப்பு வாய்ந்த, தீர்ப்புகள் மூலம், நீதித் துறை தலை நிமிர்ந்து நிற்கின்றது. இதை, தமிழகம் நன்கு உணர்ந்துள்ளது. காவிரி நதி நீர்ப்பிரச்சினையில் தீர்வுகாண, 20 ஆண்டுகளாக, பலகட்டமாக போராடினோம். உயர் நீதிமன்றின் உத்தரவால் தான், காவிரி நடுவர் மன்ற உத்தரவு, மத்திய அரசின், அரசிதழில் வெளியிடப் பட்டது.

மாநாட்டில், ஏழை மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில், நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது குறித்து, ஆலோசிக்க வேண்டும். சட்ட ரீதியில் பாதுகாக்கும் வகையில், ஏழைகளுக்கு விரைவான தீர்ப்பு கிடைக்க வேண்டும் என்பதே பொதுவான குறிக்கோளாகும். தமிழக அரசு, நீதித்துறைக்கு தேவையான, உள் கட்டமைப்பு வசதிகளைச் செய்து வருகின்றது.

2012-13 ஆம் ஆண்டுக்கு, 19.53 கோடி ரூபாய் நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டது. 2013-14ஆம் ஆண்டுக்கு, 70 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். அப்போது தான், 2016 ஆம் ஆண்டுக்குள், அனைத்து நீதிமன்றங்களும் சொந்தக் கட்டடம் கட்ட முடியும். டில்லியில், மருத்துவ மாணவி பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம், நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இதையடுத்து, தமிழகத்தில் உள்ள பெண்களுக்கு, உறுதியான பாதுகாப்பு அளிக்க, 13 அம்ச திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டத்தின் கீழ், மாநில மொழிகளில், நீதிமன்ற நடவடிக்கைகள், தீர்ப்புகள் வழங்க உரிமை அளிக்கப் பட்டுள்ளது. இதன்படி, நான்கு மாநிலங்களில், மாநில மொழிகளில், நீதிமன்ற நடவடிக்கைகள் அமுலில் உள்ளன.

இதேபோன்ற நடை முறையை, சென்னை உயர் நீதிமன்றிலும் கொண்டு வர வேண்டும் என, நீண்ட காலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், மத்திய அரசு, இது சாத்தியமில்லை என்று குறிப்பட்டுள்ளது. மாநில மொழிகளில், வழக்கு நடவடிக்கைகள் இருந்தால் தான், அது மக்களுக்கு புரியும். எனவே, சென்னை உயர்நீதி மன்றில், தமிழை வழக்காடும் மொழியாகக் கொண்டு வர, மத்திய அரசு மற்றும் உச்ச நீதிமன்று தங்கள் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு, முதல்வர் ஜெயலலிதா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ந)

மாதகல் நுணசை முருகன் ஆலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு தற்காலிக கடைகள் அமைப்பதற்கான ஏலம்

எதிர்வரும் 11.04.2013 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலய முன்றலில் தற்காலிக கடைகள் அமைப் பதற்கு ஏலம் நடைபெறும். கடை எடுக்கும் சகல வியா பாரிகளும் அன்றைய தினம் சமுகமளித்து நிதியை செலுத்தி இடத்தை ஒதுக்கீடு செய்து பற்றுச்சீட்டைப் பெற்று உறுதி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாதகல். கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் தர்மகத்தா

(35817)(8.6.16)

மரண அறிவித்தல்

திருமதி நாகேஸ்வரி குமாரசாமி

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும், இரத்மலானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி குமாரசாமி நேற்று முன்தினம் (07.04. 2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சுப்பையா -சின்னப்பிள்ளை தம் பதியரின் அன்பு மருமகளும், ஞானாம்பிகை, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயகுமாரி, சந்திரகுமாரி, இந்திரகுமாரி, தேவகுமாரி, சாந்தகுமாரி, ரூபகுமாரி, ஜெயகுமார், பிரிந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், பத்மகுயசீலன், அல்பிரட், இராமச்சந்திரன், பூபாலசிங்கம், தேவதாஸ், அன்ரன், சசிலாதேவி, நகுலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், கணேஸ்குமார், பாலகிருஸ்ணன், மஞ்சுளா, நிர்மலா, கௌசி, சந்திரபாலன், கமலேந்திரன் ஆகியோரின் அன்புப் பெரியதாயும், ஸ்ரீயாசாந்தி, ரம்யாசாந்தி, சந்தில்யன், மதுரா, மயூரி, ரவிவர்மன், காயத்திரி, அர்ப்பனா, பிர தீபன், பிரகாஸ், மினோஜ், திஸா, அகிம்சா, ஆதீசன், அகில வன் ஆகி யோரின் அன்புப் பாட்டியும், ஜசந்தன், ஜீவதாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜதீன், ஜர்ஷனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (11.04.2013) வியாழக் கிழமை கல்கிஸை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் மாலை 5.00 மணியளவில் கல்கிஸை பொது மயானத்தில் தகனஞ் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
0094112725261(இல்லம்)
0094772462025,0094771986613

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

இராமலிங்கம் இலட்சுமணன்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இலட்சுமணன் நேற்றுமுன்தினம் (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - மகாலட்சுமி தம்பதியரின் மருமகனும் ललிதாவின் அன்புக் கணவரும் கிருஷ்ணரூபன், தயானந்தரூபன், ஜெகஜீவரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நர்மதாவின் மாமனும் மகேஸ்வரி, புவனேஸ்வரி, இராசரத்தினம், இராஜேஸ்வரி, விஜயலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜேஸ்வரி, ராணி, லீலா, காலஞ்சென்ற ஜெயபிரகாஸ் (பத்தர்) மற்றும் கமலா, சாரதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரேசன் றோட், சுன்னாகம். (35821) (23-16,6)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

துயர் பகிர்கின்றோம்

மனிதநேய கண்ணிவெடியகற்றும் THE HALO TRUST நிறுவனத்தின் பணியாளர்

கோணேசமுதலி முருகவேலின்

மறைவுச் செய்தி கேட்டு துயரடைந்தோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், THE HALO TRUST நிறுவனத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், வடக்கு கிழக்கு.

(35822) (23-16,14)

8 ஆம் ஆண்டு நினைவலைகள்

ஞானசேகரம் ஜயந்தன்

மலர்வு 16 ★ 08 ★ 1981

உதிர்வு 09 ★ 04 ★ 2005

ஒற்றை மலரின் இதழ்களாய் மலர்ந்தோம்!
குடும்ப சோலையின் பெருமையாய்
திகழ்ந்தோம்
இன்று இதழ் இழந்த மலராய்
நிற்கின்றோம்!

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

உமது அமைதியின் துயிலிற்காய் பிரார்த்திக்கின்றோம்.
ஜயந்தி, திஷாந்தி. (நண்பர்)

(35819) (23-16,6)

அரச அலுவலர்களுக்கு சுகவாழ்வு நிலையம்

யாழ்.மாவட்ட அரச அலுவலர்களுக்கான தனியான சுக வாழ்வு நிலையத்தை வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் (ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கு அருகில்) திறந்துள்ளது.

ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் அரச அலுவலர்கள் தமது அடையாள அட்டையுடன் நிலையத்துக்கு வருகை தந்து தமது வைத்தியத் தேவையைப் பெற்றுக்கொள்ளலாம். வெளி நோயாளர் பிரிவு, மருத்துவ சிகிச்சை, உடற் பயிற்சி, அவசர மருத்துவம், ஆய்வு பரிசோதனை, மருத்துவப் பரிசோதனைகளையும் மேற்கொள்ளமுடியும்.

Jeep விற்பனைக்கு

HYUNDAI-SANTAFE model Jeep விற்பனைக்கு உண்டு.

(Leasing வசதி உண்டு.)
தொடர்பு:0776701200 .

வேலை ஆள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு துப்புரவு செய்வதற்குரிய பெண் தொழிலாளர் உடன் தேவை.
(வயது 20இல் இருந்து 40 வரை)
விலாசம்:- 37/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(35816) (23-16,6)
(தேவி கொட்டலுக்கு அருகில்)

சாரதி தேவை

AD சாரதி அனுமதிப் பத்திர முடைய 21-45 வயதுக்கு இடைப்பட்ட சாரதி தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
விளம்பர இல.- 4448, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சேது சமுத்திரத் திட்டத்தில் நெறி தவறியதாம் இந்தியா

இலங்கைக் குழு மஹிந்தவுக்கு அறிக்கை

கொழும்பு,ஏப் 9

சேது சமுத்திரத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில், அனைத்துலக சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளை இந்தியா மீறியுள்ளதாக, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிபுணர்கள் குழு வொன்று அறிக்கை அளித்துள்ளது.

இந்திய அரசினால் முன்னெடுக்கப்படும் சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக ஆராய, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சின் செயலர் ஆரியரத்ன ஹேவகே தலைமையிலான நிபுணர் குழுவொன்றை நியமித்திருந்தார்.

இந்தக் குழுவில் கடல் சார் விஞ்ஞானிகள், சூழலியலாளர்கள், புவியியலாளர்கள், கடல்சார் பொறியாளர்கள் இடம்பெற்றிருந்தனர்.

இந்தக் குழு அளித்துள்ள அறிக்கையிலேயே, சேது சமுத்திரத் திட்டம் இலங்கையின் கடல்சார் மற்றும் சுற்றாடல் வளங்களைப் பாதிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் அனைத்துலகக் கடல் சட்டம், கப்பல்களால் மாசடைவதைத் தடுப்பதற்கான அனைத்துலகப் பிரகடனமான, மார்போல் பிரகடனம் போன்ற அனைத்துலகச் சட்டங்கள், நெறிமுறைகளை இந்தியா அப்பட்டமாக மீறியுள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான அனைத்துலகக் கடல் எல்லைக்கு நெருக்கமாக 167 கிலோமீற்றர் நீளமான இந்தச் சேதுக் கால்வாய் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தினால் இலங்கையில் ஏற்படக் கூடிய சூழலியல் மற்றும் கடல்சார் தாக்கங்களை இந்தியா கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

ஐ.நாவினால் 1968ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்துலகக் கடல் சட்டத்தின்படி, சேது சமுத்திரத் திட்டத்தை தொடங்க முன்னர் இலங்கையின் இணக்கப் பாட்டை இந்தியா பெற்றிருக்கவேண்டும்.சேதுக்கால்வாய் திட்டம் இந்திய - இலங்கை கடல் எல்லைக்கு மிக நெருக்கமாக உள்ளது.

அனைத்துலகக் கடல் எல்லைக்கு அருகே எந்த வொரு நாடும் எத்தகைய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமானாலும், இரு நாடுகளினதும் இணக்கம் பெறப்பட வேண்டும். இந்த நீண்டகால நடைமுறையை இந்தியா மீறியுள்ளது. இலங்கை நிச்சயம் இந்தப் பிரச்சினையைக் கிளப்பும் என்று இலங்கை அரசுக்கு நெருக்கமான வட்டாரங்கள் இந்தியாவின் 'பயனியர்' நாளேட்டுக்குத் தகவல் வெளியிட்டுள்ளன.

எந்த நேரத்திலும், இலங்கை அரசிடம் இருந்து கடுமையான அறிக்கை ஒன்றை எதிர்பார்க்கலாம். என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. (த)

வன்னியில் இறுதிக் கட்டப் போரின் போது காணாமல் போன மகன் உயிருடன் உள்ளார்

கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள மூதாட்டி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப். 9

வன்னியில் இறுதிக் கட்டப் போரின் போது காணாமல் போயிருந்த தனது மகனை தேடி வந்த வயோதிப மாது ஒருவர் தற்போது தனது மகன் இந்தியாவில் உயிருடன் உள்ளார் என்று தனக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகத் தெரிய வந்துள்ளதாவது:-

வன்னியில் இறுதிக் கட்டப் போரின் போது இந்த வயோதிப மாதுவின் குடும்பம் குண்டுவெடிப்புத் தாக்குதலால் குடும்பத்துடன் சாவடைந்திருந்தது.

இவரின் மகள், மகன், மருமகள் மற்றும் ஏழு பேரப்பிள்ளைகள் அனைவரும் இதில் சிக்கியிருந்தார்கள்.

சுந்தரம் சூரியபுத்திரி என்ற வயோதிப மாதுவும் அவரது மகனும் உயிர் தப்பிக் கொண்டனர். இந்த நிலையில் இவரது மகனும் காணாமல் போயிருந்தார்.

இந்த கொடூரப் போரில் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் போன்றோரை இழந்து எவரது துணையும் இன்றி இறுதியில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்ந்துள்ளார் இந்த வயோதிபப் பெண்.

இந்தப் பகுதியில் இருந்து காணாமல் போயிருந்த தனது மகன் எங்கிருக்கிறார் என்ற ஆவலுடன் இருந்த இந்த வயோதிப மாதுவுக்கு நேற்று முன்தினம் திடீரென கிடைத்த தொலைபேசி அழைப்பு அவருக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது. குறித்த தொலைபேசி அழைப்பில் அவரது மகன் இந்தியாவில் உயிருடன் உள்ளார் என்ற தகவல் அவருக்குக் கிடைத்தது என்று குறித்த வயோதிபப் பெண் இல்லப் பராமரிப்பாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். தற்போது தனது மகன் படிப்பைத் தொடர்வதாகவும் விரைவில் இங்கு வருவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு-17)

இலங்கை மருத்துவர் பிரிட்டனில் பணி நீக்கம்

லண்டன்,ஏப் 9

பிரிட்டனிலுள்ள லீட்ஸ் ஜெனரல் இன் போமரி என்ற தனியார் வைத்தியசாலையில் பணி புரியும் இலங்கையைச் சேர்ந்த சிங்கள மருத்துவர் ஒருவரை அந்த வைத்திய சாலையின் நிர்வாகம் தற்காலிகப் பணி நீக்கம் செய்துள்ளது.

பிரிட்டன் பத்திரிகை ஒன்று இது தொடர்பில் செய்தி வெளியிடுகையில்,

இந்த வைத்தியசாலையில் கடமை புரியும் இலங்கையைச் சேர்ந்த மருத்துவரான நிஹால் வீரசேன என்பவர் சத்திர சிகிச்சைப் பிரிவில் பணி புரிகின்றார்.

இவரால் மேற்கொள்ளப்பட்டு வந்த சத்திர சிகிச்சைகள் தோல்வியில் முடிந்துள்ளன. இதன் பலனாக மரணங்கள் அதிகரித்துள்ளன.

இதனை அடிப்படையாக வைத்தே இவரைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்ய வைத்தியசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

இவரால் மேற்கொள்ளப்பட்டு வந்த சத்திர சிகிச்சைகள் தோல்வியில் முடிந்துள்ளன. இதன் பலனாக மரணங்கள் அதிகரித்துள்ளன.

குறித்த மருத்துவர் இந்த வைத்தியசாலையில் 10 வருடங்களாகப் பணிபுரிந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு மரணமடைந்தவர்களின் உறவினர்கள் இந்த வைத்தியர்கள் தொடர்பில் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர் என்று கூறியுள்ளது.(த)



போல்ஸ்வோகன் கார்க்கண்காட்சி 14 ஆவது தடவையாக நேற்றுமுன்தினம் கொழும்பு காலி முகத்திடலில் நடைபெற்றது. இதில் பழமைவாய்ந்த கார்கள் பவனி வந்தன.

யானைகளைத் தடுக்க சணல் புல் வேலிகள்

கொழும்பு, ஏப்.9

இலங்கையில் யானைக்கும் மனிதனுக்குமிடையிலான மோதலை தடுக்க புதிய நுட்பத்திலான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக வன ஜீவராசிகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி தற்போது நடைமுறையிலுள்ள மின்சார வேலிகளுடன் மேலதிகமாக சணல் செடியில் வேலிகள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக இந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கென சீனா உதவ முன் வந்துள்ளதாகவும் அமைச்சு கூறுகின்றது.

தென்னாபிரிக்கா உட்பட உலகில் சில நாடுகளில் இந்த முறையினால் யானை - மனித மோதல்கள் கட்டுப்படுத்த இந்த நுட்ப முறையே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையில் யானை - மனித மோதலைக் கட்டுப்படுத்த மின்வேலிக்கு மேலதிகமாக தாவர வேலிகளாக சணல் செடி வளர்த்தல், எக்ஸ்சோரா செடிகளை நடுதல், பனை மரங்களை நடுதல் ஆகிய மூன்று தெரிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் விஜித முனி சொய்சா தெரிவித்துள்ளார்.

சணல் செடியின் நுனிப் பகுதிக்கு யானைகள் அஞ்சுவதால் இத்தத் திட்டம் எதிர்பார்க்கும் பலனை தரும்.

உள்நாட்டில் ஊவா மாகாணத்தில் தற்போது சிறிய அளவில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சீனா இந்த சணல் தாவரங்களை தனது தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவாக வளர்த்து தனது செலவில் பராமரித்து இலங்கைக்கு இறக்குமதி செய்யவற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் வனங்களை அண்மித்து வாழும் குடும்பங்களின் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் ஏற்படும் - என்றும் அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

(ஐ)

தனித்தமிழீழத்தை ஐ.தே.க. ஒருபோதும் அனுமதிக்காது

தனித்தமிழீழத்தை உருவாக்க தமிழக தலைவர்களும் இந்திய எதிர்க்கட்சியான பா.ஜ.கவும் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், இலங்கையில் தமிழீழம் மலர ஐ.தே.க ஒருபோதும் இடமளிக்காது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவில் தமிழ்நாடு தனிநாடாவதையும் தாம் ஒருபோதும் விரும்பமாட்டார் என இந்திய அரச தலைவர்களிடம் ரணில் எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசு நடைமுறைப்படுத்தினால் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக வாய் திறக்க மாட்டா எனத் தெரிவித்துள்ள அவர், ஆணைக்குழு பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தாவிட்டால், அடுத்த வருடம் நாட்டில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான பொதுத் தேர்தலொன்றை அரசு நடத்தவேண்டுமெனத் தாம் அழுத்தம் கொடுப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய நிலையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்திய மத்திய அரசின் ஒரு பிராந்தியமாகவே தமிழ் நாடு இருக்கிறது. அதனால் தமிழ்நாடு எதைக் கூறினாலும், தமிழீழம் உருவாவதற்கு இந்திய மத்திய அரசு ஒருபோதும் இணங்காது என இந்திய அரசுத் தலைவர்கள் என்னிடம் தெரிவித்தனர் என்றும் தெரிவித்துள்ளார் ரணில்.

(ஐ)

பெண்களை மதித்தாலே இந்தியாவை உயர்த்த முடியும்

புதுடில்லி: ஏப். 9

பெண்களுக்கு நாம் அதிக மதிப்பும், மரியாதையும் செலுத்த வேண்டும். அதிகாரத்தில் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கும்போதுதான் இந்தியாவை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல முடியும் என்றார் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி. இந்திய வர்த்தக சபையின் மகளிர் பிரிவு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து உரையாற்றும்போது:

இந்தியாவில் தாய்மையை போற்றி வருகிறோம். இதுவே இந்திய கலாசாரத்தின் ஒரு முக்கிய சின்னமாக விளங்குகிறது. நமது தாய், சகோதரிகள் மதிக்கப்பட வேண்டும். இது நவீன இந்தியாவை உருவாக்க துணைபுரியும். பெண்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இவர்கள் முன்னேற்றத்திற்கு குஜராத் அரசு பல்வேறு சிறப்பு திட்டங்களைத் தீட்டி வருகிறது. அமுல் தயாரிப்பு உலக அளவில் தரம் பெற்று இருக்கிறது என்றால் இதற்கு குஜராத் வாழ் கிராம பெண்களே காரணம். இவர்களுக்கு நான் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

குஜராத்தில் 300 க்கும் மேற்பட்ட பெண் தலைவர்கள் இருக்கின்றனர். இவர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர். பொருளாதாரத்தை முறையான வழியில் பேணிக்காத்து வருகின்றனர். சமீபத்தில் பெண் சிசுக்கள் கொல்லப்படுவது எனக்கு வேதனையை தருகிறது. 2001-இல் குஜராத்தில் எடுத்த அறிக்கையில் பெண் குழந்தை பிறப்பு குறைந்துள்ளது. குஜராத்தில் பெண்கள் பெயரில் சொத்துக்களைப் பதிவு செய்யும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மகன்களை விட மகள்களே வயதான காலத்தில் பாதுகாப்பாக இருக்கின்றனர். குஜராத்தில் பெண்களுக்கு பஞ்சாயத்தில் அதிக பரதிநித்துவம் அளிக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பெண்கள் சிறந்த திறம் படைத்தவர்கள் என நாம் அனை வரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர்களை அதிகாரத்தில் பங்கு பெறச் செய்ய வேண்டும். இதன் மூலம் இந்தியாவை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல முடியும். பெண்கள் சக்தியை நாம் அறுதியிட்டு கூற முடியாது. பெண்களுக்கு தொழில் நிறுவனங்கள் போதிய வாய்ப்புகளை வழங்க வேண்டும். பெண்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் போது அவர்கள் ஆண்களை விட சிறப்பாக செயல்படுவர். 50 சதவீதம் கொண்ட பெண்கள் இணைந்து உழைத்தால் கூடுதலாக பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும். பெண் களின் சிறிய, பெரிய வெற்றிகளை நாம் கொண்டாட வேண் டும்.என மோடி தனது உரையில் மேலும் தெரிவித்தார். (ந)

யாழ்ப்பாண அணியை பந்தாடியது மன்னார்

வடமாகாண உதைபந்தில்

யாழ்ப்பாணம்,ஏப் 9

வடமாகாண விளை யாட்டுத் திணைக்களத்தி னால் நடத்தப்பட்ட ஆண்க ளுக்கான மாகாணமட்ட உதைபந்துப் போட்டியில் மன்னார் மாவட்ட அணி வெற்றி பெற்றுச் சம்பியனா கிது.

வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதிக் கொண்டது.

ஆட்டத்தின் ஆரம்பத் திலிருந்தே இரு அணியி னரும் தத்தமது அணிக்கான கோல்களை பெற வேண் டும் என்ற ஆக்ரோஷத் தோடு விளையாடியதால் கடைசிவரை போட்டி விறு விறுப்பாக அமைந்தது.

முதல் பாதியாட்டத்தின் 29ஆவது நிமிடத்தில் மன் னார் மாவட்ட அணி வீரன் பிராங்க்ளின் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினைச் சரியான

> “வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் ஆரம்பத் திலிருந்தே இரு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களை பெற வேண்டும் என்ற ஆக்ரோஷத்தோடு விளையாடியதால் கடைசிவரை போட்டி விறுவிறுப்பாக அமைந்தது.”

முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். பதி லுக்கு யாழ்.மாவட்ட அணி வீரர்கள் தமது அணிக்கான கோல்களைப் பெற வேண் டும் என்று கடுமையாக போராடினர். ஆயினும் முதல் பாதியாட்டத்தில் அந்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடைந்தது. எனவே ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது மன்னார் மாவட்ட அணி 1:0 என்ற கோல்கணக்கில் முன்னி லையில் இருந்தது.

இரண்டாம் பாதியாட் டத்தின் 18ஆவது நிமிடத்தில் யாழ்.மாவட்ட அணி வீரன் வீமா தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினைக் கோலாக மாற்றினார். மேலதிக கோல் களை அடிக்க இரு அணி யினரும் தவறியிருந்ததால், ஆட்டநேர நிறைவில் இரு அணிகளும் 1:1 என்ற ரீதியில் சமநிலை பெற்றிருந்தன.

எனவேஆட்டத்தின்வெற்றி, தோல்வியைத் தீர்மானிப் பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதுவும் சமநிலையிலேயே முடிவடைந்ததால் மேலதிக சந்தர்ப்பம் ஒன்று இரு அணிகளுக்கும் வழங்கப் பட்டது. இதில் மன்னார் மாவட்ட அணி தனக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை கோலாக்க, யாழ்.மாவட்ட அணியினரோ அதனை வீணடித்தனர். எனவே மன் னார் மாவட்ட அணியினர் 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுசம்பியனாகினர்.

(ங-400-23)

இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப் 9

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், சன சமூக நிலையம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும் கரப்பந்தாட்டப் போட்டியில் இன்று மோதவுள்ள அணிகள்:-

மாலை 7 மணி: குப்பி ளான் விக்னேஸ்வரா 'ஏ' அணி எதிர் சங்கானை ஞான வைரவர் 'ஏ' அணி.

இரவு 8 மணி: தெல்லிப்பழை நண்பர்கள் 'ஏ' அணி எதிர் ஜிஸ்ரார் 'ஏ' அணி.

★ ★ ★

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இன்று இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் பங்குபற்றும் அணியின் விவரம் வருமாறு-

பொமர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கற்கோவளம் சென்.சேவியர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (400-23)

வேகத்தோடு பாய்ந்து வெற்றிபெற்ற வீரர்கள்

வலி. வடக்கு, ஏப். 9

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வடமாகாணப் பாடசாலை அணிகளின் ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டப்போட்டி கடந்த சனிக்கிழமை காலை பரந்தன் சந்தியில் ஆரம்பித்து விசுவமடுவில் முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் பத்து இடங்களைப் பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

1 ஆம் இடம் - ரி.அன்ரன் டெல்மன்- கிளிநொச்சி மத்திய கல்லூரி (1:18:20 செக்கன்)

2 ஆம் இடம் - ப.சுகந்தன் -வட்டக்கச்சி மகா வித்தியாலம் (1:20:00 செக்கன்)

3 ஆம் இடம் - ஆர்.சாந்தன் - வவுனியா வடக்கு சுந்தரபுரம் அ.த. க.பாடசாலை (1:21:00 செக்கன்)

4 ஆம் இடம் -ப.பிரசாந்- துணுக்காய் கற்சிலைமடு அ.த. க.பாடசாலை

5 ஆம் இடம் - என்.கதிரவன் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

6 ஆம் இடம் - எம்.கிளிரிசன் - கிளிநொச்சி இரணைத்தீவு றோ.க.த.க. பாடசாலை

7 ஆம் இடம் - எம்.சுசிறீகன்- கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயம்.

8 ஆம் இடம் - ரி.ஸ்ரீகுமரன் - கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலயம்.

9 ஆம் இடம் - ப.தர்சாந்தன் - வவுனியா தெற்கு நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்.

10 ஆம் இடம் - எம்.கோகுலன் - துணுக்காய் கற்சிலைமடு அரசினர் த.க. (ங-400-86-422)

வலிகாமம் வலய கரப்பந்தில் இன்று மோதவுள்ள அணிகள்

வலி. வடக்கு, ஏப்.9

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக் கிடையே நடத்தப்பட்ட ஆண்,பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி தெல்லிப்பழை மகாஜனக்கல் கல்லூரி ளமைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

ஆண்கள்

15 வயதுப் பிரிவு

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

★ இணுவில் இந்துக் கல்லூர் எதிர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்.

★ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் சங்கானை சிவப்பிரசம் மகா வித்தியாலயம்.

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.

★ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

★ இணுவில் மத்திய கல்லூரி எதிர் ஆனைக்கோட்டை பாலசுப்பரமணியம் வித்தியாலயம்.

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு

★ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் எதிர் இளவாலை சென்.யோசேப் மகா வித்தியாலயம்.

★ சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

★ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

பெண்கள்

15 வயதுப் பிரிவு

★அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் எதிர் அராலி கிழக்கு அ. த.க. பாடசாலை.

★சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

★இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் எதிர் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

★வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.

★அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

★வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

★ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் அராலி கிழக்கு அ.த.க. பாடசாலை.

★சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

★அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை

★சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு

★அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் எதிர் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்.

★இணுவில் இந்துக் கல்லூரி எதிர் சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.

★பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை எதிர் ஏழாலை மகா வித்தியாலயம்.

★சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

★அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் எதிர் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.

★இணுவில் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

★பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

★சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

★இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் எதிர் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்.

★தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.

★சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் ஏழாலை மகா வித்தியாலயம்.

★வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு

★தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

★சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

★சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம் எதிர் பன்னாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

★சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி

★சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.

★சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம் எதிர் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை.

★இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

★பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை எதிர் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம். (ங-86)

வாகை சூடியது ராஜஸ்தான் றோயல்ஸ்

ஐ.பி.எல். சீஸன் 6 கிரிக்கெட் தொடரில் ஜெய்பூரில் நேற்று நடைபெற்ற எட்டாவது போட்டியில் ராஜஸ்தான் றோயல் சலெஞ்சர்ஸ் 19 ஓட்டங்களால் வெற்றி பெற்று இரண்டாவது வெற்றியைப் பதிவுசெய்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணித்தலைவர் கம்பீர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதனையடுத்து முதலில் துடுப்பாடத்தாட றோயல் சலெஞ்சர்ஸ் அணியின் வொட்ஷன், ரஹானே ஆகியோர் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் களாகக் களமிறங்கினர்.

இருவரும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய போதும், அணி 11 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த வொட்ஷன், லீயின் பந்துவீச்சில் மோர்ஹனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து ரஹானேயுடன் இணைந்த டிராவிட் அணி ஓட்ட எண்ணிக்கை உயர்த்தப் போராடினார். இருந்தபோதும் இவர் 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, போத்தாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பின்னியை நீண்டநேரம் நிலைத்து நிற்க விடாமல் 14 ஓட்டங்களுடன் பவிலியன் திருப்பினார் சுக்கிலா. இதனையடுத்து களம்புகுந்த ஹக் ரஹானேயுடன் இணைந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். ஆரம்பம் முதல் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி வந்த ரஹானே 36 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், சுனில் நரேனின் பந்துவீச்சில் பிஸ்லாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார். அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஹக் 36 பந்துகளில் ஆட்டமிழக்காது 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 46 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 6 இலக்கு களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் பந்துவீச்சில் நரேன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி றோயல்ஸ் சலெஞ்சர்ஸ் அணியின் பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் ஓட்டங்கள் பெறுவதில் திணறியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பிஸ்லா ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அணித் தலைவர் கம்பீருடன் இணைந்த கலீஸும் ரசிகர்களை ஏமாற்றி ஓட்டமெதுவும் பெறாது பவிலியன் திரும்பினார்.

அடுத்துக் களமிறங்கிய திவாரி 16 ஓட்டங்களுடன் வெளியேற, கம்பீருடன் இணைந்த மோர்ஹன் அணியின் நிலையறிந்து நிதானமாகவும், அதேநேரம் அதிரடியாகவும் துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். இந்த நிலையில் அணி 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த கம்பீரின் இலக்கை இழந்து, இக்கட்டான் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது கொல்கத்தா அணி.



அடுத்து களம்புகுந்த யூசுப்பதான் கடந்த போட்டியைப் போல் இப்போட்டியிலும் ஏமாற்றினார். இவர் 2 பந்துகளைச் சந்தித்தபோதும் ஓட்டமெதுவும் பெறாமல் வெளியேறினார். தொடர்ந்து வந்த சுக்கிலாவும் ஏமாற்ற 6 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்று, தவித்தது கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி.

இதனையடுத்து மோர்ஹனுடன் கூட்டுச்சேர்ந்த போத்தா அணியின் சரிவிலிருந்து மீட்கப் போராடினார். ஆனால் அவரும் 12 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, ரைற்றின் பந்துவீச்சில் பின்னியிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 38 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த மோர்ஹன், அணி 122 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை கூப்பரினால் 'போல்ட்' செய்யப்பட்டு வெளியேறினார்.

இறுதியில் 19 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்று 19 ஓட்டங்களால் வெற்றியைக் கோட்டைவிட்டது கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி. ராஜஸ்தான் றோயல்ஸ் பந்துவீச்சில் கூப்பர், திவேட்டி ஆகியோர் தலா 3 இலக்குகளையும், சுக்கிலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியைச் சேர்ந்த திவேட்டி தெரிவானார். (400)

போதைமருந்து விவகாரம் விஜேந்தர் நீக்கம்

போதை மருந்து விவகாரத்தில் சிக்கியுள்ள இந்திய குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் எதிர்வரும் தொடர்களில் பங்கேற்க மாட்டார்.

பீஜிங் (2008) ஒலிம்பக்கில் வெண்கலம் வென்றவர் இந்திய குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங். சமீபத்தில் பஞ்சாப்பில் 130 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின், பிடிபட்ட விவகாரத்தில், விஜேந்தரின் நண்பரும் சக வீரருமான ராம்சிங் கைது செய்யப்பட்டார்.

தானும், விஜேந்தரும் போதை மருந்து வாங்கியதையும் உட்கொண்டதையும் இவர் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில், பாட்டியலாவில் உள்ள தேசிய பயிற்சி முகாமுக்கு, பல நாள்களாக விஜேந்தர் வரவில்லை. இதனையடுத்து சைப்ரஸ், கியூபா ஆகிய நாடுகளில் நடக்கும் தொடருக்கான அணியில், இவர் இடம்பெறவில்லை.

இது குறித்து இந்திய குத்துச்சண்டை அமைப்பு (ஐ.ஏ.பி.எப்.) தலைவர் அபிஷேக் மடோரியா கூறுகையில், எதிர்வரும் தொடர்களுக்கான அணியிலிருந்து விஜேந்தரை வெளியேற்றவில்லை.

ஒலிம்பிக் பதக்கம் பெற்ற இவர், தனக்குத் தேவையான தொடரை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அதே நேரத்தில், இவரின் பயிற்சிக்கு போதை மருந்து விவகாரத்தால் இடையூறு ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் தொடரில் இவரால் பங்கேற்க முடியாது. என்னைத் தொடர்பு கொண்ட விஜேந்தர், தான் எந்த தவறும் செய்யவில்லை என்றும் எனவே, இந்தப் பிரச்சினையிலிருந்து விரைவில் வெளிவருவேன் என்று கூறினார் எனவும் தெரிவித்துள்ளார்.

வழக்கு

மும்பைப் புறநகரான ஜுகுவில் உள்ள ஒரு விடுதியில் போதை விருந்து நடப்பதாக வந்த தகவலின் அடிப்படையில், கடந்த ஆண்டு மே மாதம் சார் பொலிசார் சோதனை நடத்தினர்.

அப்போது கைதானவர்களில், ஐ.பி.எல். கிரிக்கெட் வீரர்களான தென்னாபிரிக்காவின் வேய்னே பார்னெல், இந்திய வீரர் ராகுல் சர்மா, நட்சத்திர தம்பதியரான அபூர்வா அக்னிஹோத்ரி-ஷில்பா அக்னி ஹோத்ரி உட்பட 86 பேர் போதைப்பொருள் உட்கொண்டது உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டு விசாரணைக்கு முன்னிலையாகும்படி பணிக்கப்பட்டிருந்தது.

ராகுல் சர்மா உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு கடந்த மாதம் தேசிய போதைப்பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம் குற்றப்பத்திரிகை நகல்களை வழங்கியது. பார்னெல், தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், தற்போது ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்க வந்துள்ள தென் ஆப்ரிக்க வீரர் வேய்னே பார்னெல், போதைப்பொருள் வழக்கு தொடர்பாக மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் சரணடைந்தார். பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

மும்பையோடு இணைந்தார் மலிங்க

மும்பை இந்தியன்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க அவ்வணியோடு இணைந்துள்ளார்.

அதன் காரணமாக இன்று இடம் பெறவுள்ள இந்தப் போட்டியில் அவர் பங்குபற்றுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பிரதான வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க, அவ்வணியின் முதலாவது போட்டியில் முதுகு உபாதை காரணமாக இணைந்து கொள்ளவில்லை.

இரண்டாவது போட்டி சென்னையில் இடம்பெற்றதால் அவர் இணைந்து கொண்டிருக்க முடிந்திருக்கவில்லை.

இந்த நிலையில் தற்போது அவர் மும்பை இந்தியன்ஸ் அணியுடன் இணைந்துள்ளதாகவும், செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ள டெல்லி டெயாடெவில்ஸ் அணிக்கெதிரான போட்டியில் லசித் மலிங்க பங்குகொள்வார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காயம்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சகலதுறை வீரர் அல்ப மோர்க்கல் காயமடைந்துள்ளார். இதன் காரணமாக அவர் இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் பங்குபற்றுவது தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளது. ஆனால் அவர் இந்தியாவுக்கு வருகை தரவுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் உள்ளூர் 20/20 தொடரில் டைட்டன்ஸ் அணி சார்பாகப் பங்குபற்றிய அல்பி மோர்க்கல், பந்துவீசும் போது கணுக்காலில் காயமடைந்திருந்தார். அதன் காரணமாக மைதானத்தை விட்டும் வெளியேறியிருந்தார்.

இந்த நிலையில் ஏற்கனவே ஆரம்பித்துள்ள இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் அல்பி மோர்க்கல் பங்குபற்றுவது தொடர்பான சந்தேகம் காணப்படுகிறது. குறிப்பாக அவருக்கு இந்தக் கணுக்கால் உபாதை முன்பும் ஏற்பட்டிருந்த தன் காரணமாகவே இந்தச் சந்தேகம் வலுத்திருந்தது.

எனினும் கருத்துத் தெரிவித்துள்ள அல்பி மோர்க்கல், காயத்துக்கு நடுவிலும் தான் இந்தியாவை நோக்கிப் புறப்படவுள்ளதாகவும், தனது காயம் பெரியளவில் இல்லை என்பது மருத்துவ பரிசோதனைகளில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ், தனது முதலாவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி யிடம் தோல்வியடைந்திருந்தமை குறிப்படத்தக்கது.

சம்பியனானார் செரீனா

பேமிளி சர்கிள் கிண்ண டென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவில் உள்ள சார்லஸ்டன் நகரில் மகளிருக்கான டபிள்யு.டி.ஏ. பேமிளி சர்கிள் கிண்ண டென்னிஸ் தொடர் நடைபெற்றது.

இதன் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், செர்பியாவின் ஜான் கோவிச்சை எதிர்கொண்டார்.



இதன் முதல் செட்டைகோட்டை விட்டு, பின்னர் சுதாரித்த செரீனா 3:6, 6:0, 6:2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார்.

இரட்டையர் இறுதிச்சுற்றில் செக். குடியரசின் லூசி ஷபரோவா, பிரான்ஸின் கிறிஸ்டினா ஜோடி, அமெரிக்காவின் லீசெல், செக். குடியரசின் ஆண்டிரியா ஜோடியை 6:3, 7:6 என்ற செட் கணக்கில் வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை அபரித்தது.

துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே சென்னையின் தோல்விக்கு காரணம்

மும்பை அணிக்திரான போட்டியில் துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே தோல்விக்கு வித்திட்டது என்று சென்னை சூப்பர் கிங்ஸ் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் தெரிவித்தார்.

சென்னையில் நடந்த ஐ.பி.எல். லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியிடம் தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியில் சுரேஷ் ரெய்னா, ரவிந்திர ஜடேஜா, முரளி விஜய், டுவைன் பிராவோ, பத்ரிநாத் உள்ளிட்ட முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

இது குறித்து பயிற்சியாளர் பிளமிங் கூறுகையில், ஆறாவது ஐ.பி.எல். தொடரை தோல்வியுடன் தொடங்கியது வருத்தம் அளிக்கிறது. சேஸ் செய்ய களமிறங்கியபோது ஆடுகளம் துடுப்பாட்டம் செய்வதற்கு சாதகமாக இருந்தது.

மும்பை அணி நிர்ணயித்த இலக்கு எட்டக்கூடிய ஒன்றுதான். துடுப்பாட்ட வீரர்களின் அனுபவத்தை ஒப்பிடும்போது இந்தப் போட்டியில் இவர்கள் மோசமாக செயற்பட்டனர்.

தேவையற்ற பந்து அடித்து இலக்கை வீணாகப் பறிகொடுத்தனர். இது முதல் போட்டி என்பதால் தவறுகளை திருத்திக் கொள்ள வாய்ப்பு உள்ளது. அடுத்து வரும் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி எழுச்சி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

அணித்தலைவர் டோனியின் துடுப்பாட்டம் அருமையாக இருந்தது. தனிநபராகப் போராடிய இவருக்கு, சிறந்த இணையாட்டம் கிடைக்காததால், தோல்வியடைய வேண்டியதாயிற்று.

எங்கள் அணியின் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. முதல் பத்து பந்துப்பரிமாற்றங்களில் நானஸ், அன்கித் ராஜ்பூத், டுவைன் பிராவோ ஆகியோர் துல்லியமாகப் பந்து வீசினர்.

எங்கள் அணியில் இடம் பெற்றுள்ள தென்னாபிரிக்க வீரர்கள், விரைவில் அணியில் இணையவுள்ளனர். இவர்களது வருகைக்குப் பின், விளையாடும் லெவன் அணியில் மாற்றம் இருக்கும் என்றும் மும்பை அணிக்கெதிராகக் கண்ட தோல்விக்கு பந்துவீச்சைக் காரணமாகக் கூற முடியாது எனவும் கூறினார்.

முதல் முறையாக சென்னையில் உலக செஸ் சம்பியன்ஷிப்

சர்வதேச உலக செஸ் சம்பியன்ஷிப் தொடர் முதன்முறையாக தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் நடைபெறவுள்ளது.

உலக செஸ் கூட்டமைப்பு (எப்.ஐ.டி.இ.,) சார்பில் உலக செஸ் சம்பியன்ஷிப் தொடர் ஆண்டு தோறும் நடத்தப்படுகிறது. 2012இல் ரஷ்யாவில் நடந்த இத்தொடரில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சம்பியன் பட்டம் வென்றார்.

இந்தத் தொடரை நடத்த செஸ் கூட்டமைப்பு சார்பில் ஆண்டு தோறும் ஏலம் நடத்தப்படும். கடந்த ஆண்டு நடந்த ஏலத்தில் ரஷ்யா வென்று இத்தொடரை வெற்றிகரமாக நடத்தியது.

இந்த ஏலத்திற்குப் பின்னர், முதல்வர் ஜெயலலிதா செஸ் கூட்டமைப்பு தலைவர் கிர்சனை அழைத்துப் போட்டியை தமிழகத்தில் நடத்த கேட்டிருந்தார்.

இதை ஏற்று செஸ் கூட்டமைப்பு, இந்த ஆண்டு ஏலம் நடத்தாமல் போட்டியை தமிழகத்தில் நடத்த அனுமதி அளித்துள்ளது.

இதற்காக தமிழக அரசு 29 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளதாக சட்டசபையில் ஜெயலலிதா அறிவித்தார். இத்தொடர் வரும் நவம்பர் 6 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில், ஐந்துமுறை சம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த், நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சனை எதிர்கொள்கிறார்.

"கல்வி உலகின் சிகரம்"
ஞானோதய அக்கடமி
-சாவகச்சேரி- -கொடிகாமம்-
(இரு இடங்களிலும்)
A/L 2015
கலை, வர்த்தகப்பிரிவுகள்
ஆரம்பம்-12.04.2013 At 8 a.m (வெள்ளி)
-யாழ்.மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டல்-
"தென்மராட்சி மாணவர்களின் பல்கலைக்கழக கனவை நனவாக்கும் ஒரே நிறுவனம்"
Note-A/L Day Class சிறப்பாக நடைபெறுகிறது.
நிர்வாகம்.

25ஆவது வருட கல்விச் சேவையில்
புதிய நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ். நகர்
O/L DAY CLASS
ஆரம்பம்:- 10/04/2013 புதன் 8மணி
O/L DAY CLASSக்கு தனித்துவமான கல்வி நிறுவனம்
(8307(17.16.14)

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு மிகக் குறைந்த கட்டணத்தில் விசா ஆலோசனை வாரம்
07.04.2013 - 14.04.2013
* கனடாவில்
* அமெரிக்காவில் படிக்க, உழைக்க மிக மிகக் குறைந்த கட்டணத்தில் சட்டரீதியான விசா ஆலோசனை
* நியுசிலாந்து சென்று படிக்க IELTS தேவையில்லை அரைவாசிக் கட்டணச் சலுகை
(35812)(16.14.9)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090
(7 நாள்களும் காலை 8.00 - இரவு 8.00 மணிவரை திறந்திருக்கும்)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
★ கிராம சேவகர், கணக்காளர், வடமாகாண போட்டிப் பரீட்சைகளுக்கு
மன்னாரில்
N.L.H ஆஸ்பத்திரிச் சந்தி
புதன் 10.30மணி
தெல்லியடியில்
Sigma Solutionஇல்
வியாழன் 3மணி
கிளிநொச்சியில்
எடிசன் கல்லூரி
தொடர்பு:- 0754164564

வீடு வாடகைக்கு
போதிய அறைகள், குளியலறை மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு யாழ். மாநகர சபை எல்லைக்குள் வாடகைக்கு உண்டு. வங்கி, அரச உத்தியோகத்தர் குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 4528114

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
O/L DAY CLASS
புதிய பிரிவு
ஆரம்பம்
(12.04.2013) காலை 8.00 மணி
★ கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
★ O/L DAY CLASS நடைபெறும் ஒரே இடம்
★ முதல் அனுமதி பெறும் 100 மாணவர்களுக்கு மட்டுமே பிரிவு 1 இல் அனுமதி.

பணியாளர்கள் தேவை
வவுனியாவில் இயங்கும் சிம்பொன் நிறுவனத்துக்கு
01. கணக்குப் பதிவாளர் (A/L)
02. விற்பனைப் பணியாளர் தேவை.
இருபாலரும் விரும்பத்தக்கது.
தொடர்பு- 0777104559

மரண அறிவித்தல்

திருமதி பாக்கியம் கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியை)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை, நீலாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் கந்தையா நேற்றுமுன்தினம் (07.04.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா-அன்னமேரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசு கந்தையாவின் (அதிபர்) அன்பு மனைவியும் திரிகரன் (கனடா), திவாஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் பார்த்தீபன் (லண்டன்), பிரேமாசனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரிணி, விஷ்ணி, தாமிரன், கௌசிக், அமிர்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சிங்கராசா, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, இராசையா, இராசம்மா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான முருகையா, கண்மணியம்மா, நல்லம்மா மற்றும் சிவபாக்கியம், குணரத்தினம்(P.H.I), இராசம்மா, பார்வதியம்மா, பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நீலாவத்தையிலுள்ள குணரத்தினம் அவர்களின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (10.04.2013) புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று ஒப்பிலா ஓடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மைத்துனர் (குணரத்தினம்)
நீலாவத்தை, வித்தகபுரம்,
தெல்லிப்பழை.

தகவல்:
பிள்ளைகள்
(திரிகரன், திவாஜினி)

(35516)(8.8.16)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.